


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு நிறைவு மலர்

## 1911 - 2011

மெதடிஸ்த திருச்சபை

திருக்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலின் விபரம்...

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நூற்றாண்டு நிறைவு மலர் |
| வெளியீடு | : | மெதடிஸ்த திருச்சபை, திருக்கோவில் |
| பதிப்பு | : | 24-07-2011 |
| பக்கங்கள் | : | 108 |
| நூல் ஆசிரியர் | : | A. D. ஜேம்ஸ் |
| அட்டைப்படம் | : | LOYAL PRINTERS |
| கணினி | : | T. E. வினோதீபா<br>S. நிரோசன் |
| அச்சுப்பதிப்பு | : | LOYAL PRINTERS |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் பழைய, புதிய தோற்றம்...



1955ம் ஆண்டிற்கு முன்பிருந்த தோற்றம்



1955ம் ஆண்டிற்கு பிந்திய தோற்றம்



ஆலயத்தின் புதிய தோற்றம் - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க் குழுவின் புகைப்படமும் பெயர் விபரமும்...



இடமிருந்து வலம்...

இருப்பவர்கள் : திரு M கந்தப்பன், திரு A. D. ஜேம்ஸ்
அருள்திரு S. ரவி முருகுப்பிள்ளை,
திரு மலர்ராஜன், திரு S நிரோஜன்

நிற்பவர்கள் : திருமதி பிரபாவதி தவநேசன்,
திருமதி ஜெயவிழி முருகுப்பிள்ளை,
திருமதி சுகந்தராணி டட்லி சுகமார்
செல்வி . T எஸ்தர் வினோதீபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின்
# இதயத்திலிருந்து....

அன்பு நெஞ்சங்களுக்கு,

இயேசுக் கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையின் நூற்றாண்டு நிறைவு மலருக்கூடாய் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். "*அறுவடையை நோக்கி ........*" என்கிற தொனிப் பொருளோடு எமது நூற்றாண்டு நிறைவு நிகழ்வுகள் திட்டமிடப்பட்டன.

திட்டங்களைத் தருபவரும் அதனை நேர்த்தியாய் செய்து முடிக்க கிருபை தந்து வழிநடத்தி மகிழ்பவருமான நமதாண்டவர் இந்த நூற்றாண்டு நிறைவு சிறப்பு மலரை வெளியிட எமக்கு வேண்டிய சகல வழிகளையும் திறந்து தந்தார்.

"கர்த்தரிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள், கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்யுங்கள"

என வில்லியம் கேரி சொன்னது போல திருச்சபை சார்ந்தும், சகோதர திருச்சபைகளின் மத்தியிலும், சமூகத்தோடும் இணைந்து நூற்றாண்டு நிறைவு நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. அந்நிகழ்வுகளின் பதிவுகள் ஒவ்வொன்றும் இதழ் விரித்து மலர்ந்துள்ளன. வரலாற்றுப் பதிவுகள் ஒவ்வொன்றையும் இயன்றவரை தொகுத்துள்ளோம். நூற்றாண்டு நிறைவு மலரில் இடம் பெறவேண்டிய பல விடயங்கள், பலரின் ஆலோசனைகளோடு தொகுக்கப்பட்டு மலரில் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் சில விடயங்கள் இடம்பெறாமல் இருக்கலாம். அவற்றை பெரு மனதோடு மன்னித்து இம்மலரை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

*பிரியமுடன்*

இதழாசிரியர்

(A.D.ஜேம்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் இதழ்கள்...


| | பக்கங்கள் |
|---|---|
| ஆசிச் செய்திகள் | 7 - 13 |
| வாழ்த்துச் செய்திகள் | 14 - 23 |
| இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் தோற்றம் | 24 - 25 |
| நூற்றாண்டு நிறைவில் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தனது வரலாற்றை மீட்டிப் பார்க்கின்றது. | 26 - 29 |
| திருக்கோவில் திருச்சபையில் வரலாறு கண்ட திருப்பணியாளர்கள் | 30 |
| தற்போது பணியாற்றும் குருவானவரின் உள்ளத்திலிருந்து | 31 |
| திருக்கோவிலில் திருப்பணியாளர்கள் ஆற்றிய ஊழியத்திலிருந்து | 32 - 38 |
| உக்கிராணத்துவம் வகித்தவர்கள் | 39 |
| அமரர் ரூபன் அரியநாயகம் ஆற்றிய பணிகளின் நினைவுக் குறிப்பு | 40 - 42 |
| ஆதன உக்கிராணக்காரரிடமிருந்து | 43 |
| திருச்சபையும் தூதுப்பணியும் | 44 - 45 |
| சமுதாயத்தை நோக்கி | 46 - 47 |
| திருச்சபையும் பெண்களும் | 48 - 49 |
| திருச்சபையில் வாலிபரின் பணி | 50 |
| திருச்சபையில் ஆண்களின் செயற்பாடு | 51 |
| ஞாயிறு பாடசாலையின் செயற்பாடு | 52 |
| மிசனரிமார் உருவாக்கிய பாடசாலை அதிபரின் உள்ளத்திலிருந்து | 53 - 54 |
| சமுதாயத்தின் பார்வையிலிருந்து | 55 |
| திருக்கோவில் புத்திரர்களின் உள்ளத்திலிருந்து | 56 - 62 |
| நூற்றாண்டு நிகழ்வுகளில் இருந்து | 63 - 79 |
| பொங்கும் பொலிவோடு பூத்துக் குலுங்கும் நூற்றாண்டு | 80 - 81 |
| திருச்சபையின் அங்கத்தவர்கள் | 82 - 91 |
| சிலுவையின் நிழலில் நான் | 92 |
| எமது நாளாந்த வாழ்வில் ஜெபம் | 93 |
| மூத்த உறுப்பினர்களோடு ஓர் நேர்காணல் | 94 - 95 |
| துதி இரகசியங்கள் | 96 |
| அறுவடையை நோக்கிய நிகழ்வுகளில் இருந்து | 97 - 98 |
| மூன்றரை ஆண்டுகள் | 99 - 100 |
| இயேசுவும் நானும் | 101 |
| நம்பிக்கையும் வாழ்வும் | 102 |
| மனிதம் வளர்கிறது. | 103 - 106 |
| யுக யுகங்களுக்கு நீரே தேவன் | 107 |
| நன்றி கூறுகின்றோம் | 108 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமுதாயப் பாதையில் சென்று இளைஞர், யுவதிகளை ஆன்மீகப் பணிக்குள் ஈர்த்து இழுக்கும் பணியை சிறப்பாக மேற்கொள்ளும் திருக்கோவில் சேகர முகாமைக்குரு அருள் திரு. S. ரவி முருகுப்பிள்ளை அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி**



திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையானது உலகமெல்லாம் வியாபித்து நிற்கும் கிறிஸ்தவத்தின் பெருமையை தென் கிழக்கிலும் பறைசாற்றுகிறது. இதை எண்ணிப் பார்க்கும் போது என் உள்ளம் பூரிப்படைகின்றது. இவ்வேளையில் இத் திருச்சபையோடு சேர்ந்து இறைபணி ஆற்றுவதற்கும் ஆசியை வழங்குவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு என் ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுக் கிறிஸ்துவிற்கு நன்றியைச் செலுத்துகின்றேன். திருப்பணி என்பது வெறுமனே தனி மனிதனின் செயற்பாடு அல்ல. மாறாக அது இறைவனோடு இணைந்து செய்யும் புனித பணி. அந்த வகையில் ஆரம்ப காலத்திலே கடல் கடந்த தேசத்திலே இருந்து எமது மண்ணுக்கு காலடி எடுத்து வைத்த மிஷனரிகளின் அயராத உழைப்பு இன்றும் கூட வீறுநடை போடுகிறது. இதை எண்ணிப் பார்த்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் மகிழ்ச்சியான நேரம் இது. எமது திருச்சபை சமூகமானது விசுவாச பயணத்திலும் அமைதியின் வழியிலும் சென்று இந் நூறாவது அகவையை கண்டிருப்பது வரலாற்றில் முத்திரை பதிக்கப்பட வேண்டிய சிறப்பான காலம்.

இறைவனின் பணியை வெறுமனே எமது ஆலய வளாகத்திற்குள்ளே கட்டுப்படுத்தாது சமூகத்திற்குள்ளே சென்று கல்வி, சுகாதாரம், ஆன்மீகம் இவைகளை முன்னெடுத்து சமய, சமூக ரீதியிலேயும் சிறப்பான இடத்தை அன்றிலிருந்து இன்றுவரை தக்க வைத்துள்ளது என்றால் அது ஒரு சிறப்பான பொற்காலம் என்றே கூறவேண்டும். உயிருள்ள திருச்சபைக்கு உரமூட்ட வேண்டியவர்கள் எப்போது திருச்சபைக்கூடாக சமூதாயத்தின் நோக்கு என்ற நிலைக்குள் சென்று பணியாற்றுகிறார்களோ அங்கே இறையரசை நோக்கிய பயணம் வெற்றி நடை போட ஆரம்பிக்கின்றது. அதனை அன்றிலிருந்து இன்றுவரை எமது சமூகம் செய்கிறதை நினைத்து ஆண்டவருக்குள் அகமகிழ்கின்றேன். "மெய்யாகவே கர்த்தர இந்த ஸ்தலத்திலே இருக்கிறார்" ஆதி 28:16 என்ற வார்த்தையைப் போன்று இந்நூற்றாண்டு விழாவைக் காணுவதற்கு இவ்வளவு காலமும் பணியாற்றிய மிஷனரிகள், குருவானவர்கள், ஊழியர்கள், உக்கிராணக்காரர்கள், வழிகாட்டிகள், ஆண்கள் சங்கத்தினர், பெண்கள் சங்கத்தினர், வாலிபசங்கத்தினர், ஞாயிறு பாடசாலை மாணவர்கள், சபை மக்கள் அனைவரையும் தனித்தனியாக தூய மனதோடு ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

இத்திருச்சபையானது பல சாட்சியுள்ள ஜீவன்களை பன் மடங்கு பெருக்கி சான்று பகரும் இவ்வேளையில் மென்மேலும் ஆன்மீகப் பணிகளும், சமூகப்பணிகளும் சுடர்விட்டு ஒளிர இயேசுவின் துணைவேண்டி ஆசிப்பதோடு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இத்திருச்சபையின் மக்களையும், வெளிநாட்டில் உள்ள எமது சகோதரர்களையும் இறைவனின் ஆசியோடு வாழ்த்துகிறேன்.

பாரிருளை நீக்கி
பாவிகளைக் காக்க வந்த
பரிசுத்த தெய்வத்தின் பேரருளால்
திருக்கோவிலில் ஏற்றி வைத்த
தீபமொன்று எரிந்து ஆண்டுகள்
நூறை கடந்தாலும் தொடர்ந்தும் ஒளிர
உழைப்போம், உயர்ந்திடுவோம், உவகையடைந்திடுவோம்.

இவ்விழாவை கொண்டாடும் யாவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் ஆசியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இறையாசி உங்கள் அனைவரோடும் என்றென்றும் நிறைவாய்த் தங்கியிருப்பதாக.

இறைபணியில
அருள்திரு .S. ரவி முருகுபிள்ளை
சேகர முகாமைக்குரு,
திருக்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகத் துறையில் அதிக அக்கறை காட்டிய மெதடிஸ்த திருப்பேரவைத் தலைவர் **அருள் கலாநிதி A.W ஜெபநேசன்** அவர்கள் வழங்கிய **ஆசிச்செய்தி.**



திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை மக்களிடையே தனது பணியைச் செய்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு எனது ஆசிச் செய்தியினை வழங்குவதில் மனம் மகிழ்கின்றேன்.

திருச்சபை தனது கடமை உணர்வினை விருத்தி செய்வது கூடியளவு தனது சொந்த சந்தோஷங்களுக்காக அன்றி கடமைக்காக கட்டுப்படுதல் தேவையானதாகும். உங்கள் மனம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நீங்கள் கடமைக்கு குறித்த நேரத்தில் பிரசன்னமாவதும், உங்களது வேலையை அது உங்களுக்கு உகந்ததாக இல்லாமல் இருந்தபொழுதும் அதை நீங்கள் செய்வதும், நீங்கள் மிகவும் களைப்படைந்து இருக்கின்றபொழுதும் சிறப்பாக கடமையாற்றுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். வாழ்க்கை என்பது முழுமையாக வேடிக்கையும், விளையாட்டுமல்ல. சிற்சில சந்தர்ப்பங்களில் எல்லோருடைய உற்சாகமும் அற்றுப் போய்விடும். அப்படி அல்லாது உண்மையான பண்பாளரது பண்பட்ட வளர்ச்சி, ஆர்வம் குன்றிய பொழுதும் தொடர்ந்தும் கடமை உணர்வுடன் கட்டுப்பட்டு திறமையாக பணி செய்வதாகும். நீங்கள் ஆலயத்திற்கு வருகின்றீர்கள், ஒவ்வொரு நாளும் ஜெபித்து பிரார்த்தனை செய்கிறீர்கள், அப்படிச் செய்யத் தூண்டுவது உங்களது விருப்பத்திற்குரிய உணர்வு மட்டுமல்ல, அது கிறிஸ்தவர்களாகிய உங்களின் கடமையுமாகும். கிறிஸ்து சிலுவையை ஏற்றுக் கொண்டது தனக்காக அல்ல, மாறாக நமது பாவங்களில் இருந்து எம்மை மீட்டு விடுதலையைக் கொடுத்து பரலோகில் எமக்காக ஒரு இடத்தை ஆயத்தம் செய்வதற்காகவே ஆகும். அதனை அவர் அறிந்திருந்த படியால் எனக்காகவும், உங்களுக்காகவும் தாங்கமுடியாத வேதனையையும், துயரையும் தான் அனுபவித்து தனது ஜீவனைக் கொடுத்து அதனை நிறைவேற்றினார்.

திருச்சபை நூற்றாண்டு நிறைவு விழாக்களுடன் முடிவடைந்து விடுவதில்லை. இவ்விழாவின் மூலம் மீண்டும் புத்தூக்கமும், ஆர்வமும், உற்சாகமும் பெற்று அர்ப்பணிப்புடன் மென்மேலும் முன்னேறிச் செல்வதற்காக கொண்டாடப்படும் விழாவாக இருக்கவேண்டும். இலங்கையில் இருக்கும் மெதடிஸ்த திருச்சபைகளில் உயிரோட்டமுடன் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் திருச்சபைகளில் திருக்கோவில் திருச்சபையும் ஒன்றாகும். ஆகவே, இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் சந்தோசமடைகின்றேன்.

திருக்கோவில் திருச்சபை வழிபாடுகளிலும், ஜெபிப்பதிலும் மட்டுமன்றி சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

திருக்கோவில் திருச்சபை அதனுடைய நற்பணிகளையும், சேவைகளையும் எதிர்காலத்திலும் திறமையாகவும், நன்றாகவும் செயற்படுத்துவதற்கு எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் மிகவும் மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

அருள்கலாநிதி. **A.W.** ஜெபநேசன்
திருப்பேரவைத் தலைவர்
இலங்கை மெதடிஸ்த திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்த்தரின் செய்தியை கருத்துடன் கூறும் எங்கள் மண்ணின் மைந்தன் திருப்பேரவைச் செயலாளர் **அருள்திரு S.J. கதிரேசப்பிள்ளை அவர்கள்** வழங்கிய **ஆசிச் செய்தி**



திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை நூற்றாண்டு விழா சிறப்பு மலரில் செய்தி தரும்படி என்னை கேட்டுக்கொண்ட சபை முகாமைக்குரு, மற்றும் சபை வழிகாட்டிகள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றிகள்

நூற்றாண்டு காலம் ஒரு சிறிய காலம் அல்ல. இம்மட்டும் திருக்கோவில் சபை அளப்பரிய பணியை ஆற்றியுள்ளது. இவையெல்லாவற்றையும் திரும்பிப் பார்க்கும் போது நாம் அனைவரும் கடவுளுக்கு நன்றி செலுத்துவது மிகையாகாது. இம்மட்டுமாய் கடவுள் கிருபை இச் சபையை வழிநடத்தியுள்ளது. நானும் திருப்பணிக்கு என்னை அர்ப்பணித்தது திருக்கோவில் சேகரத்தினூடாகவேயாகும்.

கிழக்கு மாகாணத்தில் மிஷனரிமார் பணி பற்றிய சரித்திரம் கூறும் உண்மை என்னவெனில் '**திருக்கோவில் சபை**' ஸ்தாபிக்கப்பட்டதின் பிரதிபலன் அப்பகுதியின் தூதுப்பணிக்கு மிகவும் பிரயோசனமாய் அமைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே நமது நூற்றாண்டுக் கொண்டாட்டம் வெறும் விழாவாக மட்டும் அமைந்துவிடாமல், இத்தருணத்தில் நாம் மெதடிஸ்த்தர்களாய் ஒரு அர்ப்பண உணர்வுடன் உறுதிபூண்டு பணியாற்றுவோம்.

விழாவை நடாத்த உதவி புரியும் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். இன்னும் இறைபணி புரிய இளம் சமுதாயத்தினர், சிறப்பாக தங்களை அர்ப்பணம் செய்ய உறுதி பூணவேண்டுமென ஆசிகூறி முடிக்கிறேன்.

அனைவருக்கும் அன்பும், இறை ஆசியும் கூறுகிறேன்.

**அருள்திரு S.J. கதிரேசப்பிள்ளை**
**திருப்பேரவைச் செயலாளர்**
**இலங்கை மெதடிஸ்த திருச்சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெபத்தின் மூலம் பல தத்துவங்களை உறுதிப்படுத்திய வடக்கு-கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் **அருள்திரு S. D. தயாசீலன் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி**



ஆண்டவர் தம் முதல் சீடரிடம் என் பின்னே வாருங்கள் என்று அழைப்பு விடுத்ததைப் போன்று காலத்துக்குக் காலம் தம் நோக்கத்தை நிறைவேற்ற மனிதரைப் பிடிக்கும் பணிக்கென மனிதரை அழைத்தும், பாவித்தும் வருகிறார். இந்த வகையில் யோசுவா செட்டியாரை ஆண்டவர் அழைத்துப் பாவித்ததன் பிரதிபலிப்பே திருக்கோவில் சபையாகும்.

தொடர்ந்தும் பலரை சீடராக்கிய ஆண்டவர், எப்படிப்பட்ட எதிர்ப்புகளை பொறுமையோடு தாங்கி விசுவாசத்தில் உறுதிப்பட தம் சீடரைப் பலப்படுத்தினார். கிறிஸ்துவின் மீது அவர்கள் கொண்டிருந்த அசையாத, ஆழமான, உறுதியான பற்றுறுதியின் நிமித்தமாக வீடுகள், நெல் வயல்கள், உடைமைகள் அனைத்தும் எரிக்கப்பட்ட போதிலும் உயிர்த்த ஆண்டவரில் அவர்கள் கொண்டிருந்த உயிருள்ள விசுவாசம் அவர்களை உறுதியோடு சாட்சிபகரச் செய்தது. இவ்விதம் பாடுகள், வேதனைகளை உரமாக்கி, துளிர் விட்டு வளர்ந்த இத் திருச்சபையின் வளர்ச்சியில் பங்காளிகளாகும்படி ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் அழைத்துள்ளார்.

இத் திருச்சபை, திருக்கோவில் வாழ் மெதடிஸ்தருக்கு மட்டும் சொந்தமானது என்று இல்லாமல் திருக்கோவில் வாழ் மக்கள் இது எமது வேதக்கோவில் என்று சொல்லத்தக்க வகையில் மத நல்லுறவைப் பேணி வருவது ஓர் சிறப்பு அம்சம் ஆகும். திருச்சபை ஆற்றி வரும் சமுதாயப் பணி வெறுமனே கிறிஸ்தவருக்குள் மட்டும் உள்ளடங்கிய சுயநலம் சார்ந்த ஒன்றாக இராமல் அனைத்து மக்களையும் உள் வாங்கி திருப் பணியை நிறைவேற்றி வருகின்றமை பாராட்டுக்குரியது.

திருக்கோவில் தேவாலயம் அமைக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவடைந்திருப்பினும் உயிருள்ள கற்களைக் கொண்டு ஆண்டவர் தமது திருச்சபையை நூற்றிமுப்பத்தியாறு ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கி விட்டார்.

எனவே கடந்து வந்த ஆண்டுகளைப் பின் நோக்கிப் பார்க்கையில் அயராது அர்ப்பணிப்போடும், தியாகத்தோடும் ஆண்டவரின் திருப்பணியில் ஈடுபட்ட திருப்பணியாளர்கள், நற்செய்தியாளர்கள், உக்கிராணக்காரர்கள், வழிகாட்டிகள், அருளுரைஞர்கள், திருச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் நினைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துவதோடு நாமும் அவர்களின் சிறப்பான உக்கிராணத்துவத்திற்குச் சாட்சி பகர்வோமாக.

**இறைபணியில,**
**அருள்திரு . S.D. தயாசீலன்**
**வடக்கு— கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர்**
**இலங்கை மெதடிஸ்த திருச்சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிறிஸ்தவ பணியில் பெண்களுக்கான பங்குகளை வெளிப்படுத்திக் காட்டிய வடக்கு-கிழக்கு திருமாவட்ட அவைச் செயலாளர் அருள்செல்வி . ஜோதினி சீனித்தம்பி அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி**

**கிறிஸ்து இயேசுவின் திருநாமத்தில் நல்வாழ்த்துக்கள்!**

நூற்றாண்டு காணுகின்ற பெரும்பேறினைப் பெற்றிட்ட திருக்கோவில் திருச்சபையினரை உளமார வாழ்த்துவதிலே அகமகிழ்வு கொள்ளுகிறேன்.

வரலாற்றிலே நூறு ஆண்டுகளைச் சந்திப்பது என்பது ஒரு சுலபமான காரியமல்ல. அது வருடங்கள் நூறினை கடந்து வந்து விட்டோம் என்ற வெற்றிப் பெருமிதம். ஆனால் அது நம்மால் ஆனதல்ல அது ஆண்டவர் எமக்கு அளித்திட்ட மிகப்பெரும் பரிசு. நூறு ஆண்டுகளில் இந்த திருச்சபைக் குழந்தை தவண்டு, தத்தித் தத்தி நடந்து நிமிர்ந்து நிற்கிறது. அவ்விதம் ஆண்டு நூறினைச் சந்திக்கும் அரிய வாய்ப்பினைப் பெற்றிட்ட திருக்கோவில் திருச்சபையினருக்காக ஆண்டவரை நன்றி நிறைந்த உள்ளத்துடனே துதிக்கிறேன். வரலாற்றினைத் திரும்பிப் பார்க்கும் போது நம் கர்த்தர் நம்முடனே கூட இருந்து நடத்தி வந்த பாதையின் தடங்களான பள்ளங்கள், மேடுகள், வரட்சி, வெள்ளம், புயல் என கலங்கி நின்ற வேளையிலெல்லாம் கர்த்தர் கரம் கூடவே இருந்ததை மறந்து போகாதிருப்போம்.

இம்மானுவேலராய் எம்மிடம் வந்த அண்ணலாம் இயேசு என்றும் எம்மோடு இணைந்திருக்கிறார். சதா காலங்களிலும் உங்களுடன் கூடவே இருக்கிறேன் என்றவர் வாக்கு மாறாதவர். என் பின்னே வாருங்கள் என்றவரைப் பின்பற்றுவோம். மனுக்குல ஈடேற்றத்துக்காய் தன்னையே தியாக பலியாகத் தந்த அவரையே உலகிற்கு பறைசாற்றுவோம். தூய பவுல் கூறியபடி நற்செய்தி அறிவியாதிருந்தால் எனக்கு ஐயோ என்பதற்கிணங்க நற்செய்தியை விரைந்து நன்குரைப்போம்.

**இறை மைந்தன் இயேசு என்றும் கூட இருந்து நடாத்துவாராக.**

இறைபணியில்
அருள் செல்வி . ஜோதினி சீனித்தம்பி
வடக்கு– கிழக்கு திருமாவட்ட அவைச் செயலாளர்
இலங்கை மெதடிஸ்த திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதியாக ஆன்மீகப் பணியை நிலைநிறுத்திக் காட்டிய அக்கரைப்பற்று சபைக் குரு **அருள்திரு R.அன்பழகன்** அவர்கள் வழங்கிய **ஆசிச்செய்தி**



"கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்ன போது மகிழ்ச்சியாயிருந்தேன்;"

*(சங்கீதம் 122:1)*

சங்கீதத்தில் காணப்படும் மேற்படி வார்த்தையை வாசிக்கும் போது என்னுடைய உள்ளம் புளகாங்கிதம் அடைகிறது. சிறப்பாக திருக்கோவில் திருச்சபை தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளை எல்லாம் வல்ல கடவுள் தனது பாத்திரங்களாகப் பயன்படுத்திய குருமார்கள், ஊழியக்காரர்கள், உக்கிராணக்காரர்கள், வழிகாட்டிகள், திருச்சபை மக்கள் அனைவரையும் நினைந்து அவருக்கு நன்றி செலுத்துகின்றேன்.

இந்த நூறு ஆண்டுகளில் திருச்சபையானது திருச்சபை வட்டத்திற்குள்ளே மாத்திரம் அல்லாது எமது சமூகத்திற்குள்ளும் பணிபுரிந்துள்ளது என்பதை எண்ணிப்பார்க்கும் போது எனது உள்ளம் பேருவகை அடைகின்றது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையும், திருக்கோவில் சபை மக்களும் இந்த நூற்றாண்டு விழாவையொட்டி மகிழ்வுறும் இத்தருணத்தில், எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளை அக்கரைப்பற்று திருச்சபையின் குருவானவராக இருப்பதையிட்டும் நான் பேரானந்தம் அடைகின்றேன்.

பிதா, குமாரன், தூய ஆவி ஆகிய திரியேக கடவுளின் ஆசீர்வாதம் என்றும் இந்த திருச்சபையுடன் கூட இருந்து இன்னும் பல நூற்றாண்டுகளைக் கடந்து வர வல்லமையாய் வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக.

**இறைபணியில்**
**அருட்திரு. இராசதுரை அன்பழகன்**
**மெதடிஸ்த திருச்சபை**
**அக்கரைப்பற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளமைப் பருவத்திலே இயேசுக் கிறிஸ்துவின் பணிதனை உற்சாகத்துடன் வெளிப்படுத்தும் சின்னமுகத்துவார சபைக் குரு அருள்திரு. S.றொபட் சசிகரன் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி**



இலங்கை மெதடிஸ்த திருச்சபையின், திருக்கோவில் திருச்சபை தனது திருப்பணியில் நூற்றுமுப்பத்தாறு ஆண்டுகளைக் கடந்தும், இவ்வாலயத்தின் நூற்றாண்டு கண்டு நிற்கும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அகமகிழ்கிறேன். 2011 ம் ஆண்டு திருக்கோவில் மக்களின் வாழ்வில் பெருவிழா காணும் ஆண்டாக மிளிர்கின்றது. நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் இத்திருச்சபை மக்களோடு சேகர திருப்பணியில் நானும் இவ்வருடம் இணைந்ததை நினைத்து பெருமிதம் அடைவதோடு இறைவனுக்கு நன்றியையும் செலுத்துகின்றேன்.

நூற்றாண்டு விழா காணும்போது திருச்சபையின் வளர்ச்சிப் பாதையில் அன்று தொடக்கம் இன்றுவரை திருப்பணியில் கரம் கோர்த்து உழைத்த திருப்பணியாளர்கள், இறைமக்கள் என்றும் நினைவு கூறப்படவேண்டியவர்கள். அவர்களின் அர்ப்பணிப்பின் வாழ்வு எமக்கு வழிகாட்டியாய் நிற்கின்றது. திருச்சபையின் திருப்பயணத்தில் ஆன்மீகம், சமூக உறவு இரண்டும் ஒன்றாக செல்லவேண்டும். அந்தவகையில் திருக்கோவில் திருச்சபை இரண்டையும் இணைத்து பயணித்திருப்பது இறைவனுக்குள் நாம் அடையும் மகிழ்ச்சியேயாகும்.

"என் கடவுளே! உமது பீடங்களில் அடைக்கலான் குருவிக்கு வீடு கிடைத்துள்ளது, தங்கள் குஞ்சுகளை வைத்திருப்பதற்கு சிட்டுக் குருவிகளுக்கும் கூடும் கிடைத்துள்ளது." நூறாவது அகவைக்குள் காலடி வைத்திருக்கும் திருக்கோவில் சபை மக்களை வாழ்த்துவதோடு இவ்வாலயம் அனைத்துலகோர் வந்து வழிபடும் ஆலயமாக மிளிர்வதோடு இறைவனின் பேரருளால் இன்னும் பல நூறாண்டுகளை காண வேண்டுமென ஆசித்து நிற்கிறேன்.

**இறைபணியில்,**
**அருள்திரு த.றொபட் சசிகரன்**
**சேகர குரு,**
**சின்னமுகத்துவாரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோவில் சேகரத்தின் ஆரம்ப கிறிஸ்தவ வழிபாட்டு வரலாற்றில் பணியினைத் தொடங்கி இற்றைவரைக்கும் மிகச் சிறப்பாக பணி புரிகின்ற திருக்கோவில் சேகரத்தின் ஓய்வு பெற்ற ஊழியக்காரர் **செல்வி. ஜீவமலர் கனகரெத்தினம்** அவர்கள் வழங்கிய



## வாழ்த்துச் செய்தி

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தனது நூறாவது ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாடும் நோக்கத்தோடு பிரசுரிக்கப்படும் நூற்றாண்டு நிறைவு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையின் தென்கோடியிலே மட்டக்களப்பில் இருந்து 66கல் தொலைவில் அமைந்திருக்கும் அழகிய கிராமமே திருக்கோவிலாகும். இதன் கிழக்கே வங்கக்கடலலைகள் தரையைத்தொட்டு முத்தமிட்டு நிற்கும், மேற்கே உயர்ந்த மலைத்தொடர் விண்ணை முட்டி நிற்கும், இவற்றின் இடையே காடும் காடு சார்ந்த முல்லை நிலமும் அரணமைத்து நிற்கும், அவற்றின் இடையே வயலும் வயல் சார்ந்த இடமும், அரசோச்சும் தென்னை இளம் கீற்றுக்களின் ஊடாக தென்றல் காற்று மெல்லென வருடிச்செல்லும், யாருக்குமே தலை வணங்காத் தலைவனென நிமிர்ந்து நிற்கும் திருக்கோவில் கிராமத்தின் இயற்கை வனப்புச் சொல்லும் திறத்தன்று.

இக் கிராமத்தில் 1874ல் மிஷனரிமார் பணியை ஆரம்பித்தனர். இவர்களது வரவில் கல்வி சமுக பொருளதார மாற்றங்கள் இப்பகுதியில் ஏற்பட்டது. இறைபணியாளர்கள் நற்செய்தியை அறிவிப்பதற்காகவும் சமூக விழுமியங்களுக்காகவும் அதன் முன்னேற்றத்துக்காகவும் முற்றாக தம்மை அர்ப்பணித்து சுவிஷேச பணியையும் கல்விப்பணியையும் முன்னெடுத்தனர். இதன் பயனாக 1877ல் கஷ்டமான சூழ்நிலையில் ஒரு பெண்களுக்கான பாடசாலை தம்பிலுவில் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் திருக்கோவில் கிராமத்தில் ஆண்களுக்கான பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலைகளே மக்களின் வணக்கத்தலமாக உபயோகிக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று வந்துள்ளது. 1911ம் ஆண்டு திருக்கோவிலில் தனியான வழிபாட்டுத்தலம் அமைக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று வந்துள்ளது. ஆண்டவரின் திருத்தொண்டிற்காக தம்மை முற்றாக அர்ப்பணித்த ஆங்கிலேய பாதிரிமார் முதல் விதைத்த விதை மொட்டாய் மலர்ந்து பூவாகி, காயாகிக் கனிந்து பயன் தருவது போல் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையும் அனேக விசுவாச குடும்பங்களையும் உருவாக்கி நன்கு வளர்ந்து, விளைந்து, நிலைத்து நிற்கின்றது. காலங்களுக்கூடாக இறைபணியாளர்கள் கண்ட தரிசனம் நிறைவேறியுள்ளது. நூற்றாண்டு காணும் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை கடந்த காலங்களுக்கூடாக இச் சபையில் இறைபணியாற்றிய அத்தனை இறைபணியாளர்களையும் நினைத்துப்பார்த்து ஆண்டவருக்கு நன்றி கூற கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் .

மேலும் இப்பணியாளர்களின் பணிக்கூடாக இத்திருச்சபையில் பல குருமார்கள், ஊழியர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், பல விசுவாசக் குடும்பங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறினால் மிகையாகாது. நூற்றாண்டு காணும் இக் காலகட்டத்தில் சபை வளர்ந்து பெருகி வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். புதிய விசுவாசக்குடும்பங்கள் சபைக்குள் உள்வாங்கப்பட்டு, வளர்க்கப்படுவதையிட்டு கர்த்தருக்கு நன்றி கூறுகின்றேன். எதிர்காலத்திலும் ஆண்டவரின் திரு நோக்கம் திருப்பணிக்கூடாக நிறைவேற்றப்படவும் அனேகர் ஆண்டவரை அறிந்து கொள்ளவும் சிறப்பான பணி தொடர ஆண்டவரின் அன்பும் அருளும் கிடைக்க நன்மையும் கிருபையும் தொடர வாழ்த்துகின்றேன்.

**இளைப்பாறிய ஊழியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் சேகர உக்கிராணக்காரர் **திரு. A . D . ஜேம்ஸ்** அவர்கள் வழங்கிய **வாழ்த்துச் செய்தி**



இலங்கையின் தென்கிழக்கில் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்திலுள்ள திருக்கோவிலில் அமைந்துள்ள மெதடிஸ்த ஆலயத்தின் நூற்றாண்டு நிறைவைக் காணக் கிருபை கூர்ந்த கிறிஸ்து இயேசுவுக்கு நன்றி நிறைந்த உள்ளத்தோடு துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் செலுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருக்கோவில் மெதடிஸ்த ஆலயத்தின் நூற்றாண்டு நிறைவிலே கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து, இம் மண்ணிலே திருப்பணியை ஆரம்பித்த மிசனரிமார்களையும், அதனைத் தொடர்ந்து சிறப்பாக திருப்பணியாற்றிய, திருப்பணியாற்றிக் கொண்டிருக்கிற திருப்பணியாளர்களையும், ஊழியர்களையும், உக்கிராணக்காரர்களையும், வழிகாட்டிகள், திருச்சபை மக்கள் ஒவ்வொருவரையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றேன்.

கடந்த மூன்று தசாப்த காலங்களில் இப்பகுதியில் நிலவிய இன விடுதலைப் போராட்டத்தின் போது ஏற்பட்ட அழிவுகளின் போதும், இயற்கை அனர்த்தங்களின் போதும், இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரங்களை மீளக் கட்டி எழுப்புவதற்கு பொருளாதார உதவிகளை மனித நேயத்தோடு நல்கி சிறப்பாக சமூக சேவைகளை மேற்கொண்டு திருக்கோவில் பிரதேச மக்களின் உள்ளங்களில் மெதடிஸ்த திருச்சபை உன்னதமான இடத்தைப் பிடித்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

மனிதர்களை நல்வழிப்படுத்தி மெய் வாழ்வைக் காண ஆன்மீகப் பணிகளையும், மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்புகின்ற சமூகப் பணிகளையும் ஒருங்கிணைத்து திருக்கோவில் மண்ணிலே சிறப்பாகப் பணியாற்றி நூற்றாண்டு நிறைவைக் காணுகின்ற திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையை வாழ்த்தி ஆண்டவருக்கு நன்றி செலுத்துகின்றேன்.

**திரு . A . D. ஜேம்ஸ்**
**சேகர உக்கிராணக்காரர் (நிதி)**
**மெதடிஸ்த திருச்சபை**
**திருக்கோவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைகளின் ஏற்றத் தாழ்வுகளுக்கேற்ப நிர்வாகக் கடமைகளைப் பகிர்ந்து மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டும் திருக்கோவில் சபை உக்கிராணக்காரர் **திருமதி . L . மலர்ராஜன அவர்கள் வழங்கிய**

**வாழ்த்துச் செய்தி**



திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் சபை உக்கிராணக்காரரான நான் ஆண்டவருக்குள் பேருவகையடைகின்றேன்.

எமது திருக்கோவில் ஆலயமானது மிஷனரிமாரின் வருகையினாலே 1911 இல் அமைக்கப்பட்டது. இவ் ஆலயம் ஆண்டவரின் வழிநடத்தலோடும், திருச்சபையின் இறைபணியாளர்கள், ஊழியர்கள், சபை வழிகாட்டிகள், திருச்சபை மக்கள் என்போரின் விசுவாசத்தினாலும், ஜெபத்தினாலும், திடமான உழைப்பினாலும் புதிதாக அமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சி கொடுக்கிறது.

எமது ஆலயமானது கிறிஸ்துவின் அன்பினாலும், கிருபையினாலும் 99 வருடங்களைக் கடந்து 100வது ஆண்டைக் காணச் செய்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகின்றேன்.

வரும் காலங்களில் ஊழியர்களையும், சபை மக்களையும் ஆசீர்வதித்து புதிய ஆத்துமாக்களை அறுவடை செய்து இன்னும் பல நூற்றாண்டுகளை நினைவு கூர இம்மட்டும் காத்த தேவன் தொடர்ந்தும் காப்பார் என்ற விசுவாசத்துடன் வாழ்த்துகின்றேன்.

**திருமதி . L . மலர்ராஜன்**
**திருக்கோவில் சபை உக்கிராணக்காரர்**
**மெதடிஸ்த திருச்சபை**
**திருக்கோவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறந்த மண்ணில் திறந்த மனதுடன் கிறிஸ்தவ பணியாற்றிய**
**அருள்திரு. ஜெ. விவேகநாதன் அவர்கள் வழங்கிய**
**வாழ்த்துச் செய்தி**



திருக்கோவில் சேகர முகாமைக்குருவான அருள்திரு ரவி முருகுப்பிள்ளை அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு, மேற்படி ஆண்டுவிழா தொடர்பாக வெளியிடப்படவிருக்கும் நினைவேட்டுக்கு (மலருக்கு) ஒரு வாழ்த்துச்செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டபோது நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.

எனது தாய்ச்சபையாகிய திருக்கோவில் சபையில், குழந்தைப்பராயம் முதல் ஊழியனாகி திருப்பணியில் ஈடுபடும் காலம்வரை நானும் எனது பெற்றோர் குடும்பத்தார் அனைவரும் வழிபட்டு வந்ததும், எனது கிறிஸ்தவ வாழ்வுக்கு ஆதாரமாக அமைந்ததுமான திருக்கோவில் மெதடிஸ்த ஆலயத்தின் நூறாண்டு நிறைவையொட்டி நடைபெறும் விழாவும், அது தொடர்பாக இடம்பெறும் அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக அமையவும், இந்நிகழ்வுகள் தற்போது இவ்வாலயத்தில் வழிபடும் சபை உறுப்பினர்களுக்கு மட்டுமன்றி, திருக்கோவில் சேகரத்திலுள்ள அனைத்து சபையாருக்கும், சுற்றியுள்ள மக்களுக்கும், சிறப்பாக திருக்கோவில் பிரதேச மக்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பதாகவும், ஆசீர்வாதமானதாகவும் அமைய வாழ்த்துகிறேன். அதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும், வழிநடத்துதல்களையும் முகாமைக்குரு அருள்திரு ரவி முருகுப்பிள்ளை அவர்களுக்கும், உடன் ஊழியர்களுக்கும், சபைமக்கள் அனவருக்கும் ஆண்டவர் அருளவேண்டுமென மன்றாடுகிறேன்.

இற்றைக்கு ஏறத்தாழ நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், திருக்கோவில் பிரதேசத்திற்கு நற்செய்திப்பணியாற்ற வந்த, ஓர் ஆங்கிலேய மெதடிஸ்த மிஷனரி ஊழியருக்கு மொழிபெயர்ப்பாளராக இருந்து, பின்னர் மனமாற்றமடைந்து, திருக்கோவில் பிரதேசத்தின் முதல் கிறிஸ்தவராகி, பின்னர் நற்செய்தி ஊழியனாகவும், ஆசிரியராகவும் பணியாற்றியவரும், திருக்கோவில், கோமாரி முதலிய பகுதிகளில் நற்செய்தி பரவவும், பலர் ஆண்டவரை அறிந்து ஏற்றுக்கொள்ள காரணராயிருந்தவரும், பிராமண வகுப்பைச் சேர்ந்தவருமான திரு யோசுவாச் செட்டியார் என்பவரின் வழித்தோன்றல்களே திருக்கோவில் சபையில் நீண்டகாலம் உறுப்பினர்களாக இருந்து சந்ததி, சந்ததியாக இவ்வாலயத்தில் வழிபட்டுவந்தவர்களாவர். அதில் நான்காவது தலைமுறையைச் சார்ந்தவர்களுள் ஒருவனான என்னிடமும் ஒரு வாழ்த்துச் செய்தியைக் கேட்க நினைத்து, கேட்ட சபை ஊழியருக்கும், சபையாருக்கும் எனது சார்பிலும், குடும்பத்தார் சார்பிலும் உளமார நன்றி கூறுகிறேன். திருக்கோவில் ஆலயத்தின் இந்நூற்றாண்டு விழா நிகழ்வுகள், உங்களுக்கும், தொடர்ந்து நீங்கள் செய்யவிருக்கும் அருட்பணிகளுக்கும், எதிர்கால சந்ததிக்கும் உற்சாகமும், ஊக்கமும் தருவதாக அமைவதாக.

ஆண்டவர் உங்களையும் உங்கள் அருட்பணிகளையும், நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவின் பணியில்**
**உங்களன்பான,**
**அருள்திரு. ஜெ. விவேகநாதன்**
**கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்கும் காலத்திலிருந்தே கடவுளுக்கு தொண்டு செய்யவேண்டுமென்று தமது கிறிஸ்தவ பணியை ஆரம்பித்த **அருள்திரு. N. அருள்நாதன** அவர்கள் வழங்கிய **வாழ்த்துச் செய்தி**



நூற்றாண்டாக தனது வாழ்விலும் பணியிலும் இறையரசுக்கு சான்று பகரும் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபைக்கு வாழ்த்துச் செய்தியை கொண்டு வருவதில் மிகவும் மகிழ்வடைகின்றேன். சிறப்பாக திருக்கோவில் மெதடிஸ்த ஆண்கள் இல்லத்தின் (Methodist Boys Home) பழைய மாணவனாக இச் செய்தியை கொண்டு வருவதில் இரட்டிப்பான மகிழ்ச்சி.

1990 ஆனி மாதத்தில் ஏற்பட்ட அசாதாரண போர்ச் சூழலானது அக்கரைப்பற்றில் செயற்பட்டுக் கொண்டிருந்த ஆண்கள் இல்லத்தை திருக்கோவிலுக்கு இடம்பெயர வைத்தது. போர்ச்சூழலும் அதனைத் தொடர்ந்த சமூக வாழ்வும் புதிய ஆன்மீக சூழலை உருவாக்கியதுடன் கடவுளின் ஊழியத்திற்கான பாதையையும் ஆயத்தப்படுத்தியது. ஏழையும் அற்பமும் பாவியுமாகிய என்னை கடவுள் தனது ஊழியத்திற்கென தெரிந்தெடுத்ததில் திருக்கோவில் திருச்சபை, ஆண்கள் இல்லம் அடித்தளமிட்டது என்பதனை எப்பொழுதும் பெருமையுடன் கூற நான் கடமைப்பட்டவன்.

இன்று எமது திருச்சபை வாழும் உலகில் அல்லது திருச்சபையை சுற்றி பல மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கலாச்சாரங்கள் மாறுகின்றது, காலநிலை மாற்றமடைகின்றது, அரசியல் சூழ்நிலைகள் மாறுகின்றது, நவீன தொழினுட்பங்கள் நாளுக்கு நாள் வளர்கின்றது மாற்றமடைகின்றது. பொருளாதார உலகமயமாக்கல் பெரும்மாற்றங்களுடன் வளர்கின்றது. இவ்வாறு மாறிக்கொண்டிருக்கும் உலகில் உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சி பகர திருச்சபை அழைக்கப்பட்டிருக்கின்றது (மத்தேயு 28:18-20, திருத்தூதர் பணிகள் 1:8) இன்றைய சூழலில் உயிர்த்த ஆண்டவர் இயேசுவுக்கு சாட்சி பகருதல் இலகுவானதல்ல. அது வார்த்தையில் அல்ல, மாறாக திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் செயல்வடிவம் பெற வேண்டியது.

திருச்சபை அது வாழும் சூழலில் பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய இச்சூழ்நிலையில் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையானது காலடி பதிக்கும் புதிய நூற்றாண்டில் உயிர்ப்பின் ஆண்டவருக்கு உயிருள்ள "ஒரே பொதுவான பரிசுத்த அப்போஸ்தல" திருச்சபையின் தன்மை கொண்டு சான்று பகர உளமாற வாழ்த்துகின்றேன்.

தந்தை, மைந்தன், தூய ஆவியின் அருள்கொடைகள் திருச்சபையின் சான்று பகரும் வாழ்வில் நிறைந்திருக்கட்டும்.

**இறைபணியில,**
**அருள்திரு . N . அருள்நாதன்.**
***பழைய மாணவர்***
***(மெதடிஸ்த ஆண்கள் இல்லம்.)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் நற்பணியை தன் பணியாக ஏற்றுத் தொண்டாற்றும்
**அருள்திரு. P.K. அருள்ராஜ்** அவர்கள் வழங்கிய
**வாழ்த்துச் செய்தி**



திருக்கோவில் மெதடிஸ்த திருஅவை தனது திருஅவை வாழ்வில் நூறு ஆண்டுகள் நிறைவினை கொண்டாடி, இறைவனுக்கு நன்றி கூறுகின்ற இந்நேரத்தில் உங்கள் மகிழ்வில் கலந்து வாழ்த்துக் கூறுவதில் மகிழ்கின்றேன்.

**"நாங்கள் தகுதி உடையவர்களெனக் கருதி**
**நற்செய்தியைக் கடவுளே எங்களிடம் ஒப்படைத்தார்"** (1 தெசலோனிக்கேயர் - 2:4)

இவ் இறைவாக்கு தூய பவுலடியாரின் திருப்பணி அனுபவம். அவ்வாறே 1911 இல் மிஷனரிமார்களினால் வித்திடப்பட்ட திருப்பணி வாழ்வில் விசுவாசப் பயணத்தினை மேற்கொண்ட அனைத்து இறையன்பர்களையும் வாழ்த்துகின்றேன்.

ஆலயம் - குருமனை - மிசன் பாடசாலை - பாலர் பாடசாலை - மாணவர் இல்லம் - சமூகப்பணித் திட்ட நிலையம் என்பன ஒரு சகாப்த கால திருப்பணி வாழ்வின் சிறப்பான வெளிப்பாடுகள். விசுவாச, ஆன்மீக வாழ்வுடன் மட்டும் திருப்பணி வாழ்வு நின்று விடாது சமுதாயப்பணி, கல்வி வாழ்வின் உயர்விலும் தனது கரங்களை விரித்தமை போற்றுதற்குரியது.

சமூகப்பணி திட்டத்தின்கீழ் கல்விப் பணிக்கு திருஅவை ஆற்றிய பணிகள் பல உண்டு. ஆலய சூழலில் அழகிய ஆண்கள் இல்லம், இந்த இல்லம்தான் என் கல்விக்கும், ஆன்மீகத்திற்கும், திருப்பணி வாழ்வுக்கும் வித்திட்டது. பல ஆண்டு போர் சூழலில் பெற்றோரை இழந்த மாணவர்களையும், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த மாணவர்களையும் ஒன்றிணைத்துக் கல்வியையும், சமூகத்தில் நற்பிரஜையாக வாழ்வதற்கும் வழி அமைத்த திருஅவை நூறு ஆண்டுகள் கடந்து இன்னுமோர் புத்தாண்டில் தனது கால் பதிப்பதை நினைந்து பெருமிதம் கொள்கின்றேன்.

இலங்கை மெதடிஸ்த திருஅவையில் ஒரு குருவானவராக திருப்பணி ஆற்றுகின்றேன் என்றால், இதற்கு களம் அமைத்தது திருக்கோவில் திருஅவையின் மெதடிஸ்த மாணவர் இல்லமேயாகும். இவ் இறைகொடை கிடைத்ததை இட்டு அகமகிழ்கின்றேன்.

எனவே கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக திருக்கோவில் பகுதியில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தந்த தளரா விசுவாசமுள்ள முன்னோர்களுக்காக நன்றி செலுத்துவதுடன், எமது விசுவாசத்தை அவர்களது வாழ்வோடு ஒப்பிட்டுப் பலப்படுத்துவோம்.

*"அர்த்தமுள்ள கிறிஸ்தவ சாட்சி"* உள்ள வாழ்வை வாழ இன்னும் அதிகமாக முயல்வோமாக!...

இறைசேவை, ஆன்மீக வாழ்வு, சமூகப்பணி மென்மேலும் சிறப்புற வாழ்த்தி நிற்கின்றேன். தொடர்ந்தும் கல்விப்பணிக்காக அதிக சேவை செய்து நற்பிரஜைகளை சமூகத்துக்கு கொடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**"ஆண்டவராம் இயேசுக் கிறிஸ்துவின் பேரருள் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக!..."**

**இறை பணியில்**
**அருள்திரு பா. கனிஸ்ரன் அருள்ராஜ்,**
**இலங்கை மெதடிஸ்த திருச்சபை**
**அத்துரு - மத்துகம சேகரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்கள் நிர்வாகத்தில் சிறப்புடன் பணியாற்றி ஆன்மீகத் துறையில் அடியெடுத்து வைத்த **அருள்திரு.A.அருளானந்தம்** அவர்கள் வழங்கிய **வாழ்த்துச் செய்தி**



"நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்". (யோவான் 17:22)

திருக்கோவில் சபை 100 வது நிறைவாண்டு விழாவை கொண்டாடுவதை நினைத்து அகமகிழ்கின்றேன். இறைபணிக்கான எனது முதல் பணித்தளமாக திருக்கோவில் ஆண்கள் இல்லம் இருந்தது. என்னை நற்செய்தி பணியாளனாக நியமிக்க திருக்கோவில் சபை வழிகாட்டிகள் தோள் கொடுத்தார்கள். திருக்கோவில் சேகரத்தினூடாக இறையியல் கல்லூரிப் படிப்பை முடித்து திருக்கோவில் சேகரத்திலுள்ள சின்னமுகத்துவார சபையின் முதலாவது குருவானவராக நியமிக்கப்பட்டேன். திருக்கோவில் சேகர பணியாளனாக பணி செய்ய கடவுள் எனக்கு கிருபை செய்தார். அதற்காக இறைவனுக்கும், திருச்சபைக்கும் நன்றி கூறுகின்றேன்.

திருச்சபை என்பது **"கடவுளின் இறையரசை கட்ட கடவுளால் தெரிந்து கொண்ட கருவி"** ஆகும். இது சகோதரத்துவம், நீதி, சமத்துவம் ஆகிய பண்புகளை தன்னகத்தே கொண்டதாக காணப்படுகின்றது. இந்தப்பண்புக்கான நிழலை இத்திருச்சபையில் கண்டு கொண்டேன். அதனால்தான் இத்திருச்சபை இன்றும் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. ஆன்மீகப் பணியில் பசுமையான உணர்வு கொண்டதாகவும். சமயத்தை கடந்த சமூகப்பணியையும் அன்றிலிருந்து இன்று வரை செய்து கொண்டு வருவது வரவேற்கத்தக்கது.

திருச்சபை மக்களிடையே பகிர்ந்து கொண்டு வாழுதல், சகோதர ஐக்கியம், சாட்சியாய் வாழுதல் போன்ற நற்பண்புகளை திருச்சபை கொண்டதால் இத்திருச்சபை தனது 100 வது நிறைவாண்டு விழாவை கொண்டாடுவதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்துகின்றேன். மேன்மேலும் திருச்சபை வளர கடவுள் உங்களோடு இருப்பாராக.

**இறை பணியில்,**
**அருள்திரு A. அருளானந்தம்**
**மெதடிஸ்த திருச்சபை**
**கல்லாறு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்த்தரின் பணியை தன் பணியென்று ஊழியம் செய்ய புறப்பட்ட **அருள்திரு. கு. குணாளன்** அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி



திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை மக்களாக, பணியாளர்களாக ஒன்றிணைந்து சிறப்பிக்கும் இந் நூற்றாண்டு விழாவில் எனது வாழ்த்துச் செய்தியையும் உங்களோடு பகிர்ந்து கொள்ளக் கிடைத்த பெரும் பேறிற்காய் இறைவனை நன்றியோடு துதிக்கின்றேன். இந் நூற்றாண்டு விழாவினை சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என வாஞ்சித்த ஒவ்வொருவரையும் வாழ்த்துகின்றேன்.

நமது கிறிஸ்தவ விசுவாச ஓட்டத்தில் இத் திருச்சபையானது நூறு ஆண்டுகளை கடந்து இன்னும் ஒரு புதிய ஆண்டில் காலடி எடுத்து வைக்க கர்த்தர் கொடுத்த கிருபைக்காய் நாம் யாவருமே கடவுளுக்கு நன்றி கூறவேண்டியவர்களாக உள்ளோம். இந் நூற்றாண்டை கோலாகலமாகக் கொண்டாடும் இவ் வேளையில் கடந்து போன காலங்களை ஒரு கணம் திரும்பிப் பார்க்கின்றேன். பல திருப்பணியாளர்கள் அயராது செய்து வந்த இறைபணியும், ஊக்கத்துடன் உழைத்த உழைப்பும், தியாக சிந்தனையும், இறை மன்றாடல்களுமே இன்று இந் நூற்றாண்டு விழாவைக் கடக்க காரணமாய் அமைந்தது. திருக்கோவில் சேகரம் எனது தாய்ச் சேகரம் ஆகும். என் வாழ்நாளில் அதிக காலங்களை இங்கு தான் கழித்திருக்கின்றேன்

நம் வாழ்நாட்களில் பலவிதமான பாடுகள், வேதனைகள், இழப்புக்கள் இவற்றின் மத்தியில் நாம் இறைவனின் மாறாத கிருபையின் நிமித்தமாக இன்று ஒரு நூற்றாண்டை கடந்து புதிய ஆண்டிற்குள் காலடி பதிக்கின்றோம்.

**இந்த நாற்பது வருஷமும் உன்மேலிருந்த வஸ்திரம் பழையதாய்ப் போகவுமில்லை, உன் கால் வீங்கவுமில்லை. ஒருவன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல உன் தேவனாகிய கர்த்தர் உன்னை சிட்சிக்கிறார் என்று நீ உன் இருதயத்தில் அறிந்து கொள்வாயாக.( உபா 8:4.5)**

என்பதற்கமைய நம் ஆண்டவரின் வழிநடத்துதல் நம்மோடு கூட இருந்து இப்புதிய ஆண்டிற்குள் காலடி எடுத்துவைக்க நம்மை வழிநடத்தியுள்ளது. நான் இன்று ஒரு திருப்பணியாளனாக பணியாற்றினாலும், பல்வேறுபட்ட சூழ்நிலைகளில், எனது இறை பயணத்தில், பல தடவைகள் நான் பண்படுத்தப்பட்டிருக்கின்றேன். அவற்றில் திருக்கோவில் ஆண்கள் இல்லமும் ஒன்றாகும். திருக்கோவில் சேகரத்தில் வளர்ந்த ஓர் இறை பணியாளனாய் இந் நூற்றாண்டில் எனது வாழ்த்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பேருவகை கொள்கின்றேன். சிறப்பாக இம்மலர் வெளிவர ஊக்கமாய் உழைத்த அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

"இறைமகன் இயேசுவின் பேரருள் தொடர்ந்தும் உங்கள் யாவருடனும் இருப்பதாக."

இறைபணியில்
**அருள்திரு. கு. குணாளன்**
**இலங்கை மெதடிஸ்த திருச்சபை**
**மன்னார் முருங்கன் சேகரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த மண்ணில் மிக இன்புடன் பணியாற்றிய சகோ.பிலிப்குமார அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி



நூற்றாண்டு விழாக் காணும் எமது மண்ணின் மெதடிஸ்த திருஅவைக்கு வாழ்த்துச் செய்தி எழுத கிடைத்ததை எண்ணி பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பிறப்பால் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த நான் எனது கல்வியின் பொருட்டு 1983ம் ஆண்டு திருக்கோவில் மண்ணில் பணியாற்றிய அருள்திரு.S.S.ஞானராஜா போதகரின் உதவியால் ஆண்டவரின் அன்பை ருசிக்கும் பாக்கியத்தை பெற்றேன். சிறு வயதில் இவ் ஆலயத்தில் நடக்கும் வெளிப் பிரகார கூட்டங்களில் பங்குபற்றிய ஞாபகம் பசுமையாக உள்ளது.

முதன்முதலில் மெதடிஸ்த திருச்சபையில் என்னை இணைத்துக் கொண்டு நான்கு வருடம் சொந்த மண்ணில் பணியாற்ற இறைவன் அருள்கூர்ந்தார். **"இறைவார்த்தையின் பிரகாரம் என் ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். என் நியமங்களைக் கடைப்பிடிக்கவும், என் நீதி நெறிகளைக் கவனமாய் செயல்படுத்தவும் செய்வேன். நான் உங்கள் முன்னோருக்கு கொடுத்த மண்ணில் நீங்கள் வாழ்வீர்கள். அப்போது என் மக்களாய் இருப்பீர்கள். நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்"** என எசேக்கியல் தீர்க்கன் உரைத்த வாக்கு நூற்றாண்டு காணும் இத்திருச்சபையும், மக்களும் மென்மேலும் எம் போன்ற மண்ணின் மைந்தர்களை இறைபணியில் உள்வாங்கவும், இருளில் வாழும் அநேகர் இறை ஆட்சிக்குள் நுழையும் மாபெரும் தளமாகவும் விளங்க இறைவன் பரலோகத்தில் இருந்து நல் ஆசிகளை வழங்குவாராக.

இறைபணியில்
சகோ. S.பிலிப்குமார்
மெதடிஸ்த திருச்சபை
மஞ்சந்தொடுவாய்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த மண்ணில் திறந்த மனதுடன் கிறிஸ்தவ பணியாற்றும் சகோ. பத்மராஜன அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி



திருக்கோவில் மெதடிஸ்த ஆலயம் தனது நூறாவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதை இட்டு திரித்துவக் கடவுளின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடை செய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து"** (ஏசாயா 54:2)

என்ற வார்த்தையின்படி ஜனங்களின் நன்றிப்பலிகளைச் செலுத்துவதற்கு ஆலயத்தில் இடம் கொள்ளாதபடியால் ஆலயம் மீண்டும் மீண்டும் இடித்து பெரிதாகக் கட்டப்பட்டு சாட்சி பகர்வதை கண்டு என் கடவுளை துதிக்கின்றேன்.

எனது தாய்த் திருஅவை நூறாவது ஆண்டை நினைவு கூருகின்றபோது நூறு வருடங்கள் எங்களை வழிநடத்திய இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். இக்காலங்களில் நாட்டின் போரின் போது இடம் பெயர்ந்து, வாழ்வு தேடி வந்த மக்களை அரவணைத்து, பாதுகாத்து ஆன்மீகத்தையும் கொடுத்து, மாணவர்களை தத்தெடுத்து அவர்களுக்கு கல்வி எனும் வாழ்வு வழங்கியதும், ஆழிப்பேரலை (TSUNAMI) எமது கிராமத்தை காவு கொண்டபோது, பல சமூகப் பணிகளை மேற்கொண்டு சகல வழிகளிலும், வாழ்வு இழந்த மக்களுக்கு என் தாய்த் திரு அவை வாழ்வு கொடுத்ததையிட்டு பெருமிதம் கொள்ளுகின்றேன்.

இந்நாளில்! இத் திருஅவையின் உருவாக்கத்துக்கு பாடுபட்டு கடவுளுக்குள் நித்திரை அடைந்த அனைத்து தாசர்களையும் நன்றியுடன் நினைக்கின்றேன். அத்துடன் இத் திருஅவை நூறு வருடங்கள் சிறப்புற்று தலை நிமிர்ந்து நிற்பதற்குச் சக்தி கொடுத்த கடவுளுக்கு நன்றிகூறி, இதன் பாதையில் வழிகாட்டிகள், திருஅவை மக்கள் அனைவரையும் நன்றி உடன் வாழ்த்துகின்றேன். எனது திருப்பணிக்கு களம் அமைத்து என்னை ஊக்கப்படுத்தி இன்று என்னை ஓர் திருப்பணியாளராக நிறுத்தி இருக்கின்ற இறைவனையும், அந்நாள் திருப்பணியாளர்களையும் எனது திரு அவை மக்களையும் நன்றியுடன் நினைக்கின்றேன்.

தொடர்ந்தும் தமது ஆன்மீக நிலையிலும், சமூகப்பணி வாழ்விலும், சிறப்புற்று வளரவும் சவால் நிறைந்த சமூகத்தில் விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் முகம் கொடுத்து மேலும் வளர ஆண்டவரை பிரார்த்திப்பதோடு நூற்றாண்டு விழாவை நினைவு கூரும் திரு அவை மக்கள், வழிகாட்டிகள், திருப்பணியாளர்கள், முகாமைக்குரு அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**இறைபணியில்**
**அருள் சகோதரர் ப.பத்மராஜன்**
**மெதடிஸ்த திரு அவை**
**மணற்சேனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் தோற்றம்

கி.பி 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்திலே இருந்து பல மிஷனரிக் குழுவினர் கீழைத்தேசத்திற்கு நற்செய்தியை கொண்டு செல்லவேண்டும் என்ற தணியாத தாகம் இங்கிலாந்தின் பல பாகங்களிலும் வாழ்ந்த மிஷனரிமார்களுக்கு உதித்தது. அந்த குழுக்களில் ஒரு குழுவினர்தான் இங்கிலாந்து மெதடிஸ்த திருச்சபையின் சட்டக் கலாநிதி.தோமஸ் கோக் அவரின் தலைமையில் வந்த குழுவினர். இந்த மிஷனரிப் பயணம் திடீரென்று எழுந்த ஒரு திட்டத்தின் முடிவல்ல. இது பல தடவை இங்கிலாந்தின் மகாசங்கத்திலே கதைக்கப்பட்டு ஆராயப்பட்ட ஒரு பயணத் திட்டம் ஆகும். பல இடையூறுகள், சவால்கள் மத்தியிலும் தோமஸ் கோக் அவர்களின் முயற்சி ஐரிஸ் மகா சங்கத்திலே 1813 இல் கைகூடியது. இதன்பலனாக தனது வயதான நிலையிலும், தனது உடல்நிலை ஒவ்வாத நிலையில் போதிய பணம் இல்லை என்ற நிலையிலும், இத்தனைக்கும் மத்தியில் ஆசியாவுக்கு செல்வதே என் இறுதி மூச்சு "நான் ஐரோப்பாவுக்கு மரித்து ஆசியாவுக்கு பிழைத்திருக்கிறேன்" என்ற இறுதி வாக்குடன் 30.12.1813ல் இரு கப்பல்களிலே தன்னுடையதும், குழுவினரினதும் சொந்த பணத்தைக் கொண்டு தூதுப் பயணத்தை ஆரம்பித்தனர்.

போட்ஸ் மூவுத் துறைமுகத்தில் இருந்து கலாநிதி தோமஸ் கோக், கனம் கிளவ், கனம் பெஞ்ஜமின், கனம் வில்லியம் காவட் அவரது மனைவியும் கபல்வா கப்பலிலும் ஏனையவர்களாகிய கனம் வில்லியம் வின்ஸ், கனம் ஜோர்ஜ் ஏஸ்கின், கனம் தோமஸ் சுகன்ஸ் கனம் வில்லியம் ஒல்ட்ம் அவரது மனைவியும் லேடி மெல்லிங் எனும் கப்பலிலும் புறப்பட்டு வரும்வழியில் கடுமையாக இயற்கையோடு போராட வேண்டியிருந்தது. புறப்பட்டு ஒரு சில நாட்களில் ஒருவர் இறந்துபோக அவரைக் கடலிலே அடக்கம் பண்ணிவிட்டு தமது பயணத்தை நம்பிக்கையோடு தொடர்ந்தனர். ஆனால் தமது தலைவனை இழப்போம் என அவர்கள் எண்ணியதே இல்லை. திடீரென இந்தியக் கடலிலே நுழைகின்றபோது கலாநிதி.கோக் நோயுற்று மரித்துப்போக அவரது குழுவினர் செய்வதறியாது தடுமாறினர். இருந்தும் இறைபெலத்தோடு அவரையும் கடலிலே அடக்கம் பண்ணிவிட்டு எல்லாவற்றையும் இறைபாதம் வைத்து தமது பயணத்தை தொடர்ந்து பம்பாயை வந்தடைந்து, ஒரு கப்பல் தடுமாறி இலங்கையின் காலிப் பகுதியின் வெலிகம கரையை யூன் 29, 1814 இல் வந்தடைந்தனர்.

இவர்கள் வந்திறங்கியதும் காலியிலே ஆளுனராக இருந்த சேர்.றொபட் பிறவிங் என்பவர் தனது இல்லத்துக்கு அழைத்து சென்று இராவிருந்து அருந்திய பின் அங்கிருந்தே இவர்கள் இலங்கையின் பல பாகங்களுக்கும் பிரிந்து சென்றார்கள் என்று கூறப்படுகின்றது. அந்த வரிசையிலே யாழ்ப்பாணத்துக்கு ஜேம்ஸ் லோன்ஜ், தோமஸ் ஸ்கூவான்ஸ், மட்டக்களப்பிற்கு வில்லியம் ஒல்ட், காலிக்கு பெஞ்ஜமின் கிளத், மாத்தறைக்கு ஜோர்ஜ் எறிஸ்கிங் என்ற அடிப்படையில் பிரிந்து சென்று தமது பணியினை செய்தனர்.

இவர்கள் இலங்கைக்கு வந்து தனியே நற்செய்தியை மாத்திரம் கூறவில்லை. மக்களின் உடல், உள நலன்களையும் கருத்திற் கொண்டு கல்வி, சுகாதாரம், ஆன்மீகம் இவைகளிலே தமது பார்வையைச் செலுத்தினர். கல்வியறிவுள்ள சமூகத்தை உருவாக்குவதில் மெதடிஸ்த மிஷனரிகளின் பங்கு மகத்தானது. மொழி, கலாச்சாரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலை இவைகள் யாவுமே தமது பணிக்கு சவால்களாக இருந்தபோதிலும் ஒருபோதும் தமது நோக்கத்தில் இருந்து இவர்கள் பின்வாங்கி விடவே இல்லை. ஜெபத்தோடும், அயராத முயற்சியோடும் இம்மக்களுக்கு செய்யும் பணியே நம்நாதர் கிறிஸ்துவுக்கு செய்யும் பணி என்பதில் உறுதியாய் இருந்தனர். இலங்கையிலே 176 பாடசாலைகள் மெதடிஸ்த மிஷனரிகளால் ஆரம்பிக்கப்பட்டு அரசாங்கத்திடம் கையளிக்கும் வரையிலும் அதை நிர்வகித்து வந்தனர். ஆங்கிலக் கல்வியின் பெறுமதியை இலங்கை மக்களுக்கு தெரிவித்தவர்கள் இவர்களே.

இந்த மிஷனரிப் பணியாளர்கள் இலங்கையில் பணி செய்தது மிகக் குறுகிய காலமாகவே இருப்பினும் அவர்கள் பணி மகத்தானது. மெதடிஸ்த திருச்சபை மிகவேகமாக இலங்கை மண்ணில் காலூன்றுவதற்கும் அநேக இலங்கை சுதேசிகள் கிறிஸ்துவின் அன்பை அனுபவிக்கவும், அவருக்காக சாட்சிகளாய் வாழவும் அடித்தளமானவர்கள் இவர்களே. தங்களது சொந்த மண், உறவுகள், தங்களுக்குரிய சொத்துகள் எல்லாவற்றையும் இழந்து கிறிஸ்துவை நற்செய்தியாக அறிவிப்பதை மாத்திரம் இலக்காகக் கொண்டு இலங்கை மண்ணில் இறைபணியாற்றி தமது உயிரையும் இம்மண்ணில் விட்டவர்கள் என்றும் நன்றியுடன் எம் விசுவாசப் பயணத்தில் முன்நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

## தேவனைப் போற்றித் துதிக்கும் முறைகள்

| | |
|---|---|
| • எப்போதும் போற்ற வேண்டும் | சங் 34:1 |
| • கீர்த்தனம் பண்ண வேண்டும் | சங் 66:2 |
| • கிறிஸ்து வழியாக போற்ற வேண்டும் | பிலி 1:9-11, எபி 13:15 |
| • மகிழ்ச்சியோடு போற்றவேண்டும் | 2நாளா 29:30, சங் 33:1 |
| • மன உண்மையோடு போற்ற வேண்டும் | சங் 86:12 |
| • உயிர்த் துடிப்புடன் போற்றவேண்டும் | சங் 63:5 |
| • உயிரோடிருக்கும் மட்டும் போற்றவேண்டும் | சங் 104:33 |
| • நன்றியுடன் போற்ற வேண்டும் | நெகே 12:24 எஸ்றா 3:11 |
| • புரிந்து கொள்ளுதலுடன் போற்றவேண்டும் | 1கொரி 14:15 |
| • நேர்மையான இதயத்துடன் போற்றவேண்டும் | சங் 64:10 |
| • அதிகமாய் போற்றவேண்டும் | சங் 71:14 |
| • உதடுகளால் போற்றவேண்டும் | சங் 34:1 |
| • வாயினால் போற்ற வேண்டும் | சங் 40:3 |
| • நாவினால் போற்றவேண்டும் | சங் 35:28 |
| • அனுதினமும் போற்றவேண்டும் | 2 நாளா 30:21 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு நிறைவில் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தனது வரலாற்றை மீட்டிப் பார்க்கின்றது

தென்கிழக்கு மெதடிஸ்தர்களின் தாய்ச்சபையாக பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு பரிமாணங்களோடும் மங்கா புகழோடும் பல சாதனைகளை நம் நாதர் கிறிஸ்துவிற்காய் புரிந்து, திருப்பணி வரலாற்றில் நூறுதனை தாண்டி ஆலயத்தின் வரலாற்றில் 100வது அகவைக்குள் காலடி எடுத்து வைத்திருக்கும் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தனது நூறு ஆண்டு வரலாற்றை பெருமையோடு திரும்பி பார்த்து கிறிஸ்துவுக்குள் பெருமை கொள்கின்றது.

கல்முனையில் இருந்து தெற்கே 12 மைல் தொடங்கி கடற்கரை ஓரமாக 60 மைல் தூரத்திற்கு திருக்கோவில் சேகரம் பரந்து விரிந்து காணப்பட்டது. அக்கரைப்பற்று, பாணமைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களுக்குள் உட்பட்ட 05 சபைகளை தன்னுள் கொண்டது. விளாக்கீது, கருங்கொடித்தீவு, திருக்கோவில், கோமாரி, பொத்துவில் போன்ற திருச்சபைகளில் மொத்தமாக 73 அங்கத்தவர்கள் இருந்திருக்கின்றனர். இக்காலத்தில் இஸ்லாமியர், இந்துக்கள், பௌத்தர்கள், இவர்களுக்குள்ளிருந்து மக்கள் நற்செய்திப்பணியால் ஈர்க்கப்பட்டு கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இக்காலப்பகுதியில் வேறு புரட்டஸ்தாந்து சபைகள் இப்பகுதியில் இருக்கவில்லை.

இற்றைக்கு சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் கல்முனையானது தூதுப்பணியின் மத்திய நிலையமானபோது அங்கிருந்துதான் இப்பகுதிகளுக்குள் நற்செய்தி கொண்டு வரப்பட்டது. (கி.பி.1874-1878) இக்காலப்பகுதிகளே திருக்கோவில் சேகரத்தின் ஆரம்பகாலம். அப்போது கல்முனையில் கனம் எட்வட் ஸ்ரட், கனம் ஹென்றி டீ.சில்வா, கனம் W.M.உவால்ரன் என்போர் குருமாராக இருந்தனர்.

1874ல் கருங்கொடித்தீவில் ஒரு ஆண் பாடசாலையும், விளாக்கீதில் ஒரு கலவன் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. 1875ல் ஒரு வணக்கஸ்தலம் கருங்கொடித்தீவில் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு பயிற்றப்படாத ஊழியரும் நியமிக்கப்பட்டார்.

அடுத்த வருடத்தில் கனம்.எட்வேட். ஸ்பால்டிங் என்பவர் முதல் தமிழ் குருவாக கருங்கொடித்தீவில் நியமிக்கப்பட்டார். 1877ல் தம்பிலுவிலில் ஒரு ஆண் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த வருடத்தில் கனம்.எட்வேட். ஸ்பால்டிங் போதகரின் இடத்திற்கு கனம் றொபெட் பாண்ஸ் போதகராக நியமிக்கப்பட்டார். கல்முனையில் 1879ம் ஆண்டு கனம். ஜோர்ஜ் ஜேசெப்ரிறியர் நியமிக்கப்பட்டார். அதே வருடத்தில் திருக்கோவிலில் ஒரு சுவிசேஷ பணியாளன் நியமிக்கப்பட்டார். திருக்கோவிலில் ஓர் ஆண் பாடசாலையும், தம்பிலுவிலில் ஒரு பெண் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. 73 மாணவரைக் கொண்ட இந்த பெண் பாடசாலை மட்டக்களப்பு பகுதி முழுவதிலும் முதன்மையானதாகக் கருதப்பட்டது.

கனம்.G.J.ரிறிம்மர் 15.09.1879ல் எழுதிய அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. சகோதரன் ஸ்ரட் கோமாரி எனும் கிராமத்தில் சாலிய வகுப்பினருக்குள் காணப்பட்ட எழுச்சியை பற்றி எழுதியிருக்கின்றார். இதற்குக் காரணமாய் இருந்தவர் திருக்கோவிலைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் எனக் கூறப்பட்டுள்ளது. இவரின் வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாரஸ்யமானது. சுமார் 130 வருடங்களுக்கு முன் இந்தியாவிலே வாழ்ந்த செட்டியார் குலத்தைச் சேர்ந்த ஒரு முருக பக்தன் இலங்கையின் தென்னகத்தே அமைந்திருக்கும் கதிர்காம முருகனை தரிசிக்க ஆசை கொண்டு கால்நடையாக பயணம் தொடர்ந்த அவர் திருக்கோவில் முருகன் கோவில் வீதியிலே தங்கி இருந்து திருக்கோவில் முருகனை வழிபட்டு வந்தார். அக்காலத்தில் ஆலய வழிபாட்டிற்கு வந்த திருக்கோவில் பெண்ணோடு உரையாடலில் ஆரம்பித்து பிற்பாடு திருமணத்தில் முடிந்தது.

1875 காலப்பகுதியில் கனம் ஸ்ரட் என்ற தூதுப்பணியாளர் திருக்கோவில் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் நற்செய்தியை குறிக்கோளாகக் கொண்டு பல மைல் கடல் கடந்து இங்கு வந்தபோது மொழி என்பது இவர் பணிக்கு பெரிய தடையாக இருந்தது.

இவருக்கு தமிழ் தெரியாது. இங்குள்ள மக்களுக்கோ ஆங்கிலம் தெரியாது. இந்நிலையில் தான் செட்டியாரின் அறிமுகம் கிடைத்தது. ஒரேஒரு ஆங்கிலம் தெரிந்த நபராக இவர் இருந்ததால் ஸ்ரட் போதகர் அவரின் உதவியை நாடி மொழிபெயர்ப்பிற்கு உதவி செய்யும் படியும், அதற்கான வேதனத்தைத் தருவதாகவும் வலிந்து கேட்டுக் கொண்டார். போதகரின் பேச்சை கேட்டதும் உரத்த சத்தமாக "என்குல தெய்வமாகிய முருகனைப் பாடித்துதிக்கும் அதே வாயால் உங்கள் இயேசுவைப் பற்றி ஒரு வார்த்தை தானும் பேச முடியாது." என கூறி மறுத்து விட்டார்.

செட்டியாரின் மறுப்புரையைக் கேட்டு மனம் வருந்திய தூதுப்பணியாளர் உள்ளத்துக்குள் ஊக்கமாக ஜெபித்து விட்டு செட்டியாரை நோக்கி ஐயா "நீங்கள் இயேசுவைப் பற்றி ஒரு வார்த்தையும் பேச வேண்டாம். நான் ஆங்கிலத்தில் கூறுவதை மட்டும் நீங்கள் தமிழில் மக்களுக்கு கூறினால் போதும் எனக் கூறி வருந்திக் கேட்டுக் கொண்டார்." இதன் பிரகாரம் அவர் உடன்பட்டு செயற்படலானார்.

செட்டியார் ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று கூட்டங்களில் பேச வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் வேண்டா வெறுப்பாக தன் மொழிபெயர்ப்பைச் செய்து வந்த செட்டியார் காலப்போக்கில் ஆர்வத்தோடு செய்ய ஆரம்பித்தார். அவரின் மனம் மாற்றமடையத் தொடங்கியது. சில நாட்களில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட செட்டியார் "யோசுவா" என்ற பெயருடன் திருமுழுக்குப் பெற்று இயேசு கிறிஸ்துவின் தாசனானார். அன்று தொடக்கம் மக்கள் அவரை "யோசுவா செட்டியார்" என அழைக்கலாயினர். பிற்பாடு தனது குடும்பத்தையும் மீட்பின் வழிக்குள் கொண்டு வந்ததோடு, கிராமத்து மக்களையும் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் வாழ்க்கைக்குள் வழிகாட்டினார். தூதுப்பணியாளரோடு சேர்ந்து இருவரும் பணியை திருக்கோவிலுக்குள் மாத்திரமல்லாது ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரித்தனர். அதிலே கோமாரி, பொத்துவில், பாணமை. இந்த பகுதிகளுக்கு காட்டு விலங்குகள், பயங்கர விஷ ஜந்துக்கள், அடர்ந்த காடு இவைகளினூடாக சென்று இப்பகுதிகளில் எல்லாம் மெதடிஸ்த கிறிஸ்தவர்கள் உருவாவதற்கு இவர்கள் பணி இன்றியமையாதன. அத்தோடு அவரின் சகோதரர்களான சந்தோச செட்டியார், சற்குணச் செட்டியார் இவர்கள் பணியும் நினைவு கூரப்பட வேண்டியதே.

அத்தோடு காலப்போக்கில் திருக்கோவில் பகுதிக்கான உபதேசியாராகவும், பாடசாலை ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் பரம்பரையில் வந்தவர்களே இன்று திருக்கோவிலில் காணும் மெதடிஸ்தர்களில் பெரும்பகுதியினர். கனம் ரிறிம்பர் மார்க்க எழுச்சி பற்றி யோசுவா செட்டியார் விட்டு சென்ற நாட்குறிப்பேட்டில் கூறப்பட்டதாவது, பொத்துவில், பாணமை பகுதிகளில் கனம்.E.M.உவீவர், கனம்.C.S காசிநாதர், திரு.யோசுவா செட்டியார் மூவருமே நற்செய்தியைக் கொண்டு சென்றவர்கள். 30.06.1896ல் பாணமையில் ஒரு பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விதமாக திருக்கோவில் சேகரம் 1896 ம்ஆண்டிலே நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறு அதன் பின் தோன்றிய பணியாளர்கள் பணிகளை உறுதிப்படுத்தி சபைகளைக் கட்டியெழுப்புவதில் தமது முழு பிரயாசத்தையும் செலுத்தினர்.

அடுத்து செல்வி B.M.கிளெக் அம்மா அவர்களே இச்சேகரத்தில் தங்கியிருந்து பல்வேறு பணிகளை ஆற்றிய தூதுப்பணியாளராக விளங்குகின்றார். அவர்களுடைய காலத்திலே தான் நிரந்தரமான வணக்கஸ்தலங்களும் கட்டிடங்களும் தோன்றின. 1922ம் ஆண்டு காலப்பகுதி இச்சேகர சரித்திரத்தின் மற்றுமோர் முக்கிய காலப்பகுதியாகும். கனம் T.S வேதநாயகம் அவர்களின் ஊக்கமான பிரயாசத்தின் பேறால் பல இந்துக் குடும்பங்களுக்குள்ளும் கிறிஸ்துவின் நற்செய்தி கொண்டு செல்லப்பட்டது. இக்காலத்தில் மனம் மாறி ஞானஸ்நானம் பெற்றவர்களில் திரு.கனகரெத்தினம் என்பவர் மிக முக்கியமானவர். இவருக்கு பவுல் என்ற திருமுழுக்குப் பெயர் வழங்கப்பட்டது.

கனம் ஜேம்ஸ் மேதர் போதகர் 1959ல் எழுதிய அறிக்கையொன்றில் இவரைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாவது "மட்டக்களப்பிலிருந்து சுமார் 40 மைல் தெற்கேயுள்ள தம்பிலுவில் என்ற கிராமத்தில் கடும் சைவக்குடும்பத்தில் மனம்மாற்றமடைந்த ஒருவரே "பவுல்" என்ற சிறப்புப் பெயர் கொண்ட கனகரெட்ணம் ஆவார். காலம் சென்ற கனம் T.S.வேதநாயகம் போதகருடன் 30 வருடங்களுக்கு முன் இக்கிராமத்திற்குப் போயிருந்தேன். பவுலின் மனமாற்றத்தினால் அக்கிராமத்தில் காணப்பட்ட அதிர்ச்சியும் எதிர்ப்பும் எனது ஞாபகத்தில் இப்போதும் இருக்கிறது. கடும் எதிர்ப்புக்கள் மத்தியிலும் பவுலின் துணிவும் அழைத்தவரின் துணையும் அவர்மேல் இருந்ததால் பிற்காலத்தில் அநேகர் அப்பகுதியில் மெதடிஸ்தர்கள் ஆனார்கள்.

மேலும் 40 வருடங்களுக்கு மேல் வேதாகம ஸ்திரியாக முதல் முதலாக பணிசெய்த திருமதி ஞானம்மா காத்தமுத்து அம்மாளின் அர்ப்பணிப்பான சேவையும் குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் செல்வி கதறின், E.கமில்ரன், கனம். B. ஹொலன்ட், சகோதரி எலிசபேத் பேக்கர் என்போர் இச்சேகரத்தை அடிக்கடி சந்தித்து பணியாளரை உற்சாகப்படுத்தி வந்தனர். சேகரம் ஆன்மீகத்திலும், உறுப்பினர் தொகையிலும் முன்னேற்றம் கண்டது.

கனம் R.W.மக்வே ஐயரே தூதுப்பணியாளர்களில் கடைசியாக இச்சேகரத்தின் முகாமைக்குருவாக கல்முனையில் இருந்து பணியாற்றியவர். 1942ல் கல்முனையில் நடந்த செனட் மாநாட்டில் திருக்கோவில் ஓர் "B" சேகரமாக உயர்த்தப்பட்டு அப்போது திருக்கோவிலில் பணியாற்றிய போதகரே முதல் தமிழ் முகாமைக்குருவாக நியமிக்கப்பட்டார். அன்று தொடக்கம் திருக்கோவில் சேகரமானது பொருளாதாரத்திலும், திருப்பணியிலும் நல்ல வளர்ச்சி நிலையினை எட்டியுள்ளது. இச்சேகரம் பிற்பாடு தன்னாட்டு நிர்வாகத்தின் கீழ் கையளிக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்பட்டது. அப்போது ஒரு போதகரும் 03 ஆண் திருப்பணியாளர்களும், 02 பெண் திருப்பணியாளர்களும் திருப்பணியில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963ம் ஆண்டில் இச்சேகரத்தில் இருந்து முதல் முதலாக குருத்துவத்திற்கு பயிற்றப்பட முன்வந்தவர் திரு. K.S.வேதநாயகம், திரு. G.N.ஜெயராசசிங்கம் என்பவர்களாவர்.

பிற்பாடு இன்றுவரை திருக்கோவில் சேகர முகாமைக்குருக்களாகவும், சபையின் பொறுப்பு குருக்களாகவும் இருந்து பணியாற்றியோர்களாக அருள்திரு.ஞானமுத்து, அருள்திரு.சரவணமுத்து, அருள்திரு.அரசரெத்தினம், அருள்திரு.சத்தியராஜ், அருள்திரு.டானியேல், அருள்திரு.போல் பெஞ்ஜமீன், அருள்திரு.வேதநாயகம், அருள்திரு.கருணைராஜ், அருள்திரு.ஞானராஜ், அருள்திரு.யோகராஜா, அருள்திரு.ஆனந்தராஜா, அருள்திரு.தயாசீலன், அருள்திரு.மயில்வாகனம், அருள்திரு.கிறிஸ்டிகுமார், அருள்திரு.தயாநிதி, அருள்திரு.ரவி முருகுப்பிள்ளை என்பவர்களும், திருக்கோவில் திருச்சபையில் இருந்து இறைபணிக்காய் எழுந்தவர்கள் வரிசையில் அமரர் அருள்திரு.வேதநாயகம், அருள்திரு.விவேகநாதன், அருள்திரு.சாம் ஜெயதிலகராஜா, அமரர் அருள்திரு.மயில்வாகனம், அமரர் அருள்திரு ரூபன் மேகநாதன் அரியநாயகம் என்பவர்கள் குருமாராகவும், அமரர் கனகரெட்ணம் உபதேசியாராகவும், செல்வி.ஜீவமலர் கனகரெத்தினம் டீக்னஸாகவும், சகோ.பிலிப்குமார், சகோ.பத்மராஜன் என்பவர்கள் சொந்த மண்ணிலிருந்து இறைபணிக்காக தங்களை அர்ப்பணித்தவர்கள்.

இன்னும் திருக்கோவில் ஆண்கள் இல்லத்திலிருந்து இறைபணிக்காக தங்களை அர்ப்பணித்தவர்களாக அருள்திரு.அருள்நாதன், அருள்திரு.அருளானந்தம், அருள்திரு.பா.அருள்ராஜா, அருள்திரு.குணாளன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

மேலும் திருச்சபையின் வரலாற்றுப் பார்வையில் இன்னும் பல உபதேசிமார், சேகரக்குருமார்கள், நற்செய்திப்பணியாளர்கள், உள்ளூர் அருளுரையாளர்கள், வழிகாட்டிகள், திருச்சபை அங்கத்தவர்கள் யாவரினதும் பிரயாசமும், விசுவாச ஓட்டமுமே இன்று நூற்றாண்டு காணும் எம் திருச்சபைக்கு பின்னணியாய் இருக்கிறது. இந்த விசுவாசப்பயணத்தில் நெற்றி வேர்வை சிந்தி உழைத்த எத்தனையோ பேர் இவ்வுலகில் இல்லை. அவர்களுக்காக இறைவனை துதிக்கிறோம்.

திருச்சபை தனது வரலாற்றில் காலத்திற்குக் காலம் எதிர்கொண்ட சவால்கள் ஏராளம், சூறாவளி, வெள்ளப் பெருக்கு, இனக்கலவரம், ஆழிப்பேரலை, அரக்க போர் போன்ற பல்வேறு காலகட்டங்களிலும் நிமிர்ந்து நின்று பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக குரல் கொடுக்கவும், புனர்வாழ்வு பணி செய்யவும், ஆறுதல் பணிகளில் தம்மை ஈடு படுத்தவும், உங்களோடு நாமும் இருக்கிறோம் என்பதில் வரையறை தாண்டி சமயம், இனம், சாதி என்ற எல்லா நிலையிலும் பணிசெய்ததை இந்நேரத்தில் திரும்பிப் பார்த்து கிறிஸ்துவுக்குள் பேரானந்தம் அடைகிறது.

இத்தோடு இன்னும் பல நூற்றாண்டுகளை கண்டு கிறிஸ்துவுக்காய் இன்னும் பல வரலாறுகளை படைப்போம். பின்வரும் சந்ததிக்கு விபரமாய் கூறிட விசுவாசப்பயணத்தில் கிறிஸ்துவோடு பயணிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் திருச்சபையின் வரலாறு கண்ட திருப்பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | Rev.ஸ்ருவாட் | 1876 - 1879 |
| 2. | ஜோசுவா செட்டியார் | |
| 3. | Rev.வீவர் | 1895 |
| 4. | Rev.T.S.வேதநாயகம் | 1922 - 1928 |
| 5. | Rev.S.J.போல் கனகரெத்தினம் | |
| 6. | Miss.B.M கிளைக் | 1929 - 1931 |
| 7. | Rev.E.K.இளையதம்பி | 1930 - 1931 |
| 8. | Rev.R.V.தம்பிப்பிள்ளை | 1932 - 1934 |
| 9. | Rev.A.S.வீரகத்திப் பிள்ளை | 1935 - 1936 |
| 10. | Rev.S.R.வின்ஸ்லோ | 1937 - 1939 |
| 11. | Rev.E.E.குணரெட்ணம் | 1940 - 1945 |
| 12. | Rev.S.V.சரவணமுத்து | 1946 - 1950 |
| 13. | Rev.S.W.அரசரெத்தினம் | 1951 - 1952 |
| 14. | Rev.T.K.கேட்டில் | 1953 |
| 15. | Rev.S.B.சத்தியராஜ் | 1953 - 1955 |
| 16. | Rev.S.M.ஜேக்கப் | 1956 - 1958 |
| 17. | Rev.E.E.குணரெட்ணம் | 1959 - 1964 |
| 18. | Rev.C.J.டானியேல் | 1964 - 1971 |
| 19. | Rev.P.பென்ஜமீன் | 1971 - 1974 |
| 20. | Rev.K.S.வேதநாயகம் | 1975 - 1978 |
| 21. | Rev.S.கருணைராஜ் | 1978 - 1982 |
| 22. | Rev.S.S.ஞானராஜ் | 1982 - 1985 |
| 23. | Rev.J.W.யோகராஜா | 1985 |
| 24. | Rev.P.J.ஆனந்தராஜா | 1985 - 1989 |
| 25. | Rev.S.D.தயாசீலன் | 1989 - 1995 |
| 26. | Rev.M.J.மயில்வாகனம் | 1995 - 1997 |
| 27. | Rev.T.கிறிஸ்டிகுமார் | 1997 - 2002 |
| 28. | Rev.R.தயாநிதி | 2002 - 2008 |
| 29. | Rev.S.R.ரவிமுருகுப்பிள்ளை | 2009 - இன்றுவரை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போது பணியாற்றும் குருவானவரின் உள்ளத்திலிருந்து...



திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையானது கடந்த காலத்தில் பலதரப்பட்ட சமய, சமுதாய பணிகளில் ஈடுபட்டிருந்தது பலரும் அறிந்ததே. கடந்த 2009 இல் இருந்து திருக்கோவில் சேகரத்தை வழிநடத்திச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இக்காலப் பகுதியில் அதிக முக்கியத்துவம் கொடுத்தது ஆன்மீகப் பணிக்கு என்று கூறலாம். இப்பணியை கட்டியெழுப்புவதற்கு மெதடிஸ்த திருச்சபையானது சகோதர திருச்சபைகளுடனும், சமூகத்துடனும் இணைந்த செயற்படவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

என்னுடைய இந்த எண்ணமானது நூற்றாண்டு விழாவினூடாக நிறைவேற்றப்பட்டுள்ளதைக் குறித்து ஆண்டவருக்குள்ளாக மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பணியானது மென்மேலும் வளர்ச்சியடையவும், திருச்சபை மக்கள் ஆன்மீகத்தில் உறுதிப்படவும், ஒருமைப்பாட்டுடன் சேவையாற்றவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எனது திருப்பணியின் ஆரம்பசேவைக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்கள் எமது சேகர மக்களே ஆகும். இவர்களுடைய ஒத்துழைப்பே எனது சேவைக்கு உந்து சக்தியாக இருந்தது. ஆன்மீகப் பணியையும், அபிவிருத்திப் பணியையும் சமூதாயத்திற்குள் எடுத்துச் செல்வதற்கு எமது திருச்சபை மக்களுடன் நூற்றாண்டு விழாவும் ஒரு சிறப்பம்சமாக விளங்கியது. நூற்றாண்டு விழாவுக்காக விளையாட்டுப் போட்டிகள், வினாவிடைகள், கட்டுரைப் போட்டி, திறமையை வெளிப்படுத்தும் சிறுவர்களுக்கான கலை, கலாச்சாரப் போட்டி போன்ற போட்டிகளினூடாக சமூதாயத்துக்குள் ஊடுருவிச் சென்று சமூகப் பணிகளைச் செய்வதற்கு இந்நூற்றாண்டு விழாவே காரணமாகத் திகழ்ந்தது.

இந்நூற்றாண்டு விழா எனது சேவையின் காலத்தில் வந்தது நான் செய்த பாக்கியமென்று நினைக்கின்றேன். எனவே இந்நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு பொருளுதவி, சரீர உதவிகளையும், வெளிநாடுகளில் இருந்தும் உள்ளூர்களில் இருந்தும் உதவிகளைச் செய்த அபிமானிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் சேகரத்தில் அன்புடன் பணியாற்றிய அருள்திரு . போல் பென்ஜமீன் அவர்கள் ஆற்றிய ஊழியத்தின் அனுபவத்திலிருந்து...

திருக்கோவில் சேகரத்தின் வரலாறும் பணியும் நூறு ஆண்டுகள் நிறைவு பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, எனது மனைவிக்கும் அதன் பணியில் நான்கு ஆண்டுகள் (1971 - 75) பங்குகொள்ளும் தருணம் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் சபையின் பாலர் பணியும், இளைஞர் பணியும் முன்னேறின. சுவிஷேச பணியில் பலர் ஆர்வம் காட்டினர். கத்தோலிக்க சபையுடன் சேர்ந்து திருக்கோவில் சேகரமாக உயிர்த்தெழுந்த (உத்தான) பெருவிழா அரங்கேற்றப்பட்டது. இவற்றோடு இன்னும் பல பணிகளில் சபையார் ஆர்வத்துடன் பங்குகொண்டனர்.

நூறு ஆண்டு காலத்தில் திருக்கோவில் சபையை வளர்த்த சபை மக்களையும், ஊழியர்களையும் நினைத்து இன்று கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றோம். அவர்களின் நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை, செயற்பாடு, தியாகம் ஆகியவற்றை அன்புடன் நினைவு கூருகின்றோம். அவர்களைப் போன்று இன்றுள்ள சபையின் பணிகளைத் தொடர்ந்து செய்யும் சபை மக்களையும், ஊழியர்களையும் ஆசீர்வதிக்குமாறு ஆண்டவரிடம் வேண்டுகிறோம்.

வாழ்க கிறிஸ்துவின் திருச்சபை.

**அருள் கலாநிதி. போல் பெஞ்சமின்**
**ஓய்வு பெற்ற குருவானவர்**
**ஐக்கிய மெதடிஸ்த திருச்சபை**
**அமெரிக்கா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவப் பணியையே பொறுப்பாக ஏற்றுப் பணிபுரிந்த அருள்திரு . S . S கருணைராஜ் அவர்கள் ஆற்றிய ஊழியத்தின் அனுபவத்திலிருந்து...

இலங்கைக்கு மெதடிஸ்தம் வந்து 197 வருடங்களைப் பூர்த்தி செய்துவிட்டது. இவ்வேளையில் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தனது 100 வது ஆண்டைப் பூர்த்தி செய்து வெற்றி நடைபோடுகின்றது. திருச்சபையானது சமுதாயத்தில் தோன்றி அந்த சமுதாயத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய பல பணிகள் ஏறெடுக்கப்படுகின்றன. புயல், சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகள் ஏற்பட்ட பொழுது திருச்சபையானது முன்வந்து பல பணிகளைச் செய்தது.

நான் பணி செய்த காலத்தில் தான் போர்க் காலச் சூழல் ஆரம்பமானது. அதில் நமது சபையைச் சேர்ந்த சில வாலிபர்களும் மரித்தார்கள். இவ்வேளையில் நாம் மரித்தவர்களுக்கும் மரியாதை செலுத்துகின்றோம். ஆனால் சபை சோர்ந்து போகவில்லை.

திருக்கோவில் திருச்சபை தான் பாரம்பரிய நாட்டுக் கூத்தை மேடையேற்றுவதில் முன்னோடியாகத் திகழ்ந்தது. இதைச் சிறப்புறச் செய்தவர்கள் திரு.பாரிசாதம் ஆசிரியரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் J.திவ்வியநாதனும்.

திருக்கோவில் கிராமம் சகல வளங்களையும் கொண்ட கிராமம். இயேசுக் கிறிஸ்துவின் நற்சீடராகுவோம், விசுவாசத்தில் முன்நடப்போம் என்ற பாடலுக்கிணங்க சபை முன்னேறிக் கொண்டு இருக்கிறது. மேலும் சிறப்புற எனது நல்லாசிகள்.

அருள்திரு.S.கருணைராஜ்
ஓய்வுபெற்ற ஊழியர்
மெதடிஸ்த திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் சேகரத்தின் கிறிஸ்தவப் பணியில் தொண்டாற்றிய அருள்திரு . S .S. ஞானராஜா அவர்கள் ஆற்றிய ஊழியத்தின் அனுபவத்திலிருந்து...

100 ஆண்டுகள் நிறைவு காணும் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபைக்கு இறைமகன் இயேசுவின் இனிய நாமத்தில் நல் ஆசிகளும், வாழ்த்துக்களும்.

"கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்......"

கடந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். கர்த்தர் மேய்ப்பராய் இருந்து எல்லாக் காலங்களிலும் எம்மை வழி நடத்தியிருக்கிறார். எம் பாதைக்கு தீபமாய் இருந்ததை எண்ணி நன்றி செலுத்துகிறேன்.

83 ஆம் ஆண்டு காலங்களில் இருள் சூழ்ந்த பல அனுபவங்களில் சந்தேகங்கள், வன்முறைகள் தலைதூக்கிய நாட்களில் பயத்தினால் மக்கள் பீதியுடன் ஒழிந்த காலங்களில் கர்த்தர் மேய்ப்பராய் இருந்து தம் கோலினாலும் தடியினாலும் இருள் அனுபவங்களை கடந்து செல்ல உறுதுணையாய் இருந்து பாதுகாத்தார்.

திருக்கோவில் ஆலயம் திருச்சபை மக்களுக்கும் கிராமத்து மக்களுக்கும் நம்பிக்கையின் பிறப்பிடமாய் எதிர்காலத்தின் வழிகாட்டியாய் இருந்தது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

ஆன்மீக உறுதிப்பாட்டிற்கும் சமூகத்தின் சேவைகளுக்கும் முன்னின்று செயல்படுவதில் இவ் ஆலயம் பின்னிற்பதில்லை. கடந்த காலங்களில் இத்திருச்சபையின் பல்வேறுபட்ட பணிகளில் வளர்ச்சியில் முன்னின்று உழைத்த திருப்பணியாளர்கள், உக்கிராணக்காரர்கள், மூத்த உறுப்பினர்கள், அனைவரையும் அன்புடன் நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

இன்றைய திருச்சபை நிர்வாகிகள், ஊழியக்காரர், உறுப்பினர் அனைவருக்கும் மீண்டும் எம் நல் ஆசிகள் வாழ்த்துக்கள்.

அன்பின்
ஞானா.
அருள்திரு.S.S.ஞானராஜா
பரி.பேதுரு ஆலயம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் சேகரத்தின் கிறிஸ்தவப் பணியில் தொண்டாற்றிய அருள்திரு . ஜோசப் வில்லியம் யோகராஜா அவர்கள் ஆற்றிய ஊழியத்தின் அனுபவத்திலிருந்து...



திருக்கோவில் சபையானது தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்நாளில் நான் பெருமகிழ்வும், உவகையும் அடைகின்றேன்.

வரலாற்றில் தொன்மை வாய்ந்த இச்சபை தன்னகத்தே பல்வேறு தரப்பட்ட பணிகளைச் செய்து வருகின்றது. ஆன்மீகப்பணியும் இதன் பரந்து விரிந்து செயற்படும் சமூக நோக்குப்பணிகளும், அயலகத்தாருடன் கொண்டுள்ள நெருக்கமான உறவும், பண்பான பக்குவமான சமூதாயப்பணித் திட்டங்களுமே இச்சபையின் இன்றைய உயர்வான வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளன. பொறுப்புள்ள வழிகாட்டிகளின் அர்ப்பணிப்புமிக்க அளப்பரிய பணிகளும் சபை மக்களின் விசுவாச விழுமியங்களுமே இன்றைய வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளன. திருக்கோவில் சபை சமுதாயப்பணிக்கும், திருப்பணியாளரைப் பயிற்றுவித்து உருவாக்கும் பீடமாகவும் செயற்பட்டு வருகின்றது.

இந்தச் சபையின் கலை, பண்பாட்டு வளர்ச்சி இங்கு மெச்சத்தக்க முக்கிய அம்சமாகத் திகழ்கின்றது.

*இறை ஆசிகள்.*

இறை பணியில்
அருள்திரு J.W. யோகராஜா,
முகாமைக்குரு.
மெதடிஸ்த திருச்சபை.
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் சேகரத்தின் திருப்பணியில் அருள்திரு . பொன் ஆனந்தராஜா அவர்கள் ஆற்றிய ஊழியத்தின் அனுபவத்திலிருந்து...



அன்புக்குரியோரே!

திருக்கோவில் மெதடித்த திரு அவை தனது 100வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் இவ் வேளையில் எனது நல்வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருக்கோவில் திரு அவையில் பணிபுரிந்த காலங்களை மீண்டும் நினைத்துப் பார்க்கும் போது அக்காலங்கள் எமது வாழ்வில் இடையிட்ட ஒரு பொற்காலம் எனவே எண்ணுகின்றேன். பல பிரச்சனை மேகங்கள் சூழ்ந்திருந்த காலம் அது. எல்லாப் பக்கங்களிலும் இருந்து வந்த பிரச்சனைகள் உயிர் வாழ்வதற்கே கேள்விகளை எழுப்பிய காலம். உயிருக்கு உத்தரவாதம் இல்லாவிட்டாலும் துணிவையும் தன்னாமுமையையும் கட்டியெழுப்பிய காலம்.

கிறிஸ்தவ விசுவாசத்துக்கு அறைகூவல்கள் பல விடுக்கப்பட்ட காலம். கிறிஸ்தவ விசுவாசத்தை எம்மகத்தே வைத்துக் கொள்வதற்கு பல்வேறு சோதனைகள் ஏற்பட்டாலும் விசுவாசத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஆற்றலும் ஆதிக்கமும் வளர்ந்த காலம். திருப்பணியாளனாக மட்டுமன்றி திருஅவை மக்களாகவும் மேற்படி அனுபவங்களுடன் போராடிய காலம்.

இந்த அனுபங்களுடன் வாழ்ந்து பயனுள்ள ஓர் நற்பணியை நிறைவு செய்ததற்கான காரணம் திருக்கோவில் அவை மக்கள் பகிர்ந்தளித்த அன்பும் ஆதரவுமேயாகும். இவ்வன்பை பகிர்ந்தளித்த பல திரு அவை மக்கள் இன்று நம்மிடையே இல்லையாயினும் அவர்களுக்கும் சேர்த்து அனைவருக்கும் நன்றி சொல்லக்கடமைப்பட்டுள்ளேன். இத்திருவிழாக்காலங்களில் இந் நன்றியினைக் கூறுவதோடு விழாக்கால வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன். இந் நன்றி நினைவு கூறலுடன் திருக்கோவில் திருஅவை இன்னும் பல்லாண்டு தன் திருப்பணியினைத் தளராது ஆற்ற இன்னாள் திருப்பணியாளர்கள், திரு அவை மக்கள் அனைவரையும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

இறைமகன் இயேசுவின் இடையறா அருள் வெள்ளம் அனைவர் மேலும் தங்கட்டும் என்றும் இத்திருவிழா நலமுற நடந்தேறட்டும் என்றும் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

அருட்திரு. பொன்.ஆனந்தராஜா
மானிட தற்சார்பு தியான ஆசிரமம்
கல்குடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் சேகரத்தின் கிறிஸ்தவப் பணியில் தொண்டாற்றிய அருள்திரு . கிறிஸ்டிகுமார் தங்கையா அவர்கள் ஆற்றிய ஊழியத்தின் அனுபவத்திலிருந்து...

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடுகின்ற இந்நாட்களில் இச்சபையில் பணிபுரிந்த ஒரு குருவானவர் என்ற முறையில் இவ் வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

கடந்த நூறு வருடங்களுக்கூடாக ஆண்டவர் இந்த திருச்சபைக்கு கொடுத்து வருகின்ற ஆசீர்வாதங்களையும் அருட்கொடைகளையும் நினைவு கூர்ந்து மகிழ்ந்து அவருக்கு நன்றி செலுத்த இது எங்கள் யாவருக்கும் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகும்.

கடந்த 100 ஆண்டுகளாக திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை நேர்மையும் உண்மையும் கடவுள் பற்றும் நிறைந்த சபை விசுவாசிகளையும் வழிகாட்டிகளையும் உருவாக்கி அவர்கள் ஊடாக எமது திருச்சபைக்கு தெளிவான வழிகாட்டலையும் தலைமைத்துவத்தையும் அருளி திருச்சபைகளின் இடையே ஒரு பாலமாக இருந்து வருவதை நாம் யாவரும் மறக்க முடியாது.

கடந்த 100 ஆண்டுகளாக உங்களை பல விதங்களிலும் ஆசிர்வதித்து தாங்கி வழிநடாத்தி உங்கள் கரம்பற்றி அழைத்துச்சென்ற ஒப்பில்லா இறைவனாம் இயேசு கிறிஸ்துவை போற்றுகின்றேன், வாழ்த்துகின்றேன், வணங்குகின்றேன்.

**அருள்திரு . கிறிஸ்டிகுமார் தங்கையா**
**முகாமைக்குரு**
**பருத்தித்துறை– கட்டைவேலி சேகரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் சேகரத்தில் இன்புடன் பணியாற்றிய அருள்திரு. R. தயாநிதி அவர்கள் ஆற்றிய ஊழியத்தின் அனுபவத்திலிருந்து...



நூறு வருடங்களாக திருக்கோவில் ஆலய கட்டிடத்தில் நிறைவேற்றப்பட்ட அனைத்து திருப்பணிகளையும் நினைத்து கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

மிசனரிமாரின் தியாகத்தில் 197வருடங்களுக்கு முன்னே ஆரம்பித்த இத்திருப்பணியை திருச்சபை மக்களாக, திருப்பணியாளர்களாக இணைந்து நிறைவேற்ற கடவுள் பேரருள் புரிந்துள்ளதை எண்ணி அனைத்து திருச்சபை மக்களையும், திருப்பணியாளர்களையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து வாழ்த்துகின்றேன்.

சிறப்பாய் இத்திருச்சபையின் மூதாதையர்கள் வாழ்வையும் நினைவுகூருகின்றேன். அவர்கள் உக்கிராணக்காரர்களாய், வழிகாட்டிகளாய், சபைமக்களாய் இணைந்து பல அரும்பணிகளைத் தங்கள் சமுதாயப்பணிகளாய் அன்பினாலும் தாலந்துகளினாலும் உக்கிராணத்துவத்துடன் நிறைவேற்றியுள்ளனர். இதன் பயனாய் நம்நாட்டிலும், உலகில் பல நாடுகளிலும் பலர் பயன் அடைந்தவர்களாய் சிறப்பான வாழ்வு வாழ்கின்றனர். மேன்மையான ஒரு வாழ்வை பலருக்கு இத்திருச்சபை வேறு வேறு வழிகளில் காலத்திற்கு காலம் தேவை அறிந்து வழங்கியுள்ளது என்பதை எண்ணவும், அம்மக்களையும், அப்பணிகளையும் வாயார வாழ்த்தவும் மனம் உந்துகின்றது, மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

குறிப்பாய் திருக்கோவில் சபையில் முன்மாதிரியாய் வாழ்ந்த, பணியாற்றிய உண்மையான அன்பு காட்டிய, அனைவர் பொருட்டும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். அத்துடன் எனது மகள் **“சொக்கா அம்மம்மா”** என அழைத்த அம்மா திருமலர் அவர்களுடைய கனிவான அன்பு, ஒப்படைப்பு, நற்செய்தி நிறைந்த வாழ்வின் முன்மாதிரிகளை நான் திருப்பணியாற்றிய ஏழு வருடகாலமும் அவர் உயிரோடு வாழும் வரையும் அனைவருக்கும் கிடைத்ததையிட்டு ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றேன்.

இவ்வாறான திருச்சபை மரபினைக் கொண்ட திருச்சபை திருக்கோவில் என்பது சரித்திரம், உண்மைக்கும் உக்கிராணத்துவத்திற்கும் கடும் உழைப்பிற்கும் முன்மாதிரியான அருளானந்தம் ஐயாவையும் கல்வி அறிவோ திருமறையை வாசிக்கும் ஆற்றலோ இல்லாத நாம் அன்பாக அழைக்கின்ற பாலக்குடா அம்மாவையும் எண்ணி இத்திருச்சபை மக்களாகிய நீங்கள் நூறு ஆண்டு பணிநிறைவை எட்டியதையிட்டு மீண்டும் வாழ்த்துகின்றேன்.

ஆண்டவருடைய பேரருளும், கிருபையும் நற்செய்தியும், திருப்பணியும் நிறைந்த மக்களாய் திருக்கோவில் சபை என்றென்றும் சாட்சி பகர ஆண்டவர் நிறைவாய் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**அருள்திரு. R. தயாநிதி**
**இலங்கை மெதடிஸ்த திருச்சபை**
**மட்டக்களப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்றாண்டை நிறைவு செய்திருக்கும் திருக்கோவில் திருச்சபையில் உக்கிராணத்துவம் வகித்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஞானம்மா காத்தமுத்து | 2. | சாமித்தம்பி செல்லையா |
| 3. | கிருபை செல்லையா | 4. | எலிசபெத் முத்தம்மா ஆபிரகாம் |
| 5. | சின்னத்தம்பி யோசப் கனகரெத்தினம் | 6. | குஞ்சித்தம்பி |
| 7. | ரஞ்சிதம் தங்கராசா | 8. | அரியமலர் செபரெட்ணம் |
| 9. | கனகரெட்ணம் | 10. | P.E.தம்பிமுத்து |
| 11. | சௌந்தரராஜா | 12. | N.Sவடிவேல் |
| 13. | J. ஜெயரெட்ணம் | 14. | J.P.இராசையா |
| 15. | சின்னத்தம்பி கதிரேசப்பிள்ளை | 16. | மாணிக்கப்பிள்ளை சாமித்தம்பி |
| 17. | I. பத்தினியர் | 18. | அழகையா |
| 19. | W.V. வடிவேல் | 20. | பிள்ளையம்மா சதாசிவம் |
| 21. | R.E.ஞானராஜா | 22. | S.அருளானந்தம் |
| 23. | A.D.ஜேம்ஸ் | 24. | திருமதி. பி. தவநேசன் |
| 25. | திருமலர் இராசையா | 26. | திருமதி . லோ. மலர்ராஜன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் மண்ணின் மைந்தன் அமரர் அருள்திரு.ரூபன் அரியநாயகம் ஆற்றிய பணிகளின் நினைவுக் குறிப்பு

25.08.2003 அன்று செய்தி ஊடகங்கள் தாங்கி வந்த செய்தி ஒரு கணம் யாவரையும் ஸ்தம்பிக்க வைத்துவிட்டது. ஆம் அதுதான் மெதடிஸ்த திருச்சபையின் மன்னார்-முருங்கன் சேகர முகாமைக்குரு அருள்திரு.ரூபன் அரியநாயகம் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையாகி விட்டார் என்ற துயரச் செய்தி! நம்ப முடியவில்லை! 20.08.2003 மன்னார் நகரசபை மண்டபத்தில் கலந்துகொண்டு உரையாற்றி அனைவரோடும் கலந்துரையாடிச் சென்றவர்பற்றி அடுத்த 25ம் திகதி வந்த செய்தி அனைவரையும் ஆழ்துயரில் மூழ்கடித்துவிட்டது.

அருள்திரு.ரூபன் அரியநாயகம் என்றால் மன்னார் மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையிலேயே அவரை அறியாதவர் இல்லை என்றே கூறவேண்டும். அந்தளவுக்கு தனது வாழ்வாலும், வார்த்தையாலும், செயற்பாடுகளினாலும், அறிவுத் திறனாலும் அனைவரதும் உள்ளங்களையும் கொள்ளை கொண்டவர். அகவை நாற்பத்தியாறே ஆயினும் இவர் தன் தலை மேல் சுமந்த பொறுப்புகளும், கடமைகளும் பற்பல.

09.10.1956ல் அம்பாறை திருக்கோவிலிலே பிறந்த இவர் பல்வேறு இடங்களிலும் மெதடிஸ்த திருச்சபையின் குருவாக பணியாற்றிய பின்னர் இறுதியாக மன்னார் முருங்கன் மிசன் முகாமைக்குருவாக கடமையாற்றினார். சிறந்த மதப்பற்று மிக்க இவர் தனது மறைத் தொண்டு, சமூகத் தொண்டு மூலம் மக்களின் மனங்களில் இடம் பிடித்துக் கொண்டவர். அனைவரோடும் நல்லுறவை வளர்த்துக் கொண்டவர். முருங்கன் ஜீவோதய நிலையத்தின் இயக்குனராக இருந்து பல்வேறு செயற்திட்டங்களையும் முன்னெடுத்துச் சென்றார். மன்னார் முருங்கன் மிஷன் பணிகளுடன் வன்னி மிஷனின் இணைப்பாளராய் இருந்து, இடம் பெயர்ந்தோருக்கும், ஏழைகள், அநாதைகளுக்கும் உதவி புரிந்ததோடு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்யும் பல புதிய திட்டங்கள், கல்வி போன்றவற்றிலும் கவனமுடன் செயற்பட்டார். 1992-2000வரை தொடுவானம் தமிழ் சஞ்சிகையின் பதிப்பாசிரியராய் இருந்து தனது கருத்துக்களையும், நாட்டுக்குகந்த நல்லனவற்றையும் மக்களுக்கு பயமின்றி எடுத்துரைத்து மக்களின் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். இன்னும் பிரஜைகள் குழு, Y.M.C.A, சிரான் அமைப்பு, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைவர், உப தலைவர் போன்ற பதவிகளை வகித்து அதன் மூலம் மக்களின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் அயராது உழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனக்குக் கிடைத்த உயர் பதவிகள் அனைத்தையும் தனக்கு பெருமை சேர்க்கும் ஒரு நிலைப்பாடாக எடுத்துக் கொள்ளாது இப்பதவிகள் மூலம் எந்தளவு தூரம் சமூதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களுடன் கலக்க முடியுமோ அந்தளவுக்கு அவர்களுடன் கலந்தார்.

பெண்கள் எவ்வளவுதான் அறிவியலிலும், நாகரீகத்திலும் வளர்ச்சியடைந்து விட்டபோதிலும் எம் மத்தியில் இன்றும் அடுப்பங்கரைப் பொம்மைகளாகக் கருதும் நிலையே காணப்படுகின்றது. இந்நிலையில் மகளிர் மேம்பாட்டுச் சங்கம், பெண்கள் பேரணி, பெண்கள் மாநாடு, பெண்கள் தேசிய மாநாடு, மகளிர் தின நிகழ்வு, பெண்கள் உரிமை தொடர்பான விழிப்பூட்டல் கருத்தமர்வு போன்றவற்றை நாடு பூராகவும் பல்வேறு இடங்களில் முன்னெடுத்து சமூதாயத்தில் பெண்கள் தம் நிலையை உணரவும், அவர்களது ஆக்கசக்தி, திறன் போன்றவற்றை மேம்படுத்தவும், பாரதி கண்ட புதுமைப் பெண்களாக அவர்களைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யவும், பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினார்.

இன்னும் கைக்கு எட்டியும், வாய்க்கு எட்டாமல் இருக்கும் இன்றைய சமுதாய முன்னெடுப்புகளுக்கு ஒரு ஊக்குவிப்புப் போன்று குருநாகலிலிருந்து மன்னார் நோக்கியதான சமாதான நட்புறவுப் பயணத்தை இரு தடவைகள் ஒழுங்கமைத்தார். ஏறக்குறைய 500பேர் அதில் இணைந்து கொண்டனர். இன்னும் சுய தொழில் ஊக்குவிப்புத் திட்டம், விவசாயம் தொடர்பான பிரச்சனைகளுக்கு செவிமடுத்து அப் பிரச்சனைகளைத் தீர்க்க சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு தீர்வுத் திட்டங்களை வகுத்தல், புதிய திட்டங்களை உருவாக்கல் போன்றவையும், இவரால் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் ஒரு சில மற்றும் கல்வி சம்பந்தமான செயற்பாடுகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.
உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கிறிஸ்தவ பாட மீட்டல் வகுப்புக்களை நடத்துதல், ஏழை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான நிதி உதவிகளை வழங்குதல் மூலம் பலரது கல்விக் கண்களைத் திறந்தார்.

உழைப்பும், வேலையும், படிப்பும், போராட்டமும் மட்டுமே மனித வாழ்க்கையல்ல, மாறாக அவன் ஒரு சமூகப் பிராணி. சமூதாயத்துக்குள் இலகுவில் தன்னை உட்புகுத்திக் கொள்ளக் கலை இரசனைகளும், மகிழ்ச்சியான பொழுது போக்குகளும் இன்றியமையாதவை என்பதை உணர்ந்தவராய் கலை விழாக்கள், நாடகப் பயிற்சிப் பட்டறை, பொங்கல் விழா, கலைஞர் கௌரவிப்பு போன்றவற்றையும் செயற்படுத்தி பல்லாண்டு கால கொடூர யுத்தத்தினால் மனச் சோர்வுற்றிருந்த மக்களுக்கு உற்சாகத்தையும், மனத்தென்பையும் ஊட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையின் எல்லைகளை விஸ்தரிக்க வேண்டுமென மிகவும் முனைப்பாக செயற்பட்ட ஒருவராவார். வன்னி மிஷன், படுவான்கரை மிஷன் போன்ற பல புதிய திருப்பணிகளை ஆரம்பிப்பதற்கு உத்வேகம் கொடுத்தவராவார். இவ்வாறு பல பரிமாணங்களில் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையில் மிகவும் சிறப்பாக செயற்பட்ட ஒருவர். பிறந்த மண்ணான திருக்கோவில் திருச்சபையில் மெதடிஸ்த ஆண்கள் இல்லம் சிறந்த முறையில் உருவாகுவதற்கு பாடுபட்டவராகவும் இருந்தார்.

இவ்வாறாக இவர் ஆற்றிய பணிகளையும், முன்னெடுத்துச் சென்ற சமூக மேம்பாட்டுத் திட்டங்களையும் பட்டியலிடுவோமானால் அப்பட்டியல் நீண்டு கொண்டே போகும். இங்கு இவர் ஆற்றிய பணிகளை பட்டியலிடுவது எமது நோக்கமல்ல, மாறாக அவர் காட்டிய வழியில் நடந்து, அவர் அறிவுறுத்திய நல்லுரைகளை எம் வாழ்வில் கடைப்பிடித்து, அவர் செயற்படுத்திய திட்டங்கள் மூலம் பலரும் பலனடைய உழைப்பதே நாம் அவருக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும். இவ்வுலகில் இருக்கும்வரை இறைவனின் பிரதிநிதியாகத் திகழ்ந்து எமக்காக அவரிடம் பரிந்து பேசிய அருள்திரு.ரூபன் அரிய நாயகம் தற்பொழுது நம்மிடையே இல்லை. இந்த இளம் வயதில் தன் சக்திக்கு மீறிய பணிகளை நிறைவாக ஆற்றிவிட்டு இறைபதம் சென்றுவிட்டார். இவர் ஆற்றிய பணிகளையும், இவரது சீரிய குணநலன்களையும் கண்ட ஒருவர் இப்படியும் ஒரு மனிதப் பிறவியா என்றே எண்ணுவர். இவர் ஓர் இறை மனிதர். பிறரில், விஷேடமாகத் துன்பப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், இல்லிடமற்றோர், இடம் பெயர்ந்தோர், ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டோரில் இறைவனைக் கண்டவர். செல்வந்தனின் மாளிகையும், ஏழையின் குடிசையும் இவருக்கு ஒன்றே. பழகுவதற்கு இனியவர், பார்ப்பதற்கு எளியவர், இவரது இறப்பு எம் சமுதாயத்திற்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு. தன் மைந்தனின் நிறைவான பணி வாழ்வில் இன்பம் கண்ட இறைவன் அவரை முழுமையாக தன்னுடன் இணைத்துக் கொண்டார். இவர் என்றும் அன்புத் தந்தையாம் இறைவனுடன் மகிழ்ந்திருக்க வேண்டுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன உக்கிராணக்காரரிடமிருந்து...

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையின் நூற்றாண்டு விழா மலரில் ஆதனம் பற்றிய அறிக்கையைத் தருவதில் ஆண்டவருக்குள்ளாக பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்திருச்சபையின் ஆரம்ப காலத்தில் பல ஏக்கர் காணிகள் மிசனரிமார்களால் கொள்வனவு செய்யப்பட்டது. அக்காணிகளில் ஆலயமும், குருவானவரின் வீடும் அதனை அண்மித்து மெதடிஸ்த பாடசாலையும் ஓலைகளால் கட்டப்பட்டது. 1911, ஆம் ஆண்டில் புதிய ஆலயமும், 1958 இல் புதிய குருமனையும் அமைக்கப்பட்டது.

அக்கரைப்பற்றில் இயங்கி வந்த ஆண்கள் இல்லம் 1983ம் ஆண்டில் ஏற்பட்ட கலவரத்தின்போது சேதமாக்கப்பட்டது. இவ் ஆண்கள் இல்லமானது திருக்கோவில் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டது. அதற்கான கட்டிடம் 1990, 1996 ஆம் ஆண்டுகள் இரு தொகுதியாக ஆலய வளாகத்தினுள் அமைக்கப்பட்டு தற்போதும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சபை மக்களின் நலன் கருதி திருச்சபையானது தனக்கு சொந்தமான காணிப் பரப்புகளில் இருந்து சில பகுதிகளை அவர்களுக்கு விற்று தன்னுடைய நிலப் பரப்புக்களைக் குறுக்கிக் கொண்டது. ஆனாலும் 2000 ஆண்டிற்கு பின்வந்த காலப்பகுதியில் பாலக்குடா பிரதேசத்தில் காணியொன்று வாங்கப்பட்டு கட்டிடமும் அமைக்கப்பட்டு, நற்செய்திப் பணித்தளமாக உருவாக்கப்பட்டு, செயற்பட்டு வருகின்றது என்பதை சந்தோசத்துடன் அறியத் தருகின்றேன்.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருக்கோவில் சேகரமாக பல வீட்டு உதவிகளையும் வாழ்வாதார தொழிற் பயிற்சிகளையும் வழங்கியது. இப்பணிகளுக்கு தனியாக ஒரு கட்டிடமும் ஆலய வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ளது.

அன்றிலிருந்து இன்றுவரை திருக்கோவில் திருச்சபை சமூகத்துடன் ஓர் ஐக்கிய உறவைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. அதனை மெருகூட்டும் பணியாக தற்போது சின்னமுகத்துவாரம், தீவுக்காளைப் பகுதியில் விதவைகள், பெண்கள், யுவதிகள் மத்தியில் பணியாற்றுவதற்காக புதிய காணி வாங்கப்பட்டு புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மேலும் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையானது ஆன்மீகத்திலும் சமூதாய பணிகளிலும் வளர்ச்சியடைந்து வருவதைக் கண்டு பெரு உவகை அடைகின்றேன். திருச்சபை, திருச்சபை மக்களோடு மாத்திரம் தனித்து இனிவரும் நாட்களிலும் நின்று விடாது தொடர்ந்து சமூதாயத்தோடு ஐக்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொண்டு செயற்படவும் ஆன்மீகத்தில் பெரும் வளர்ச்சி காணவும் ஆண்டவரைப் பிரார்த்திப்பதோடு எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. R. கமலராஜன்
ஆதன உக்கிராணக்காரர்
திருக்கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சபையும் தூதுப் பணியும்

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையில் நற்செய்திப்பணி செயலாளரிடம் இருந்து 2010/2011இல் அறுவடையை நோக்கி அவர் செய்ய நினைத்தது தடைப்படாது என்ற வார்த்தைக்கு அமைய 1879ல் யேசுவாச் செட்டியாருக்கு வண. றொபட் A.பாண்ஸ் ஐயரும், எட்வட் ஸ்லாட் ஐயரும் இணைந்து ஞானஸ்நானம் கொடுத்ததால் முதல் கிறிஸ்தவன் திருக்கோவிலில் உதயமானான். அப்போது திண்ணைப்பள்ளிக் கூடம் சிறுவீட்டுக் கூட்டங்கள் மூலம் நற்செய்திப்பணி ஆரம்பமானது. இதன் விளைவாக களம் **G . J.** திறிஸ்மர் ஐயரால் 07 பேர் திருமுழுக்குபெற்று திருச்சபை உதயமானது யோசுவா செட்டியாரே ஆசிரியராகவும் உபதேசியாராகவும் பணியாற்றினார். குருவானவராக பான்ஸ ஐயர் கல்முனையில் இருந்து பணியாற்றினார். போக்குவரத்து வசதியின்மையால் குருமார் குதிரையில் பயணம் செய்து நற்செய்தி அறிவித்தனர்.

1896ல் அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில், கோமாரி, பொத்துவில், பாணமை, லவுகல, லாச்சகல் போன்ற கிராமங்கள் வரை திருச்சபை பரந்து நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சுமார் 40மைல் நீளமுடைய சேகரத்தை திருக்கோவிலில் இருந்து சேகர முகாமைக்குரு கண்காணித்தார். அப்போது ஒரு முகாமைக்குரு நான்கு உபதேசி மார் இரண்டு டீக்னஸ்மார் கிளைக் அம்மையார் ஆகியோர் பணியாற்றினர். 1943-1952 இப்பகுதியில் வட- தென் பகுதியில் இருந்து சுவிசேஷ வண்டிகளில் சிங்கள ஊழியர்கள் வந்து சுவிசேஷக் கூட்டங்களை நடத்தினர். இக்காலம் இரண்டாம் உலகமகா யுத்தகாலம் என்பதால் யாவரும் பயத்துடன் வாழ்ந்தால் கிறிஸ்தவர்கள் கடவுளின் வல்லமையை பெற்றவர்களாக கலக்கமின்றி அமைதியுடன் வாழ்ந்தனர். 1952-1962 காலகட்டத்தில் வண **S.W அரசரெத்தினம் வண.J.K.கேட்டிஸ், வண.S.B** .சத்தியராஜ், **வண.ஜேக்கப், வண.E .E.குணரெத்தினம** ஆகியோர் கடமையாற்றினர். 1956ல் **வண ஜேக்கப்** ஐயாவின் காலத்தில் திருக்கோவிலில் புதிய குருமனை உருவானது. 1962ல் **வண கிறிஸ்டி டானியல், வண பென்ஜமின** குருவானவர்களின் காலத்தில் திருக்கோவில் ஆலயம் பொன் விழாக் கொண்டாடியது. தொடர்ந்து **S. D** தயாசீலன குருவானவரின் காலத்தில் குறிப்பாக ஊறணி, தான்டியடி போன்ற இடங்களில் தெருப்பிரச்சாரங்கள், வீட்டு ஜெபக்கூட்டங்கள், சுகமளிக்கும் வழிபாடுகள் மூலம் நற்செய்தி வேகமாகப் பரவியது. தற்போது நூறு ஆண்டுகளுடாக திருக்கோவிலில் நற்செய்திப்பணி அறிவிக்கப்பட்டாலும் **வணS .R . முருகுப்பிள்ளை** குருவானவர் அவர்களின் வழிநடத்துதலில் அறுவடையை நோக்கி என்ற தலைப்பில் பல ஆத்துமாக்கள் அறுவடை செய்யப்படவுள்ளனர் கர்த்தரின் வருகை வரை இப்பணி சிறக்க அனைவரும் ஊக்கத்துடனும் உபவாசத்துடனும் ஜெபிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது திருக்கோவில் சேகரத்தில் முகாமைக்குருவானவருடன் அக்கரைப்பற்று சபை, சின்னமுகத்துவார சபை இவற்றுக்கும் இரண்டு உதவிக் குருமார்களுடன், ஓய்வுபெற்ற திருப்பணியாளர் ஒருவரும்,

முழுநிலை அருளுரையாளர் 05 பேரும்,
பரீட்சை நிலையினர் 01
அவதானிப்பு நிலையினர் 04 பேரும் உள்ளனர்.

இவர்களுக்கான கருத்தரங்குகள் சேகர மட்டத்தில் அவ்வப்போது நடைபெற்று வருவதுடன், பிராந்திய மட்டத்திலும் நடைபெறும் கருத்தரங்குகளிலும் இவர்கள் பங்குபற்றி தங்களது பயிற்சிகளை மேலும் விருத்தி செய்து வருகின்றனர்.

சேகர மட்டத்தில் ஒவ்வொரு கால்வருடத்திற்குமான வழிபாட்டொழுங்கு அட்டவணைகள் குறிப்பிட்ட தலைப்புக்களுடன் அச்சடிக்கப்பட்டு சகல உள்ளூர் அருளுரையாளர்களுக்கும் வழங்கப்பட்டு சேகரத்திலுள்ள திருக்கோவில், அக்கரைப்பற்று, சின்னமுகத்துவாரம், இத்தியடி சபைகளில் இவ்வொழுங்குக்க அமைய வழிபாடுகள் அவர்களால் நடாத்தப்பட்டு வருகின்றது.

திரு.R.மலர்ராஜன்
செயலாளர்
நற்செய்திப் பணி
திருக்கோவில்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை சமுதாயத்தை நோக்கி....

1814ல் இலங்கைத் தீவின் மேற்குக்கரையில் கரையேறிய மெதடிஸ்த மிசனரிமார் இலங்கையின் நாற்றிசையும் பரந்து சென்று நற்செய்தியோடு, சமுதாயப்பணியாக கல்விப் பணியாகவும், இரக்கப்பணியாகவும் சமுதாயத்தை விழிப்பூட்டி வழிப்படுத்தினர்.

ஈழத்தின் கிழக்கே உதயமான மெதடிஸ்த திருப்பணி, மட்டக்களப்பு நகரிலே வின்சன் மகளிர் கல்லூரியையும், மெதடிஸ்த மத்திய கல்லூரியையும், கல்முனையில் வெஸ்லி உயர்தரக் கல்லூரியையும், அக்கரைப்பற்றில் - பல இடங்களில் மிஷன் பாடசாலைகளையும், தம்பிலுவிலில் கிழக்குப்பள்ளி, ஆண்கள் பாடசாலை, பெண்கள் பாடசாலை என இரு பாடசாலைகளையும், திருக்கோவிலில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையும், கோமாரி, பொத்துவில், பாணமை வரைக்கும் சென்று மெதடிஸ்த மிஷன் பாடசாலைகளை அமைத்து இப்பிரதேசங்களில் கல்வி என்னும் அமுதினை கனிவோடு ஊட்டி ஆன்மீக விழிப்பையும் அதனூடே கலந்து சுவையூட்டினர்.

அதனைத் தொடர்ந்து வந்த பணிக்காலத்தில் திருக்கோவில் திருச்சபையாக விநாயகபுரத்திலே திராக்கேணி எனும் கிராமத்தை பணித்தளமாகக் கொண்டு கல்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

1990 களில் இலங்கையில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளால் திருக்கோவில் பிரதேசம் பெரும் ஆபத்தை எதிர்நோக்கிய வேளையில் திருச்சபைக் குருவானவர்கள் ஒன்றுசேர்ந்து சமாதானக் குழுவை அமைத்து, சமாதானத் தூதுக்குழுவாக இராணுவத்தினரை சந்தித்து சமாதான உடன்பாடொன்றை செய்துகொண்டதன் பயனாக திருக்கோவில் பிரதேசத்துக்கு ஏற்பட இருந்த பெரும் அழிவு தடுக்கப்பட்டதோடு தமிழ் இளைஞர்கள், யுவதிகள், பாதுகாக்கப்பட்டனர்.

2000களில் தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு பகுதிகளில் மீளக் குடியேறிய மக்களின் வாழ்வாதார தொழிலான விவசாயத்துறையை விருத்தி செய்வதற்காக பல இலட்சம் ரூபா செலவில் 5 பாரிய விவசாயக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

விநாயகபுரம், பாலக்குடா பகுதியில் கல்விப் பணியோடு ஆன்மீகப் பணியையும் முன்னெடுக்கும் நோக்கோடு பகல் பராமரிப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு சின்னஞ்சிறார்களுக்கு போசாக்குணவு வழங்கப்பட்டதோடு, கல்வியறிவும் ஊட்டப்பட்டு வருகிறது. தற்போது அப்பகுதி நற்செய்திப் பணித்தளமாக செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

2004 களில் சுனாமி பேரலையின் தாக்கத்தை எதிர்கொண்ட மக்கள் மீட்புக்காக மெதடிஸ்த திருச்சபையினால் 25 புதிய கல்வீடுகளையும், 25 புனரமைப்புச் செய்யப்பட்ட வீடுகளும் சபை மக்களுக்கு கையளிக்கப்பட்டன. திருக்கோவில் பிரதேச மக்களில் கணிசமான பகுதியினர் மீனவத் தொழிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டவர்கள், சுனாமியின்தாக்கத்தினால் மீன் பிடி வள்ளங்களையும், வலைகளையும் இழந்து சோர்வோடிருந்த மீனவர்களுக்கு 25 நவீனரக மீன்பிடி வள்ளங்களும், வலைகளும் வழங்கப்பட்டு, மீனவர் சங்கமும் அமைக்கப்பட்டு மீனவத்தொழில் மேம்பாட்டுக்கு புத்தூக்கமும் வழங்கப்பட்டு வருகின்றது.

திருக்கோவில் வாழ் மக்களின் சிறு கைத்தொழிலை விருத்தி செய்யும் நோக்கோடு நெசவு நிலையம் அமைக்கப்பட்டு யுவதிகளுக்கான நெசவுப் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு கைத்தறி படுக்கை விரிப்புக்கள், துவாய்கள், மேசை விரிப்புக்கள் போன்றன உற்பத்தி செய்யப்படுகின்றன.

திருக்கோவில் பிரதேசத்தில் வாழும் படித்த இளைஞர், யுவதிகளின் கணனி அறிவை மேம்படுத்தும் நோக்கோடு, மெதடிஸ்த கணனி வள நிலையம் அமைக்கப்பட்டு இளைஞர், யுவதிகளுக்கு தகுந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு சமகால வேலை உலகிற்கு தயார்படுத்தப்பட்டு வேலை வாய்ப்பும் பெற்றுள்ளனர்.

பாடசாலைக்கல்வியை இடைநடுவில் நிறுத்திய மாணாக்கரின் சுயதொழில் வாண்மையை விருத்தி செய்யுமுகமாக,

*உழவு இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறி*
*பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி திருத்தும் பயிற்சி*
*மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சி*

போன்ற பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டு பிரதேசவாசிகளுக்கு தேவையான சுயதொழில் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

பிரதேசவாசிகளின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தற்போது ஆட்டோ திருத்தும் தொழிற்கூடமும், ஒட்டுவேலை, வர்ணப் பூச்சு வேலை, குளிர்சாதனப் பெட்டி, இலத்திரணியல் உபகரணங்கள் திருத்தும் வேலை போன்றனவும் நடைபெறுகின்றன.

கடந்த கால யுத்த சூழ்நிலைகளால் பெற்றோரை இழந்த சிறார்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்கவும் கல்விபெறும் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுப்பதற்காக 1988களில் ஆண்கள் விடுதி ஒன்றும், 2008ல் அக்கரைப்பற்றில் சிறுமியர் நலன்புரி நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு தேவையுடைய பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

2011ன் ஆரம்பத்தில் கிழக்கில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்ந்த திருச்சபை மக்களுக்கும், பின்தங்கிய பகுதிகளான பாலக்குடா, சின்னமுகத்துவாரம் போன்ற பகுதிகளில் வாழும் மக்களுக்கும் உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இவ்வாறு திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையின் சமுதாயப் பணிக்குழு மிக நீண்ட காலமாக சமுதாயத்தோடு ஒன்றிணைந்து, சமுதாயத்தின் தேவைகளை நிறைவுசெய்து சமூகத்தோடு கைகோர்த்து செயல்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கும் நிறைவாக கர்த்தரின் பணிகள் அனைத்தையும் சங்கத்தின் அங்கத்தவர்கள் ஊடாக வெளிப்படுத்தி அன்பையும், ஆன்மீகத்தையும், நல்லுறவையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும்,**

## திருச்சபையும் பெண்களும்

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தனது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதையிட்டு பெண்கள் சங்கம் பெருமையுடன் பூரிப்படைகின்றது.

இத்திருச்சபையின் பெண்கள் சங்க வரலாற்றினை உற்று நோக்கும்போது திருச்சபையின் ஆரம்பந்தொட்டு இன்றுவரை பெண்கள் சங்கம் பல பணிகளில் தங்களை ஈடுபடுத்தி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆரம்ப காலத்தில் அங்கம் வகித்த பெண்களின் எண்ணிக்கை சிறுதொகையாக இருந்தாலும் அவர்களால் செய்யப்பட்ட பணிகள் சிறப்பாக இருந்தது.

அந்நாட்களில் சபையில் மலிவு விற்பனை மற்றும் பிற செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தது. கடந்த பத்து வருடங்களில் இவர்களின் செயற்பாடுகளும், பங்களிப்புகளும் மிக அதிகரித்துள்ளது. வருட ஆரம்பத்திலேயே சங்க உறுப்பினர்களின் வீடுகள் சந்திப்பதோடு, ஜெபக்கூட்டம் வைப்பதும், நோயோடு வேதனையில் இருப்பவர்களுக்கும், மரணங்களை சந்தித்த உறுப்பினர்கள் இருப்பினும் அவர்களின் வீடுகளுக்குச் சென்று ஆண்டவருடைய ஆறுதலான வார்த்தைகளைக் கூறுவதோடு அவர்களுக்கான ஜெபங்களும் ஏறெடுக்கப்படும். அத்தோடு மட்டும் நின்றுவிடாது வைத்தியசாலையிலுள்ள நோயாளிகளைச் சந்தித்து அவர்களுக்காக ஜெபிப்பது போன்ற சமூதாயப் பணிகளிலும் பெண்கள் சங்கம் செயற்பட்டு வருகின்றது.

வருடாவருடம் நடாத்தப்படுகின்ற ஒன்றுகூடலில் வேதப்படிப்புகளிலும், விளையாட்டுக்களிலும், கருத்துப் பகிர்வதிலும் பெண்கள் அதிகளவில் பங்குபற்றினார்கள். அத்தோடு திருமாவட்டத்தினால் நடாத்தப்படுகின்ற ஒருநாள் கருத்தரங்கு, மற்றும் ஏனைய நிகழ்வுகளில் கலந்து பயனைப் பெறுதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். தங்களுடைய ஆன்மீக நிலையை ஆண்டவருக்குள்ளாக மேலும் கட்டியெழுப்பும் நோக்கோடு ஞாயிறு வழிபாடுகளை நடாத்துவதிலும் பங்களிப்புச் செய்து வருகின்றார்கள்.

மாதத்தின் முதல் ஞாயிற்றில் காலை உணவு விற்பனை செய்து, சேகர மட்டத்தில் மலிவு விற்பனை நடாத்தி, நிதி சேகரித்து பெண்கள் ஊழியத்திற்கு பயன்படுத்துகின்றனர். இச்செயற்பாட்டிலும் பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வருட இறுதியிலும் வாலிபர் சங்கமும், பெண்கள் சங்கமும் அவர்களுடைய நண்பர்களும் இணைந்து மகிழ்வான அம்சங்களுடன் ஒரு நாளைக் கழிப்பது குறிப்பிடத்தக்கது. திருக்கோவில் திருச்சபையின் ஆன்மீக வளர்ச்சி, சமூதாய பணிகளின் வளர்ச்சி போன்றவற்றில் பெண்களாக இணைந்து பணியாற்றுவதிலும் பெரு மகிழ்ச்சியடைவதோடு நூற்றாண்டு காணும் திருச்சபையினருக்கு இறையாசிகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



பெண்கள் சங்க உறுப்பினர்கள்

தேவனுக்குப் பயப்படுதல் என்பது

| | |
|---|---|
| - தீமையை விட்டு விலகுதல் | நீதி 8:13 |
| - ஞானத்தின் ஆரம்பம் | சங் 110:10 |
| - பொக்கிஷம் | நீதி 15:16 |
| - ஜீவ ஊற்று | நீதி 14:27 |
| - சுத்தமானது | சங் 19:9 |
| - என்றைக்கும் நிலைப்பது | சங் 19:9 |
| - பக்தியோடு தொடர்புடையது | எபி 12:28 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சபையில் வாலிபரின் பணி

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையின் வாலிபர்கள் திருச்சபையின் தூண்களாக நின்று செயற்பட்டு வருகின்றனர். திருச்சபையில் அநேக காரியங்களில் முன்னின்று உழைத்து வருகின்றனர்.

ஆலய முன்றலை அழகுபடுத்த வேண்டும் என்ற வாஞ்சைக்கமைய கற்களை வெட்டிப் பதித்து, பூச்சாடிகளை வெட்டி, அழகிய பூக்கன்றுகளையும் நட்டு, ஆலய வாசலை ரம்மியமான இடமாக மாற்றியுள்ளனர். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலைநேரங்களில் வந்து ஆலய வளாகத்தை சுத்தப்படுத்தி, ஆலயத்தினுள் அலங்கரிப்பு வேலைகளையும் செய்து அடுத்த நாள் ஞாயிறு வழிபாடு மிகவும் சிறப்பாக நடைபெற உதவுகின்றனர். இன்னுமாக இலங்கையின் பிற பாகங்களிலும், வெளிநாடுகளிலும் இருந்து எமது ஆலயத்திற்கு வருகை தரும் குழுவினரோடு இணைந்து நற்செய்திப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலைவேளையில் வேதப்படிப்புகளில் கலந்து கொண்டு ஆன்மீகத்திலும் இன்னுமாக வளர்ந்து வருகின்றனர். அத்துடன் மனமகிழ்வைத் தரும் உல்லாசப் பிரயாணங்களிலும் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்னிசை வழிபாடு, நத்தார், புதுவருட கால வழிபாடுகளை சிறப்பிப்பதில் வாலிபர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். ஆவிக்குரிய சுவிசேஷகூட்டங்களிலும் கலந்து கொண்டு ஆண்டவரின் வல்லமையை நிறைவாக அனுபவித்து வருகின்றனர். வழிகாட்டிகள் கூட்டங்களிலும் கலந்து கொண்டு ஆலய வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த இன்னும் அநேக புதுப்புது திட்டங்களை வகுத்துள்ளனர். இப்படியாக ஆண்டவரின் கிருபையால் வாலிபர்களின் பணி சிறப்பாக நடைபெறுகின்றது. ஆண்டவருக்கே துதியும், கனமும், மகிமையும் உண்டாவதாக.



*வாலிபர் சங்க உறுப்பினர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் எமது திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையின் நூற்றாண்டு விழாவினை மிக மகிழ்வுடன் கொண்டாடுவதனையிட்டு ஆண்கள் சங்கத்தினராகிய நாங்கள் பெருமிதம் அடைகின்றோம். முதலாவதாக இம்மட்டுமாக எமது திருக்கோவில் பிரதேசத்தில் எமது ஆலயத்தின் திருப்பணி வளர்ச்சியோடும், திருச்சபை பிள்ளைகளோடும் கூட இருந்து வழிநடத்திய ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை என்பது கடந்த நூற்றாண்டு காலமாக அனேக கிறிஸ்தவ விசுவாசிகளினால் கிறிஸ்துவின் தூய அன்பினால் கட்டப்பட்ட ஓர் ஆலயமாகும். அத்துடன் கிறிஸ்துவின் ஊழியப் பாதையில் அனேக திருப்பணியாளர்களை உருவாக்கியதோர் திருச்சபையாகவும் காணப்படுகின்றது. இங்கு ஆண்கள் சங்கத்தின் திருப்பணியும் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக காணப்படுகின்றது.குறிப்பாக திருச்சபைக்குள்ளே ஐக்கியத்தையும், திருச்சபையின் ஊழியத்தையும் கட்டியெழுப்புவதில் தனது முழு பங்களிப்பினை ஆண்கள் சங்கத்தினர் ஆற்றுகின்றனர். அத்துடன் புதிதான கிறிஸ்தவ விசுவாசிகளை திருச்சபைக்குள்ளே சேர்த்துகொள்ளும் பணிகளிலும் தங்களை அர்ப்பணித்துள்ளனர்

மேலும்.........

- ✞ மாதம் தோறும் ஆலயத்தில் ஒன்று கூடல் நிகழ்வுகளை நடாத்தி சங்கத்தின் பணிகள் தொடர்பாகவும், எதிர்கால திட்டங்கள் குறித்ததான கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளுதல்.
- ✞ வீட்டு ஜெபக்கூட்டம், உபவாச ஜெபக்கூட்டம், நோயாளிகள் சந்திப்பு
- ✞ ஆலய சிரமதான பணிகள்
- ✞ நற்செய்தி கூட்ட பணிகள்
- ✞ சமுதாய நலப் பணிகளை திருச்சபை ரீதியாக மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை திருச்சபையின் ஆண்கள் சங்கத்தினர் நடாத்தி வருகின்றனர்

எமது ஆண்டவர் ஓர் நோக்கத்திற்காக இந்த உலகில் எம்மை படைத்திருக்கிறார், அவருடைய சித்தத்தின்படியே வாழ நாம் திருச்சபைக்குள் அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஆகவே இந்த கிருபையின் நாட்களில் அவருக்குள் வாழ்ந்து அவருடைய வருகையில் பரலோக ராஜ்ஜியத்தினை சுதந்தரிக்கின்ற மக்களாக எம்மை நாம் உருவாக்கிக் கொள்ள அவருடைய பிள்ளைகளாகிய எம் ஒவ்வொருவர் மேலும் அவருடைய கிருபையும்,ஆசீர்வாதமும் என்றென்றைக்கும் சதா காலங்களிலும் கூட இருந்து வழிநடத்துவதாக.



ஆண்கள் சங்க உறுப்பினர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு பாடசாலையின் செயற்பாடுகள்

எமது திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையின் ஞாயிறு பாடசாலையில் முன்பள்ளி முதல் தரம் 11வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றது. ஒவ்வொரு ஞாயிறு வழிபாட்டின் பிற்பாடும் வகுப்புக்கள் நடைபெறுகின்றது கற்பிக்க ஆர்வமுள்ள வாலிபர்கள், பெண்கள் தாமாக முன்வருவர். அவர்களுக்கான நியமன வழிபாடு வருட ஆரம்பத்தில் நடைபெற்று பின் பாடத்திட்டம் அறிமுகம் செய்து ஞாயிறு பாடசாலையின் உன்னத நிலையினை விளக்கும் சில மணிநேர ஆசிரியர் கருத்துப்பகிர்வு நிகழ்வு வருட முற்பகுதியில் சேகர குருமார், வடக்கு கிழக்கு ஞாயிறு பாடசாலை செயலாளர், சேகர ஞாயிறு பாடசாலை பொறுப்பாளரால் முன்னெடுக்கப்படும்.

வடகிழக்கு திரு மாவட்ட அவையினால் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி பாடங்கள் கற்பிக்கப்படுகின்றது. ஒவ்வெரு தவணைக்கும் பரீட்சைகள் நடைபெறும் அத்துடன் மாணர்களுக்கான சுற்றுலா, கண்காட்சி, மெதடிஸ்த தின போட்டிகள், திறமை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் ஆகியன நடைபெறுகின்றது. இந் நிகழ்வுகளில் திறமையாக செயல்படுபவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும்.

ஞாயிறு பாடசாலை ஒழுங்குடன் நடைபெற பெற்றோர் முன்வந்து காலை உணவாக சிற்றுண்டிகளை வழங்கி ஊக்கப்படுத்துவதுடன் பிள்ளைகளை வீட்டு ஜெபக் கூட்டங்கள், ஆலய சிரமதானங்களில் பங்கெடுக்க ஊக்கப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் சில நற்செய்திப்பணிகளிலும் பங்குகொண்டும் செயற்பட்டும் வருகின்றனர்.

இன்னும் முழுமையாக சகல பெற்றோர்களும், வகுப்பு வழிகாட்டிகளும், சபையாரும் ஞாயிறு பாடசாலைப்பணிக்கு ஊக்கமளித்தால் குறிப்பாக,

- ஒழுங்கில்லாத பிள்ளைகளின் வரவுக்காக பெற்றோரைச் சந்தித்தல்,
- ஞாயிறு பாடசாலைக் கற்றலுக்கு முன்னுரிமை கொடுக்க பிள்ளையை ஊக்கப்படுத்தி முன்மாதிரி காட்டல்,
- ஆசிரியர் கற்பித்தலில் எதிர் கொள்ளும் சிக்கல்களை அறிதல், அவதானித்தல்.

போன்றவற்றிற்கு துணை நின்றால் இன்னும் முழுமையாகவும் சிறப்பாகவும் செயற்படலாம் என்பது ஆசிரியர்களின் கருத்தாகும்.



ஞாயிறு பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிஷனரிமார் உருவாக்கிய பாடசாலை அதிபரின் உள்ளத்திலிருந்து.......

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை தனது நூற்றாண்டு நிறைவை ஆண்டவரின் மேலான ஆசீர்வாதத்தினாலும், கிருபையினாலும் கொண்டாடும் இவ்வேளையில் திருக்கோவில் மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலய அதிபர் என்ற வகையில் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையின் நூற்றாண்டு விழா மலருக்கு எனது வாழ்த்தினையும், திருச்சபையின் நூற்றாண்டு விழா இனிது நிறைவேற எனது ஆசியினையும் கூறி, திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபைக்கும் இப்பாடசாலையின் வரலாற்றின் வளர்ச்சிக்கும் உள்ள உறவை இம் மலரினூடாக எனக்குத் தெரிந்தவைகளைப் பகிர்வதில் ஆனந்தமடைகின்றேன்.

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை மூலம் தான் இப்பாடசாலையின் வரலாறு ஆரம்பமாகின்றது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக திருச்சபைக்கும் பாடசாலைக்குமிடையேயுள்ள உறவு நீடித்துக் கொண்டிருப்பதை தற்போதும் காணக்கூடியதாக உள்ளது. திருக்கோவில் பிரதேசத்தில் ஒரு கல்விக்கூடத்தை அமைத்த பெருமை இத்திருச்சபைக்கே உரியதாகும்.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட இந்து சமயத்தைச் சேர்ந்த கந்தையாச் செட்டியார் யாத்திரிகராக இங்கு வருகை தந்து அறப்போரான் R.W.அரியநாயகம் அவர்களின் பாட்டியை திருமணம் செய்தார். இதனால் 1880 இல் Rev.ரொபட், Rev.பான்ஸ் இருவரும் அப்போது கல்முனை திருச்சபையினை வழிநடத்திக் கொண்டிருந்தனர். இவர்கள் மூலம் கந்தையாச் செட்டியார் ஞானஸ்நானம் பெற்று யோசுவாச் செட்டியார் எனும் பெயருடன் உபதேசியராக நியமிக்கப்பட்டார். 1881 இல் முதன்முதலாக தமிழ் பேசும் போதகராக Rev.J.பேரின்பநாயகம் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவ்வேளையில் திருச்சபைக்குரிய காணியில் ஒரு ஓலைக்குடிசை அமைத்து 14 மாணவர்களுடன் ஒரு பாடசாலை உருவானது. அதற்கு யோசுவா செட்டியார் தலைமை ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டார். 1950-55 ஆண்டுகளில் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு வரை (S.S.C) வகுப்புகள் இருந்தன.

பின்னர் தம்பிலுவிலைச் சேர்ந்த சோமசுந்தரம் அவர்கள் அதிபரானார். 1961ற்குப் பின்னர் அதிக காலங்கள் S.A செல்வநாயகம் என்பவர் முகாமையாளராக கடமை புரிந்தார். இவருக்கு திருச்சபையினரே ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கினர். இவர் மட்டக்களப்பு தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராஜன் செல்வநாயகத்தின் தந்தையாவார். 1961 இல் பல நிபந்தனைகளை திருச்சபையினர் அரசுக்கு விடுத்தனர். அதனை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு இப்பாடசாலையை அரசுடைமை ஆக்கினர். இப்பாடசாலையின் பெயரை மாற்றக்கூடாது என்பதும், காணியைச் சுவீகரிக்கக்கூடாது என்பதும் அந்நிபந்தனைகளாகும். அதற்குப் பின்னர் திரு.நாகமணி, திரு.E.தங்கராசா, திரு.M.Y.அழகையா, திரு.S.R.கதிர்வேற்பிள்ளை, திருமதி.M.F.S.அழகையா, திரு.M.சுப்பிரமணியம், திரு.S.V.அரசரெட்ணம், திரு.K.கோபாலபிள்ளை, திரு.A.திலகரெட்ணம், திரு.N.குகதாசன் ஆகியோர் அரசினால் அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். 1992 இல் நான் பொறுப்பேற்றபோது 315 மாணவர்களும் 05 ஆசிரியர்களும் 03 சிறிய கட்டடங்களும் காணப்பட்டன. தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை வகுப்புகள் இருந்தன. பின்னர் 1993 இல் தரம் 06 வகுப்பு உருவாக்கப்பட்டு பாடசாலை தரமுயர்த்தப்பட்டது. திரு.J.திவ்வியநாதன் பாராளுமன்ற உறுப்பினரால் 80x20 கட்டடமும், பாடசாலைத்தரமும் உயர்த்தப்பட்டது. பின்னர் 1996ல் க.பொ.த சாதாரண தர வகுப்பு வைக்கப்பட்டு மார்கழி மாதப் பரீட்சையில் சகல மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோவில் புத்திரன் கனகரெத்தினம் சின்னத்தம்பி

யாழ் மண்ணிலிருந்து.....

## பயன் தர வெழுந்த நூற்றாண்டு விருட்சம்

நீலக் கடல் துள்ளிக் களைத்தே
நுரைதள்ளி மூச்சிரைத்து
கரைதொட்டு ஒய்வெடுக்கும்
கடல் தழுவு தேனாடு.

வங்கக் கடல் முத்தாம்
ஈழமணித் திருநாட்டின்
கீழ்க்கரைச் சொத்தாய்
அம்பாறை தனிலமைந்த
திருக்கோவில் நல்லூராம்

'வேல் திரும்பிய' அற்புதத்தால்
திருக் கோவிலான பதியென்றே
நீளவுரைத்திடும் பெருமையெலாம்
'மனந்திரும்பிடு' காரணத்தால்
தேவசபை தழைத்தது
தொல்பதி திருக்கோவிலெலாம்.

தேவ செய்தி தாங்கி வந்த
ஊழியர் உழைப்பாலே,
" பிதாவெனை அனுப்பினதைப் போல
உங்களையும் யான் அனுப்புகிறே" னென்ற
மனுக்குல மீட்பராம்
யேசு வுரைத்த மொழி
உள்ளத் திருந்தி
பணி செய்திட்ட
உத்தமர்தம் பணியினாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மண்தனிலே
"மெதடிஸ்த திருச்சபை"
உதித்தது; வளர்ந்தது உயர்ந்ததுவே
திருக்கோவில் பதிதனிலும்
திருச்சபைதன் கிளைவிரித்து
நூற்றாண்டு கடந்தது காண்.

மிசனரியார் தியாகம்,
மக்கள்தம் விசுவாசம்,
யேசுநாதன் ஆசியெலாம்
இறை கிருபை சேர்த்துத்தர
பெருவிருட்ச மாகியதே
எங்கள் திருச்சபை

யோசுவா செட்டியார்,
சந்தோஷம்; மேரி,
கனகரெத்தின உபதேசியார்
ஞானம்மாவென
மெதடிஸ்த திருச்சபை
வேர்கொள்ள உழைப்பீந்த
உத்தமர் பலரே

மதமாற்றமன்றி
உண்மை மனமாற்றமே
பயனளிக்குமென்ற
கொள்கைதனை
முன்னிறுத்தி
மக்கள் தம்
உள்ளமாம் நிலமுழுது
தேவ செய்தியாம் நல்விதைதூவி
விசுவாசப் பயிர் வளர்த்த
திருச்சபை வாழியவே.

உலகத்தார் பாவங்கழுவி
இரட்சிப்பை ஈவதற்காய்
விண்ணுலகு விட்டு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தூய யேசு" வழிதனிலே
உண்மை மார்க்கந்தனைப்பேசி
ஜீவ விடுதலை காட்டுகின்ற
மெதடிஸ்த சபை வாழியவே

பாவப்பட்டு அல்லற்படும்,
நோயுற்று துன்பப்படும்,
வறுமையிற் சிக்கித் துயரமுறும்
ஆத்மாக்கள் விடுதலைக்காய்
புனித பணி தொடருங்கள்
எந்தை இயேசுவின் இரண்டாம் வருகையை
எதிர்பார்க்கும் வேளையில்
"அறுப்புமிகுதி வேலையாட்களோ குறைவு"
என்பதை உணர்ந்து எம் கடமையைச் செய்ய
இன்றே புறப்படுவோம் நாமே.

சமயப் பணியோடு
சமூகப் பணியுங்கொண்டே
ஆன்மப் பணியோடு
அறிவுப் பணியுங்கொண்டே
திருக்கோவில் திருச்சபை
பல்லாண்டு வாழட்டும்

இறையாசி வேண்டி
நல்வாழ்த்துத் தருகின்றேன்
'எமது' எனும் பூரிப்பால்
புது வாழ்த்துத் தருகின்றேன்
உயர்ந்ததெனு முணர்வாலே
உள வாழ்த்துத் தருகின்றேன்
திருக்கோவில் திருச்சபை
வாழிய வாழியவே.

*க.சின்னத்தம்பி*
*திருக்கோவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் புத்திரன் எட்வேட் ஞானராஜா
## மீன்பாடும் தேனாடாம் மட்டு நகரிலிருந்து.......

### திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை கொண்டாடும் நூற்றாண்டு விழாவுக்காக...

எங்கும் எதிலும் நல்லதைக் கண்டு, நல்லதைச் செய்து நல்ல காரியங்களுக்கு வரவேற்புக் கொடுத்து ஆன்மீக பணிக்கும் அபிவிருத்திக்கும் அதிக ஒத்தாசை வழங்கி சமூதாயத்துக்குள் புகுந்து நன்நெறிகளான கிறிஸ்தவ பண்புகளை நெறிப்படுத்தி நற்பெயர் பெற்று வருகின்ற திருச்சபைகளில் எமது கிராமத்தில் உள்ள திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையும் ஒன்றாகும்.

இந்த திருச்சபையானது நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது பெரும் மகிழ்சிக்குரிய விடயமாகும். கிறிஸ்தவ மிசனரிமார்களின் பெருமை மிக்க ஊழியத்தில் இருந்தே இந்நூற்றாண்டு விழா அமைகின்றது. இங்கு கடமையாற்றிய குருமார்கள் அனைவரும் மிகத் தெளிவான முறையிலும் சிறப்பான முறையிலும் பணியாற்றி வந்தமையே இந் நூற்றாண்டு விழாவிற்கு ஓர் உந்து சக்தியாக விளங்குகின்றது. இன்று இவ் விழாவை சிறப்பாக நடாத்துவதற்கு முன்னோடியாக பல முக்கிய விடயங்களை ஆன்மீகத்தோடு கலந்து நடத்திக் கொண்டிருப்பது இன்றைய ஊழியக்காரரின் திறமையை வெளிப்படுத்துகின்றது. இவ் விழாவிலே நூற்றாண்டு மலர் வெளியீடு, அகில இலங்கை ரீதியான கட்டுரைப் போட்டி, இயேசு சுகமளிக்கும் நற்செய்தி கூட்டம், இன்னும் பல சிறப்பான நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இந்நூற்றாண்டு வெளிவருவதே இந் நிகழ்வுகளின் மூலம் அகில இலங்கை ரீதியிலே நமது சேகரத்தின் பெருமையும் ஆன்மீக பணிகளையும் வெளிப்படுத்துகின்ற சாதனங்களாக அமைந்திருக்கின்றதை நாம் அறியலாம்.

எனவே நூற்றாண்டு விழா சிறப்புற பாடுபட்டுக் கொண்டிருக்கும் குருவானவர் முதற் கொண்டு அனைத்துப் பங்காளிகட்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு மேலும் திருக்கோவில் மெதடிஸ்த ஆலய நூற்றாண்டு விழா தொடர்ந்து நீடுழி வாழ்க என வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

*– நன்றி –*

R.E.ஞானராசா
ஓய்வு பெற்ற அதிபர்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் புத்திரன் வ.பிரபாகரன் கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலையில் இருந்து......

### வாழ்த்துச் செய்தி

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை நூறு ஆண்டுகளைக் கடந்து கிறிஸ்து என்கின்ற நற்செய்தியை நாற் புறமும் எடுத்துதியம்புகின்ற இந்நாட்களில் கடந்து வந்த வரலாற்று தடங்களை பின்னாகப் பார்க்கின்ற போது மிசனரிகளும் தொடர்ந்த பணியாளர்களும் ஆற்றிய சேவைகள் என்றுமே மறக்கப்பட முடியாதவை.
களுவாஞ்சிக்குடி, மண்டூர் இணைப்பைக் கொண்ட எனது தாயினுடைய தகப்பனாரும் தாயும் திருக்கோவிலில் பணியாற்றத் தொடங்கியதோடு எங்களுடைய குடும்பமும் திருக்கோவில் திருச்சபையோடு ஒன்றிணைந்தது.

தம்பிலுவிலைக் பிறப்பிடமாகவும் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த எனது தகப்பனார் தனது கல்வியை முடித்த காலகட்டத்தில் இயேசுகிறிஸ்துவை அறிந்து திருச்சபையோடு தன்னை இணைத்துக் கொண்டார். எனது அம்மம்மாவின் தகப்பனார் கார்த்திகேசு உபதேசியார், அவருடைய மனைவியின் வழிநடத்தல் அம்மம்மா மூலம் அவர்களின் பிள்ளைகளிற்கும் பேரப்பிள்ளைகளிற்கும் கிடைத்தது என்பதில் சந்தேகம் இல்லை. இதனால் அவரும் அவர் சேர்ந்த குடும்பமும் பல்வேறு ஊழியர்களின் காலங்களில் திருப்பணிகளில் குடும்பமாக ஈடுபட்டனர்.

தம்பிலுவிலில் அமைந்த மெதடிஸ்த மிஸன் பாடசாலையில் எனது தாயார் ஆசிரியராக கடமையாற்றிய போது திருக்கோவிலில் இருந்து மாட்டுவண்டியில் (வக்கிக்கரத்தை) பயணிக்கும் போது இடையில் பல மாணவிகளை ஏற்றிச் செல்வாராம் ஏனெனில் பெண்கள் படிப்பதை கேலி செய்ய அந்நாட்களில் ஒரு கூட்டமே இருக்குமாம். பின்னர் அப் பெண்கள் ஆசிரியைகளாகி எனது தாயாருடனே கடமையாற்றியிருக்கிறார்கள். அவ்வாறு பலர் கல்வியைத் தொடர்வதற்கும் வாழ்க்கையில் மேலோங்குவதற்கும் மெதடிஸ்த மிஸன் பாடசாலைகள் உதவியிருக்கின்றன என்றால் அது மிகையல்ல.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை சுயாதீனம் பெற்ற காலங்களில் திருச்சபை நிதி நெருக்கடியை எதிர் நோக்கிய போது திருக்கோவில் திருச்சபையும் பல்வேறான பொருளாதார கஷ்டங்களை எதிர் நோக்கியதாகவும் ஊழியர்களைத் தாபரிக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும் எனது பெற்றோர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

திருக்கோவிலில் கடமையாற்றிய குருமாரிற்கு மோட்டார் வாகனம் (கார்) இல்லாத கட்டத்தில் கிறிஸ்மஸ், ஈஸ்டர் நாட்களில் பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்று வரை வாடகை வண்டியை கூலிக்கு அமர்த்துவதற்கே பல நாட்களை எனது தகப்பனார் செலவிட்டதாக எனது ஞாபகம்.

பெரிய வெள்ளி மூன்று மணி நேர ஆராதனை திருக்கோவிலில் மட்டும் நடைபெற்ற காலமாக இருக்க வேண்டும் என நம்புகின்றேன்: பல ஊழியர்கள் முன்னரே வந்து எங்கள் வீட்டில் உரையாடுகின்ற போது ஊழியங்களைக் குறித்தும் வேதவியாக்கியானங்களை பகிர்ந்து கொள்வதும் அவ்வப்போது நடைபெறும் காரியங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் மாத ஞாயிறு ஆராதனை ஒழுங்குகள் அடங்கிய பட்டியல் எங்கள் வீட்டில் தொங்க விடப்பட்டிருக்கும். அதில் உள்ள பெயர்களை அடிக்கடி பார்த்ததனால் என்னவோ இன்றும் சிலரின் பெயர்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

ஆலயத்தின் பின்புறமாக உள்ள ஞாயிறு பாடசாலைக் கட்டிடம் அருட்கலாநிதி D.T. நைல்ஸ் அவர்களால் திறக்கப்பட்டது. அருட்திரு C.J டானியல் அவர்களின் காலத்தில் அடிக்கடி நற்செய்தி ஊழியங்களிற்காக பலர் வருவதும் அவர்களிற்கான விருந்தோம்பலை திருச்சபை மக்கள் தமது வீடுகளில் நேரசூசிக்கு அமைய பகிர்ந்து கொள்வார்கள். அக்கால கட்டத்திலேயே பல்லவிகள் (Chorus) எனக்கு அறிமுகமானதாக ஞாபகம்.

திருக்கோவிலில் ஆண்டு விழா அருட்திரு P. பெஞ்சமின் காலத்தில் ஆலயத்திற்கு அருகான எங்கள் வீட்டு வளவில் நடைபெற்றது. அதற்கு முன்னர் ஆண்டு விழாக்கள் நடைபெற்றது குறைவாக இருக்க வேண்டும்.

22 வருடங்கள் சேகர உக்கிராணக்காரராக எனது தகப்பனார் இருந்த காரணத்தினால் சபைகளின் பங்குப் பணம் ஒரு சதம் இரண்டு சதம் உட்பட்டதாக கொடுக்கப்படுகின்ற போது அவற்றை சேகரித்து அவற்றை மாற்றிக் கொடுப்பதிற்கு என ஒழுங்கு முறைகள் வைத்திருப்பார். இப்போது நினைத்துப் பார்க்கையில் அவை தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

குருமனையை அடுத்த வீடும் வளவையும் பாதுகாப்பது பராமரிப்பது போன்றவற்றிலும் அவ் வீட்டில் வாடகைக்கு குடியமர்ந்தோரிடமிருந்து அதை மீளப்பெறுவதிலும் திருச்சபை பல கஷ்டங்களை எதிர் நோக்கியது.

வில்லுப்பாட்டு, நாடகம், நாட்டுக்கூத்து மூலமான நற்செய்திச் செயற்பாடுகள் திருச்சபைக்குள்ளும் வெளியிலும் அன்று தொடக்கம் இன்று வரை தொடர்கிறது.

நூற்றாண்டு விழாவை நினைவுகூருகையில் நம் நாட்டைச் சாராதவர்களும், சார்ந்தவர்களும் இயேசுவின் அன்பை பெற்று அனுபவித்து நமக்கும் பகிர்ந்துள்ளார்கள். தொழிநுட்பங்களும் வசதிவாய்ப்புகளும் அதிகரித்து உள்ள இந்நாட்களில் நாம் செய்ய வேண்டியவையும், செல்ல வேண்டியவையும், சொல்ல வேண்டியவையும் மிக அதிகமாகவே உள்ளன சவால்களை எதிர் கொள்ள இறைவன் தாமே நம் அனைவரிற்கும் ஆசியை தருவாராக. ஆமேன்.

**வடிவேல் பிரபாகரன்,**

**கல்முனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவில் புத்திரன் R.புஸ்பராஜன் மலையகத்தின் தலைநகர் கண்டியிலிருந்து......

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையானது தனது நூறாவது நிறைவைக் கொண்டாடுகிறது என்கிற போது சர்வவல்ல ஜீவனுள்ள கர்த்தராம் இயேசுக் கிறிஸ்துவுக்கு மகிமை செலுத்துவதோடு எபே 5:27ன்படி "கறைதிறை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல், பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும், தம்மைத்தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார்" என்கின்ற சத்தியத்தைக் கருத்திற் கொண்டு நேரத்தைப் பாராது இறைபணிக்காக உழைத்த ஒவ்வொரு மிசனறிமார்கள், போதகர்கள், ஊழியர்கள், சபை மக்களுக்கும் தனது தலையை உயர்த்தி உள்ளம் நிறைந்த நன்றியை செலுத்தி எல்லாம் வல்ல இறைவனுக்கு புகழ்மாலை சூடுவது போல ஒருநிகழ்வொன்றை என்மனம் உணர்கிறது.

மலையகம் முழுவதும் இதைத்தவிர இலங்கைக்குள் பல இடங்களுக்கும் சென்று கர்த்தரின் நாமத்தை ஊழியத்தில் உயர்த்துவதற்கு எனக்கு தாய் சபையாக இருந்ததையும் நான் மறப்பதில்லை. இன்றைக்கு திருக்கோவில் பகுதிக்கு பல இடத்தில் உள்ள மக்கள் வந்து குடியமர்வதற்கும், இக்கிராமத்தைப் பலர் அறிந்திருப்பதற்கும், சபைக்குள்ளும் வெளியிலும் பல பிரச்சனைகள் வந்தபோதும், யுத்தங்களை சந்தித்தும், சுனாமி என்கிற பேரழிவுக்குள் சபை மக்களுக்கு பாதுகாப்பான அடைக்கலமாக இருந்தும் வெற்றி நடைபோட்டு நூறு ஆண்டு நிறைவைக் கொண்டாடும் உன்னை யார் வாழ்த்தாமல் இருக்க முடியும்.

மட்டுமல்ல சிறப்பான சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்ப மதங்களைக் கடந்து பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும், வசதியில் குறைந்த குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்குமென்று வழங்கப்படுகின்ற கல்விச் சேவை விஷேடமானதே, இன்னும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு வழங்கும் சேவை, இன்னும் உதவி தேவைப்படுவோருக்கு வழங்கும்சேவை என்பது போற்றப்பட வேண்டும்.

திருச்சபையின் திருப்பணி ஊழியத்தில் பல தலைவர்கள் உருவாவதற்கும் பல கிளை சபை தோன்றுவதற்க்கும் காரணமாக அமைந்திருக்கின்றது. இப்பணியானது தொடரட்டும் ஆண்டவரின் நாமம்மகிமைப்படட்டும் என சபையை வாழ்த்துவதோடு, இந்த சந்தர்ப்பத்தை தந்த சபையின் நிருவாக குழுவினருக்கும் சபை போதகருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேன்.

**இறைபணியாளர்**
R. புஸ்பராஜன்
**வெளிச்ச வீடு ஆலயம**
**கண்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்றாண்டு நிகழ்வுகளிலிருந்து...

### 01. ஆய்வுக் கட்டுரை

திருக்கோவில் மெதடிஸ்த சபையின் நூற்றாண்டு விழாவிற்காக நடாத்தப்பட்ட வடக்கு-கிழக்கு திருமாவட்ட ரீதியிலான கட்டுரைப் போட்டியின் அறிக்கை.

திருக்கோவில் மெடிஸ்த தேவாலயத்தின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடும் முகமாக நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியானது வடக்கு-கிழக்கு திருமாவட்டத்திலுள்ள அனைத்து மெதடிஸ்த தேவாலயங்களுக்கும் அறிவிக்கப்பட்டது. இதில் பல மெதடிஸ்த தேவாலயங்கள் பங்குபற்றியதை இட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கிறிஸ்தவ பணியில் ஆன்மீகமும் அபிவிருத்தியும் எவ்வாறு பரவியுள்ளது என்பதை பலர் இக்கட்டுரையின் மூலமாக தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

கிறிஸ்தவ பணியில் ஆரம்ப காலம் முதல் இன்றைய வரைக்கும் அபிவிருத்தியின் மூலம் ஆன்மீகம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. என்பதை இக்கட்டுரைகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதோடு இக்கட்டுரையில் பங்குபற்றிய அனைத்து எழுத்தாளர்களுக்கும் கட்டுரைக் குழுவினரின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதோடு மேலும் இப்படியான விடயங்களில் பங்குபற்றி நமது கிறிஸ்தவம் மனிதனை மேலோங்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கட்டுரைப் போட்டி முடிவுகள்

1ம் இடம் : திரு.சுரேந்திரன் இராசநாயக
2ம் இடம் : திரு.T.விதுஜியன்
3ம் இடம் : செல்வி. T.E.வினோதீபா
4ம் இடம் : திரு.C.டானியேல்
5ம் இடம் : செல்வி.S.வசந்தகுமாரி
6ம் இடம் : செல்வி.T.அகலியா

**ஆய்வுக் கட்டுரைக் குழுவினர்,**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் 1ம் இடத்தைப் பெற்ற கட்டுரை..



### " கிறிஸ்தவ பணியில் அபிவிருத்தியும் ஆன்மீகமும் "

அருள்நாதர் கிறிஸ்து இயேசுவின் வல்லமைமிக்க நாமத்தினாலே இந்த ஆய்வுப் பெரும்பாதைக்கு உங்கள் யாவரையும் கிறிஸ்துவின் நெருக்கி ஏவும் அன்பினாலே வாழ்த்தி வரவேற்பதில் பேரானந்தம் அடைகின்றேன். காலத்திற்கேற்ற கருத்தான தலைப்பு. மிகுந்த வல்லமையோடு தமது மாட்சிமையில் இறுதியாக வரவிருக்கும் கர்த்தாதி கர்த்தருக்கு முன்பாக நாம் அனைவரும் ஒப்புவிக்க வேண்டிய உள்ளங்கை நெல்லிக் கனியான உண்மைத் தலைப்பு.

ஆம்! கிறிஸ்தவப் பணியில் இன்று வளர்ந்த நம் அனைவருக்கும் தொன்றுதொட்டே அபிவிருத்தியும், ஆன்மீகமும் பற்றியதான திறனாய்வில் பெருத்த சிந்தனைக் கடலில் அலைகள் தொடர்ச்சியாக மோதிக் கொண்டே இருக்கின்றன. நூற்றாண்டு விழாக் காணும் இம்மாபெரும் திருஅவையின் உறுப்பினர்களாக, சரியான இலக்கு நோக்கிய பயணத்தில், சபைமக்கள் யாவரும் அடியானுடன் கைகோர்த்து திருஅவையின் பிறந்த நாள் பாடசாலை (Happy BirthDay Song) இசைத்தபடியே, அபிவிருத்தியும் ஆன்மீகமும் எவ்வாறாக பயணிக்கின்றன என்ற தேடலில் முத்துக் குளிக்கப் போகின்றோம். வாருங்கள் என்னுடன் பயணிக்கலாம்.

ஆம்! 1703ம் ஆண்டு ஜுன் மாதம் 17ம் திகதி அதிகாலை பிரித்தானியாவின் "லிங்கஷர்" நகரில் 15வது பிள்ளையாக ஒரு குடும்பத்திலே சிசுவொன்று தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்தது. வரும் போதே அக்குழந்தை தேவனுடைய வலப்பக்கத்தில் விழுந்திருக்க வேண்டும். ஏனெனில் உலகத்தை கலக்கிறவனாக இங்கேயும் இந்த ஆண்பிள்ளை கர்த்தரினால் கனம் பெற்றிருக்கவேண்டும். போதகத் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் தனது எட்டாவது வயதிலே நெருப்பிலிருந்து பிடுங்கப்பட்ட எரிகங்குவாகத் தப்பிப் பிழைத்திருக்க நியாயமில்லையே! "வாழ்வின் இரவுச் சூழல்களில் தேவனால் மீட்கப்படுவோர் வாழ்வின் விடியலை ருசிப்பது உறுதி" என்ற ஞானி எமர்சனின் பொன் வார்த்தைகளுக்குள் எத்தனை உண்மைகள் பொதிந்திருக்கின்றன. அன்று ஆரம்பித்த அந்த இறை ஊழியனின் அடிச்சுவட்டில் கால் பதித்தவர்களாக ஆயிரமாயிரம் ஊழியர்கள் உதயமாயினர். "மண்ணின் வரலாற்று ஏட்டில் பிரபுக்கள் பதியலாம் ஆனால் விண்ணின் வரலாற்று ஏட்டில் விசுவாசிகளே பதியப்படுவாரென்ற" ஜோன் ஸ்ரொட் (Johnstod) அவர்களின் உண்மை வார்த்தைகளுக்கமைய உலகின் சிறிய தீவாகக் கணிக்கப்படும் நமது இலங்கைத் திருநாட்டிலும், தேக ஊழியர்களின் தலைவராகக் கணிக்கப்பட்ட 'தொமஸ் கோக்' அவர்களின் தலைமையில் புறப்பட்டோரில் ஒருவராகக் கிழக்கு மாகாணத்தில் கால் பதித்தவரே வில்லியம் ஓல்ட் ஐயராவார்.

அன்று பதிக்கப்பட்ட காலடிகளின் சுவடுகளில் தடம் பதித்து, இன்று முத்திரையிடப்பட்ட மெதடிஸ்த திருச்சபைகளாக கிழக்கு மாகாணத்தில் மிளிர்பவைதான் எத்தனை! எத்தனை! மாறாக, இன்று நாம் சிந்திக்கும் திரு அவைப் பணியின் அபிவிருத்தி, ஆன்மீகத்துக்கும், அன்றைக்கு மெதடிஸ்த மிஷனரிகளால், இலங்கை வாழ் ஊழியர்களினால் சந்திக்கப்பட்ட அபிவிருத்தி, ஆன்மீகத்துக்கும் இடையே பாரியளவு வேறுபாட்டுத் தடயங்கள் காணப்பட்டேயுள்ளன என்ற சொற்றொடரில் இரண்டு கருத்துக்களுக்கு நிச்சயம் இடமிருக்கவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தேவனின் திட்டங்களைக் குழியில்போட்டுமூட உலகின் அதிகாரக் கரங்களால் ஒருபோதும் இயலாது” என்ற அனுபவமிக்க இறையியலாளர்களின் கூற்றுப்படி “கிறிஸ்தவப்பணி”யென்ற மாபெரும் திட்டம் மனித சிந்தனையினால் ஒருபோதும் இடப்படவில்லையென்ற பெருமையை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆக மொத்தத்தில் இன்று நாம் காணும் தலைப்பானது. கிறிஸ்தவப்பணியென்றும், கிறிஸ்தவப்பணிக்கு ஊடாக அபிவிருத்தியென்றும், அபிவிருத்திப் பணிக்கு ஊடன ஆன்மீகமென்றும் ஒருமுக்கோணப் பார்வை கொண்டதாகவே நோக்க வேண்டடியுள்ளது என்பது நாம் அனைவரினதும் தெளிவான நிலைப்பாடாகும்.

இக்கருத்தினை மென்மேலும் விரிவாகக் கூறப்போனால் வரையப்படும் ஒரு முக்கோணமொன்றின் மூன்று முனைகளிலும், கிறிஸ்தவப் பணியென ஒருமுனையில் எழுதினால், மறுஇருமுனைகளிலும் அபிவிருத்தியும, ஆன்மீகமும் குறியிட்டு நிற்கும். அபிவிருத்தியென்றமுனையிலிருந்து நோக்கினால் கிறிஸ்தவப் பணியும், ஆன்மீகமும் என்பது பிரகாசமாக மிளிரும். அதே சந்தர்ப்பத்தில் ஆன்மீகம் என்ற முனையிலிருந்து நோக்கினால் அபிவிருத்தியும், கிறிஸ்தவப் பணியுமென்பது துலாம்பலமாகத் தெரியும். ஆக ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரித்தறிய முடியாதளவுக்கு ஒத்திசைவான பண்புகளை மறைமுகமாகத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்கும் அற்புதமான பண்புகளை நாம் இனங்கண்டு கொள்ளலாம். மிகவும் விலையேறப்பெற்ற இம் மூன்று முத்துக்களிலும் முதன்மைத் தெரிவாய்வுக்கு உட்படுத்துவதுகிறிஸ்தவப்பணி. கிறிஸ்துவின் பணியில் உண்மையான மீட்பினை அடையாளம் கண்டு கொண்ட பவுல் “தாமதமின்றி” கிறிஸ்துவே இரட்சகர் எனத் தைரியமாகக் கூறி கிறிஸ்தவப் பணியை ஆரம்பிக்கிறார். [அப்போஸ்தலர் 9:20] ஏனெனில் இத்தலைப்பின் மகத்துவங்களை வார்த்தைகளினால் விபரிக்கவும் முடியாது எழுத்துக்களினால் வடிக்கவும்கூடாது. உலகின் கழுகுக்கண்களுக்கு கிறிஸ்தவப்பணியென்பது இருசொல் வாக்கியம்தான். மாறாக என்னையும் உங்களையும் தாயின் வயிற்றிலிருக்கும் போதே கண்டு கொண்டவரின் கண்களிலோ விலையேறப்பெற்ற பொக்கிஷம். இதன் பெறுமதியும் வெகுமதியும் இவ்வுலக வாழ்வோடு மட்டும் முடிந்துவிடுவதில்லை. நித்திய நித்திய காலங்களாக, மகிமையிலே முடிசூட்டப்பட்டவைகளாக இவைகள் பின்தொடர்ந்து வரப்போகின்ற என்ற பேருண்மை பலபேர்களுக்குத் தெரிவதேயில்லை. கிறிஸ்தவப் பணியின் அழைப்பை ஆபிரகாமிலிருந்து திருக்கோவில் திருஅவையின் இடைநிலை ஊழியன் வரைக்கும் பெற்றுக்கொண்ட புனிதர்களாக நாம் அடைந்திருக்கும் வசதி எவ்வளவு விலையேறப் பெற்றது.

ஆம்! கிறிஸ்தவப் பணியின் அழைப்பு இவ்வுலக வேலைகளின் பல்வேறு கட்டங்களிலும், பல தகுதிகளில் பல வேறுபாடுகளை உடனடியாகக் கண்களுக்கு உணர்த்தி விடுவது போன்றே தோன்றும். இச்செற்றொடர் சற்றே மயக்கமான நிலைக்கு எம்மை இட்டுச்சென்றாலும், விழிப்புடன் சிந்தித்தால் இதில் பல மனத்தெளிவுகள் பலவற்றைப் பெறலாம். இன்றைக்கும் கிறிஸ்தவப் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றும் பல தேவ ஊழியர்கள், மனிதர்களினால் செய்யப்படும், சொல்லப்படும் அவதூறு நிறைந்த, கொடுமைகள் நிறைந்த செய்கைகள் கண்டு மனம் உடைந்து போகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிறிஸ்தவப் பணியில் கிறிஸ்துவின் பெயரால் ஊழியர்கள் அனுபவிக்கும் நிந்தைகள் தான் எத்தனை எத்தனையெனக் காண்கின்றோம். ஏன் இப்படி? பக்தனாகிய பவுல் அடிகளார் இவை பற்றி விபரிக்கின்ற வேதனைப்படுகின்ற நிருபங்களின் வாக்கிய எண்ணிக்கைகள் அதிகம். ஆனாலும் எந்தவொரு கிறிஸ்தவனும் உண்மையாக அவருக்கு பணிசெய்கின்றபோது ஒரு கட்டத்திற்கு அப்பால் கிறிஸ்து மகா உயர்வைக் கட்டளையிடுகிறார் என்பது தெளிவு. "சிறிய காரியங்களில் உண்மையாக இருப்போரைப் பரலோகம் சிறியவராக இருக்க அனுமதிக்காது" எனச் செப்பிய 'வில்லியம் பாக்ளே' என்ற பக்திமானின் கூற்று எவ்வளவு உண்மையானது. 'ஆரம்பம் அற்பமானாலும் முடிவோ சம்பூரணமாக' இருக்குமென வேதாகமம் தீர்க்கமாக எடுத்துரைப்பது எத்தனை உண்மை!

'டேவிட் லிவிங்ஸ்ரன்' எனப்பெயர் கொண்ட ஒரு வெள்ளைக்கார மிஷனறி ஆபிரிக்க நாடுகளில் நாற்பதாண்டுகள் ஊழியப்பணிகள் செய்து அங்கேயே மரித்தார். உயிரற்ற சரீரத்தை பிரித்தானிய அரசு கேட்டபோது, ஆபிரிக்க நாடுகள் தர மறுத்துவிட்டன. ஏனெனில் இவர் எங்கள் சொத்து என்றன! பிரித்தானிய சாம்ராஜ்யமோ, இல்லை அவர் எங்கள் சொத்து என்றது. கடுமையான தர்க்கத்தின் பின்னர் இரு கண்ட நாடுகளும் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தன. இதன்படி மிஷனறி டேவிட் லிவிங்ஸ்ரனின் இருதயம் அவர் உடலிலிருந்து அகற்றப்பட்டு ஆபிரிக்க மண்ணில் புதைக்கப்பட்டது. வெற்று சரீரமோ பிரித்தானியாவின் ராஜபிரபுக்கள் புடை சூழ ராஜவீதியில் பவனி வந்தபோது கூட்டத்திலிருந்த ஒரு மனிதர் "ஓ...டேவிட்...ஓ...டேவிட்" எனப்புலம்பி அழுதானாம். ஏனென்று பிறர் கேட்டபொழுது "இருவரும் ஒன்றாகவே பயின்றோம், இருவருக்கும் வைத்திய வேலைவாய்ப்பும் கிடைத்தது ஆனால் கலாசாலையில் மிஷனறி அழைப்புவந்தபோது அவன் எழுந்து நின்றான். நான் அவன் கையைப் பிடித்து இழுத்து அடக்கிவிட எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. இன்றோ ராஜபிரபுக்கள் புடைசூழ, ஒரு ராஜாவைப்போன்று செல்கின்றானே! இன்று நான் பெரிய டாக்டராக இருந்தாலும், இன்று நான் மரித்தாலும் என் வளர்ப்பு நாய்கூட வாலை அசைக்காதே?" எனப் புலம்பி அழுதானாம்!

ஆம் கிறிஸ்தவப்பணியில் எம்மை முழுமையாக ஒப்புவித்துப்பணி செய்யப் புறப்படும் வேளையில் எம்மை உயர்த்துவதற்கும், மகிமையிலே பொற்கீரிடத்தினால் முடிசூட்டப்படவும், அவரே தமது சிங்காசனத்திலிருந்து எழுந்து நின்று மகிமை செய்யவும் ஆயத்தமுள்ளவராக இருக்கிறார். "தேவனாலே நாம் எண்ணப்பட்டவர்களாகும் போது, உலகிலேயே எண்ணப்பட்டவர்களில் ஒருவராக உயர்கிறோம்" என்ற பக்தனாகிய பெஞ்சமின் பிராங்கிளின் அவர்களின் பொன்வார்த்தைகள் அச்சாகப் பொருந்தி வருவதையிட்டு கர்த்தரை இவ்விடம் நன்றியுடன் நினைத்துத் துதிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஆயின் கிறிஸ்தவப் பணியென்ற முக்கோண ஆய்வரங்கில், ஒரு முனையின் பகுதி கூர் பார்க்கப்பட, மறுபகுதியில் கிறிஸ்தவப்பணியில் அபிவிருத்தியெனும் சொல் சேர்க்கப்பட்டு விடுகிறது. "systematic Theology" எனும் அற்புதமான நூலினை உலகிற்குத் தந்த "Luis Berkhof" எனப் பெயர் கொண்ட இறை ஊழியன் கிறிஸ்தவப் பணியில் அபிவிருத்தி எனும் சொல்லின் ஆழம்பற்றி மிகவும் ஞானமான முறையில் விளக்கம் தருகிறார். அதாவது கிறிஸ்துவினால் இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகத் தம் சீடர்களுக்குக் கொடுத்த அறிவுறுத்தல்கள் பலவற்றிலே மனித சமூகத்தின் தேவைகள் பற்றியும், அவைகள் சந்திக்கப்பட வேண்டும் என்ற அக்கறையும் கொண்டவராகவே காணப்படுகின்றார். அல்லது செயற்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(லூக்கா 6:35, சங்கீதம் 37:26, மத்தேயு 5:45) என்பவற்றில் சிநேகிதம் மட்டுமல்ல தன்னுடைய பிதா துரோகிகளுக்கும், நன்றியறியாதவர்களுக்கும் கூட நன்மை செய்கின்ற பண்பு கொண்டவராகக் காணப்படுவதை சுட்டிக் காட்டுகிறார். கிறிஸ்துவின் ஊழிய நாட்களில் அவரால் கூறப்பட்ட அநேக உவமைகளை அவதானித்துப் பார்த்தால், கூறப்பட்ட அனைத்து உவமைகளிலும் ஒருவிதமான செயற்பாட்டு அபிவிருத்திக் குறிகாட்டியொன்று மறைந்து இருப்பதை நன்கு உணரலாம். உதாரணங்களாகக் காண்பிக்கப் புறப்பட்டால் அநேக செயல் சார்ந்த முயற்சிகளைக் காண்பிக்கலாம். மத்தேயு 13:03ல் வருகிற விதைக்கிறவன் உவமை பற்றிய காரியத்தில் "விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்....." என்றே ஆரம்பிக்கிறது. அதாவது வளர்ச்சியின் ஒரு கட்டம் அல்லது தேவைகள் சந்திக்கப்படுவதின் ஒரு செயற்பாட்டுக் கட்டமே இங்கு காண்பிக்கப்படுகிறது.

மாற்குவின் புத்தகம் 02:05ன் வசனத்தில் மற்றொரு செயல் சார்ந்த அபிவிருத்தி முயற்சியொன்று முளைவிடுகிறது. திமிர்வாத நோய்க்கு ஆளாக்கப்பட்டவன் ஒரு புறமிருக்க, கிறிஸ்து இச்செயலைக் கண்டு, அவன் பாவங்களை மன்னித்து அவனைக் குணப்படுத்துகிறார் என்பதனை முதலில் கண்டு கொண்ண வேண்டும். ஆம்! "அவர்கள் விசுவாசத்தை அவர் கண்டு" என்றே ஆவியானவரால் எழுதப்படுகின்றது. அதாவது வீட்டினைத் திறப்பாக்கித் திறந்து, இறங்கின செயல் கண்டு, அதாவது முயற்சி எனும் அபிவிருத்தி கண்டு அவனைக் குணமாக்குகிறார். மாற்கு 04:31ல் கடுகுவிதையின் உவமையில் காண்பிக்கப்படும் செயல் சார்ந்த அபிவிருத்தி எதுவென ஆராய்ந்தால்......." கடுகுவிதை விதைக்கப்பட்டே, பிற்பாடு பெரு விருட்ஷமாக வளர்ந்து, ஆகாயத்துப் பறவைகள் வந்து தங்கிட வழிபிறக்கிறது. இங்கு நாம் காணும் "விதைத்தல்" அபிவிருத்தி சார்ந்த ஒரு செயல்பாடு என்பது மறுபடி பிறந்த அனைத்துக் கிறிஸ்தவ உள்ளங்களும் இலகுவில் கண்டுகொள்ளும் ஒரு நிலையாகும்.

ஆயின் கிறிஸ்துவே மனித அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு கால்கோளிட்ட முதல் பெரு இரட்சகராவார். சரீரம் பசித்தபோது முந்தி அவர்களுக்குரிய முதன்மைத் தேவையினைப் பூர்த்தி செய்ய முற்படுமாறே தன் சீடர்களை விநயமாகக் கேட்டுக் கொள்கிறார். சரீரமோ அல்லது அவர் தம் சமூகமோ முதலில் திருப்தியடையும் பட்சத்தில் உள்ளார்ந்த ஆத்துமாவிலே மாற்றம் ஏற்படும் என்பது ஞானி எமர்சனின் வாதமாகும்.

இவ்வார்த்தைக்கு வலு சேர்க்கும் வகையில் இன்னுமோர் குறிப்புரை யாதெனில், பரிசுத்த வேதாகமத்தில் மாத்திரமல்ல புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் எனப் போற்றப்படுகின்றவர்களாக எம்மிடையே வாழ்ந்து அவர்தம் அபிவிருத்திப் பணிக்கென தம்மையே தியாகச் சுடர்களாக எரித்து, எரித்து , இன்றும் வானத்தில் சுடர்களாக பிரகாசிக்கின்ற எம்முடைய தேவ ஊழியர்களும் இங்கு போற்றத்தக்கவர்களாக கணிக்கப்படுகிறார்கள்.

History of Methodist Church in Sri LAnka என்ற பொன்போன்ற நூலில் வருகிற ஒரு சம்பவத்தை விளக்குகின்ற சகோதரி அற்கின்ஸ் (Sister Athins) என்ற பெண் மிஷனறி 1847ம் ஆண்டு காலப்பகுதிகளில் மட்டக்களப்பின் கிராமப்பகுதிகளில் (தற்போது நகர்பகுதி) தாம் ஊழியம் செய்த நாட்களில் தம்மிடம் வந்த பெண் அனைவரும் மேலாடையின்றிக் காணப்படவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் தம்முடைய குழுவினர் அவர்களுக்கு மேலாடைகளை தைத்துக்கொடுத்து, அவற்றின் அவசியம் பற்றி விளக்கிக் கூறியதற்குப் பிற்பாடே, கல்வியின் அவசியத்தை விளக்கியதாகக் குறிப்பிடுவது சிறப்பான உதாரணமாகும். இலங்கையின் கரையோர வாழ் கிறிஸ்தவர்கள் கல்விக்குறிகாட்டியிலே இன்று சிறப்புற்று விளங்கவும், இடறிவிழுந்தால் ஒரு பாடசாலையென மேம்பட்டு நிற்கவும் அதிபிரதான காரணிகளாக அமைபவை மிஷனறிகளின் அபிவிருத்திப் பணிகளே.

இப்பணிகளில் இன்னுமோர் பக்கமும் உண்டு. இன்றும் ஒரு சில மனிதர்களினால் சமயமாற்றம் பற்றியும், காசு கொடுத்து மாற்றுகிறார்கள் என்றும் பேசுகின்றவர்கள் உண்டு. பரிசுத்த வேதாகமம் கூறுகின்றபடி "பட்டயக் கருக்கள் போன்று பேசுகின்றவர்களும் உண்டு." ஆயினும் தம்மையே தூயக பலிகளாக ஈந்து, கிறிஸ்தவப் பணிசெய்த இந்தத் தேவதாசர்கள் தாம் சார்ந்த சமயத்தை ஒருபோதும் பிறர்மீது திணிப்பவர்களாகத், தம்மை ஒரு போதும் இனம் காட்டிக் கொண்டதேயில்லை. இன்றைக்கும் மட்டக்களப்பு வாழ் மெதடிஸ்த மக்களினால் "1847 முதல் 1997ம் ஆண்டுவரையான மெதடிஸ்த திரு அவைச்சரித்திரம்" என்ற நூலின் 14ம் பக்கத்தின் 03ம் பந்தியின் இறுதிப் பந்தியிலே அந்த நூலின் ஆசிரியராக உள்ளவர் அடிக்கோட்டுப் பொறித்திருக்கின்ற சில வசனங்களை அப்படியே இவ்விடத்தில் தருவது சிறப்புத் தருமெனத் தாழ்மையுடன் சிந்திக்கிறேன். "1847ல் அருட்திரு.றால்வ் ஸறொட் **(Ralf Stod)** என்ற இறை மிஷனறி எல்லா நேரத்திலும் ஞானஸ்ஞானம் கொடுத்து மக்கள் யாவரையும் சேர்க்க முற்பட்டவரல்ல. மாறாகத் தன் ஊழிய வருடத்திலிருந்து இருபத்து நான்கு ஆண்டுகள் கழிந்த பின்னரே தொடர்ந்தும் கிறிஸ்துவுக்குள் நிலைத்து வாழ்ந்த ஐம்பது பேருக்கே ஞானஸ்ஞானம் கொடுத்து, நகர்ப் பகுதிகளிலே நிரந்தரத் தூண்களாக்கினார்" என்பதான குறிப்புரையை ஒருவித பெருமிதத்துடனேயே நூற்று அறுபத்து நான்கு ஆண்டுகளுக்குப் பின்னராக எழுதுகோல் கொண்டு சமர்ப்பிக்கிறேன்.

ஆக இதுவரை கண்டு தொகுத்த இரு முத்துக்களும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்தறிய முடியாத அளவிற்கு கருத்தெனும் ஒளி வீசிப்பிரகாசிக்க, எது முதன்மையானது எனப் பகுக்க முடியாத அளவிற்கு சுடரொளிப்பட்டயங்களாக செயற்படுகின்றதேயென எமது புருவங்களை உயர்த்திப் பேசவைக்கும் அதே சந்தர்ப்பதில், எமது முக்கோண வடிவு கொண்ட ஆய்வுப் பொறியானது மறுமுனை நோக்கி நகர ஆரம்பிக்கின்றது. சமஅளவுத்தூரமும், குறிப்பிட்ட அளவுப் பாகையும் கொண்ட இந்த முக்கோணத்தின் மூன்றாம் முனையானது "ஆன்மீகம்" என்ற அருமையான சொல்லினைச் சுட்டி நிற்கின்றது. இதுவரை கண்ட இரு கருத்துப் பிரிவுகளிலும் பார்க்க மென்மையானது. மிகவும் பரிசுத்தமானது, கிறிஸ்தவப் பணியினையும், இதனோடு கூடப்பிறந்த அபிவிருத்தியையும் மிகத் தூய்மையான உள்ளத்துடனே செயற்படுத்தி, அதன் பாதையிலே தொடர்ந்து பயணம் செய்யும் போது, சேர்ந்து கொள்ளும் சிறந்த நிழல் நண்பனே ஆன்மீகமாகும்.

ஆம்! இந்த நிழல் நண்பர் என்பவர் எம்முடன் இறுதிக்கணம் வரை பயணிப்பவர். மாற்றப்பட முடியாதவர். இதில் கவனிக்கப்பட வேண்டிய அதிமுக்கிய விடயம் எதுவெனில் கிறிஸ்தவப்பணியெனும் ஒரு பக்க முக்கோணமும், அபிவிருத்தியெனும் மறுபக்க கோணமும் தாங்குகின்ற அடி அத்திபாரங்களாகத் தமது மகுட உச்சியிலே பொறித்துத் தாங்குகின்ற உச்சி நட்சத்திரமாக அமைவது இந்த ஆன்மீகமே என்பது வெள்ளிடை மலையான உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! இது வெறும் கிரியைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டிருப்பின் ஒருபோதும் நிலைத்திராது. ஆன்மீக ரீதியாகக் கட்டப்பட வேண்டும். அப்போதே வெறும் சடங்காச்சாரங்களையும் தாண்டி, பரலோகின் வாசல் கதவுகளை அவை திறக்க வைக்கும். இந்தியாவில் பணியாற்றிய ஒரு மனிதர், முஸ்லிம் மனிதன் ஒருவனைத் தன்னுடைய சமையல்காரனாக வைத்திருந்தார். ஒரு நாள் அவன் அந்த ஊழியக்காரரிடம் "நான் கிறிஸ்தவனாக விரும்புகிறேன், எனவே எனக்கு ஞானஸ்ஞானம் கொடுங்கள்" என்றான். ஊழியக்காரரும் ஏதோ ஊழிய அமுக்கத்தில் இருந்தவர். அவசரமாக அவனது தலையில் சிறிது நீரை ஊற்றி "இனிமேல் அப்துல்ல அல்ல, இன்றிலிருந்து நீ தாவீது" என்றார். அத்துடன் தொடர்ந்து "கிறிஸ்தவனாகிய நீ இனிமேல் வெள்ளிக் கிழமைகளில் ஆட்டிறைச்சி சமைக்கப் கூடாது. மீன் மட்டுமே சமைக்கலாம்" என்பதான கண்டிப்பான உத்தரவையும் கொடுத்தார். சில நாட்களின் பின் ஒருநாள் சமையல்காரனின் உறவினர்கள் வீட்டிற்கு வர, அவர்களுக்கு ஆட்டிறைச்சி சமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஒருவாறு சமாளித்து சமைக்க முற்பட்ட வேளையில், அதன் கறிச்சுவையின் மணமறிந்த ஊழியக்காரர் " தாவீது,.... வெள்ளிக்கிழமைகளில் மீன் மட்டும் தான் சமைக்கலாமென கூறியிருக்கிறேனே" எனக் கேட்க சமையல்காரனும் "நான் ஆட்டிறைச்சியை அல்ல மீனைத்தான் சமைக்கிறேன்" என்றான். விளைவு? இருவருக்குமிடையில் வாக்குவாதம் உண்டாகிறது. கடைசியாக சமையல்காரன் "நீங்கள் மட்டும் ஞானி என எண்ண வேண்டாம், சில நாட்களுக்கு முன் நீங்கள் என் தலையில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றிவிட்டு நீ இனி அப்துல்லா அல்ல தாவீது எனக் கூறினீர்கள். அதே விதமாக நானும் ஆட்டிறைச்சியின் மீது சிறிது நீரை ஊற்றிவிட்டு, நீ இனிமேல் ஆட்டிறைச்சியல்ல, மீன் எனக் கூறினேன்" என்றான்.

ஆம்! வெளிப்படையான பெயர் மாற்றம் அல்லது வெறும் சடங்காச்சாரசெயல் என்பது மனிதனில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தாது. மனித சமூகம் தன் பாவங்களிலிருந்து மனம்திரும்பி உண்மையான ஆன்மீகத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். உள்ளான ஆன்மீகத்தில் ஏற்படக்கூடிய மாற்றமே ஒருவனை அல்லது ஒருத்தியை உண்மையான கிறிஸ்தவர்களாக மாற்றும் என்பதை நாம் மறக்கவே கூடாது. "ஆன்மீக மனிதன் தன் வாழ்வில் எதிர்கொள்ளும் வியப்புக்கள் இயல்புகளுமல்ல, விபரீதங்களுமல்ல, மாறாக அவை தேவனால் வடிவமைக்கப்பட்டவை" என அற்புதவரிகள் கூறும் கருத்துக்களுக்குச் சொந்தக்காரரான "மோட்சப் பிரயாணி" எனும் அற்புத நூலின் ஆசிரியரான "ஜோன் பனியன்" அவர்கள் இது பற்றி விபரிக்கையில், "வெறும் வார்த்தைகளினால் சோடிக்கப்பட்டவைகளில் ஆழமும் தெரியாது, அழகும் தெரியாது" என்கிறார். மாறாக இவைகளை எமது வாழ்வின் பாதைகளில் அனுபவிக்க வேண்டும் என்கிறார்.

கிறிஸ்தவப் பாதையில் கிறிஸ்தவப்பணியில் இறங்கிச் சேவையாற்றுவதே பெரும் சவால் எனில், அதனூடாக அபிவிருத்தி எனும் சொல்லுக்கு ஊடாக நகர்ந்து செல்வது அதனைவிடச் சவாலாகும். வெளிப்படையான அல்லது திறந்தவெளி மனதுடன் பேசினால், அதிகரித்த சனத்தொகையும், விபரிக்க முடியாதளவு தேவைகளும் பூதாகாரமாக எம்முன் எழும்பித் தனது கோரங்களினால் தேவை, தேவையென ஆர்ப்பரிக்கும் போது இரத்தமும், சதையும் கொண்ட சாதாரண மனித வர்க்கத்தினால் யாது செய்திட இயலும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் விடிந்து சந்திக்கும் தேவைகள் பற்றி பெற்றோர்கள் தமக்குள் குழைந்து குழைந்து கொண்டே, வெறித்த விழிப்பார்வையுடன், இலக்கற்றவர்களாக வாழ்கின்றபோது, அவர்களுக்கு ஆன்மீகத்தைப் பற்றி சிந்தனையே இருக்காது. மாறாக சந்தேகச்செயலே தலையெடுக்கும். இக்கட்டம் இவ்வுலகினைச் சிதைக்க ஆவலுடன் காத்திருக்கின்ற சத்துருவாகிய பிசாசுக்கு கொண்டாட்டமாகப் போய்விடும். இதன் விளைவு? எமது முக்கோண ஆய்வின் கிறிஸ்தவப் பணியும் சிதைக்கப்படும், அபிவிருத்தியும் இல்லாது போகும்.

ஆயின் ஆன்மீக வெற்றி இலக்கை எவ்வாறு அடைய முடியும்? அன்பர் இயேசுவின் மனங்குளிர எவ்வாறு எம்மைத் தத்தம் செய்ய முடியும்? பரிசுத்த யோவானின் நிருபத்திலே "பிரியமானவனே உன் ஆத்துமா வாழ்கிறது போல, நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். (3 யோவான் 1:2) என்று எழுதியுள்ளது. உள்ளத்தில் நிறைவு இல்லாவிட்டால், மற்ற எல்லாம் நிறைவாக இருந்தும் பயனில்லை.

நித்திய நித்தியமாக வாழப் போகும் நமது ஆத்துமா சுகமாக வாழாவிட்டால், அநித்திய இவ்வுலகின் அழிந்துபோகும் உலகப்பொருட்களால் கிடைக்கக் கூடிய நிலையற்ற நிம்மதியினாலும், திருப்தியினாலும் பலன் ஏதுமேயில்லை. உலக இன்பங்களையும், ஆசியையும் பெற்று வாழ எத்தனிக்கின்றோம். இந்தவகையில் இம்மாந்தரின் ஆத்துமாவையும் வாழவைக்க முடியாது. இவர்தம் ஆத்துமா சுகமாக வாழவேண்டும். அதுதான் முக்கியம். அப்போது தான் கிறிஸ்தவ இலக்கு வெற்றியடைய முடியும். வழியுண்டா? வழியுண்டு. மிகத் துல்லியமான ஜீவப் பேரின்ப வழியுண்டு.

ஆம் எமது ஆத்துமா வாழ வேண்டுமென்பதற்காகவே கிறிஸ்து கல்வாரிச்சிலுவையில் தமது ஜீவனை ஈந்து, நமக்குப் புது ஆத்துமாவைத் ஈந்தார். அவர் எமக்காகவே அந்த ஏகபலியைச் செலுத்தினார் என்று விசுவாசித்து, அவரது சரீரத்திலும், இரத்திலும் பங்கேற்று உணர்வடையும், உண்மையான உணர்வைப் பெறும் ஒருவரால் இந்த மாபெரும் வெற்றி இலக்கைப் பெற்று மேன்மையடைய முடியும். ஆம்! இதுவரை கண்ட மிகப்பெரும் இந்த ஆய்வின் முடிவுரைப் பகுதிக்கு இறங்க தற்போது ஆயத்தமாகி விட்டோம். ஏனெனில், கிறிஸ்தவப்பணியாகட்டும், அதனூடாக நடைபெறும் அபிவிருத்தியாகட்டும் , இரண்டுமே வெற்றிபெற வேண்டுமாயின் "ஆத்துமா உணர்வு" நடைபெற வேண்டும். மிகவும் ஞானத்தோடு இந்த ஆய்வுத் தலைப்பைத் தெரிவு செய்தவர்களுக்காக கர்த்தரை நான் துதிக்கிறேன்.

ஏனெனில் ஒரு மல்லிகைச்சரத்தை மென்மையாக, தொடராகத் தொடுக்கப் போவதைப் போன்று ஒன்றன் பின் ஒன்றாக கிறிஸ்தவப் பணியும், அபிவிருத்திப் பணியும் ஒருசேர இயங்கும் போது, அது முடிவில் ஆன்மீகப் பணியைத் தொட்டுவிடுமென்பதில் சந்தேகமில்லை. "வாய் பேசுவதை விட வாழ்கை பேச வேண்டுமென" புனித அகஸ்டின் அடிகள் "ஞானமார்க்கம்" என்ற தனது நூலில் விளக்கியுள்ளார். ஏனெனில் "கிறிஸ்து" "02ம் வருகை" "நியாயத் தீர்ப்பு" என விளங்குவதிலும் பார்க்க, மக்கள் தம் வாழ்வு மேன்மையடைய எமது கிறிஸ்தவப் பணியின் ஊடான அபிவிருத்திச்செயல் முறையில் காண்பிக்கும் போது, ஆன்மீகம் உணர்வடைகிறது. இதனால் கிறிஸ்தவம் மேன்மையடையும் செழிக்கும், விசாலமடையும், நம் அருள்நாதரும் மனம் குளிர்ந்து போவார். என்ன செய்யப் போகின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று செய்வோம். கை கோர்த்துப் பயணிக்க, இந்த நூற்றாண்டு விழாவினைக் காணச்செய்த நமது நேசரைக் கண்கள் பனிக்கத் துதித்தபடியே, புத்துணர்வுடன், புதுப்பொலிவு பெற வாக்குக் கொடுப்போம்! "ஆத்துமா ஆதாயம் செய்கின்றவனோ மிகுந்த ஞானவான்" என்ற புனித மொழிகளுக்குச் சொந்தக்காரர் ஆவோம்.

அதோ திருக்கோவிலின் திருமணி ஒலிக்கின்றது. யாவரும் ஒன்றிணைந்து "என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேனே ஏற்றுக் கொண்டருளுமே தேவா...." எனக் கண்ணீரோடு பாட ஆரம்பிக்கிறார்கள் மாறாத கிறிஸ்து தாமே சேகர மக்கள் யாவரையும் நிறைவாக ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

(2020 சொற்கள்)

ஆய்வுக்கு உதவிய நூல்கள்:


01. Sytematic Theology by Louis Berkhof

02. History of Methodist church in Sri Lanka by Sister Atkins.

03. ஆபிரிக்காவின் தேவமனிதர்
டேவிட் லிவிங்ஸ்ரன் - எமிலி கத்தரின்

04. 1847 - 1997 வரையான மெதடிஸ்த திருஅவைச் சரித்திரம் -
யோசுவா தானியேல்

05. சில சம்பவங்களில் சில சத்தியங்கள்- M.S. வஸந்தகுமார்



திரு.சுரேந்திரன் இராசநாயகம்
மெதடிஸ்த திருச்சபை
அமிர்தகழி
மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. திறமைகளை வெளிப்படுத்தும் நிகழ்வு

### திறமை வெளிப்பாடு நிகழ்வு பற்றி

கர்த்தருடைய நாமம் பிரசங்கிக்கப்படும் திருக்கோவில் ஆலயத்தின் 100வது ஆண்டு நிறைவை மகிழ்வோடு நினைவுகூரும் இவ் ஆண்டிலே கர்த்தரின் பல திட்டங்களை அவர் முகாமைக்குருவுக்கூடாக வெளிப்படுத்தினார். அதன்படி ஒரு நிகழ்வான "திறமைவெளிப்பாடு" என்ற நிகழ்வை என் பிரதேசத்தின் சகோதரசபைகளுடன் இணைந்து செயற்படுத்த கர்த்தர் கருணை கூர்ந்தார்.

செல்வி. N.நேமிகா
திருமதி.T.கலைவாணி
செல்வன்.S.நிறோஜன்
திரு.R.W.கமலராஜன்
செல்வி.Y.சுதர்சினி
செல்வி.N.நிறோஜினி

13.5.2011 வெள்ளி மாலை 4.01க்கு ஆரம்பித்து இரவு 9.00 மணிவரையான நிகழ்வில் திருக்கோவில், அக்கரைப்பற்று, குடிநிலம் ஆகிய இடங்களிலுள்ள றோமன் கத்தோலிக்க திருச்சபை, விசுவாசிகள் சபை, மக்கள் சபை தேவ சபை(A.O.G) இணைந்து நின்றது மிகச்சிறப்பாக இருந்தது. அச்சபைகளின் பங்குத்தந்தையார் பாஸ்டர், ஊழியர்கள், குருவானவர் ஆகியோர் கௌரவஅதிதிகளாகவும் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி, வைத்தியஅதிகாரி, கல்விஅதிகாரிகள், வங்கிமுகாமையாளர்கள், உக்கிராணக்காரர் போன்றோர் சிறப்பு அதிதிகளாகவும் முன்னாள் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவைத்தலைவர் அருட்திரு.S.S. ஞானராஜா அவர்கள் நிகழ்வின் பிரதம அதிதியாகவும் அழைக்கப்பட்டிருந்தார். நிகழ்விற்கு சேகரமுகாமைக்குரு அருட்திரு.S.ரவிமுருகுப்பிள்ளை தலைமை தாங்கினார். திருக்கோவில் சேகர மெதடிஸ்தசபைகளுடன் சகோதரசபைகள் அனைத்தும் இறைவன் தந்த தாலந்துகளை இறைவனின் நாம மகிமைக்கு முன்வைக்க இன்முகத்துடன் மனவிருப்புடன் முன்வந்து பாடல், அபிநயப்பாடல், பரதநாட்டியம், மேலைத்தேய, கிராமிய நடனம், கோலாட்டம், தாளலயம், நாடகம் போன்ற நிகழ்வுகள் மூலம் முன்வைத்தனர்.

திறமைவெளிப்பாட்டு நிகழ்வு சிறப்புற அமைய குழுஉறுப்பினர்களின் கூட்டுமுயற்சியுடன் வாலிபர்சங்கம், பெண்கள்சங்கம், ஆண்கள்சங்கம், ஞாயிறுபாடசாலை ஆகியோரின் பங்களிப்பு திருப்தியாகக் கிடைத்தது. சகோதர திருச்சபை குருவானவர்கள் ஒன்றிணைந்து ஒளியேற்றலின்போது மேடை மீது நின்ற காட்சி 133ம் சங்கீதத்தை அனுபவிக்க வாய்ப்பளித்தது. மற்றும் திருக்கோவில் கிராமமே திரண்டு வந்து ஆரம்பம்முதல் நிறைவு வரை நிகழ்வுகளை ரசித்து அன்றையநாளை மகிழ்வான நாளாகக் கழித்தது குறிப்பிடதக்கது. ஒட்டுமொத்தமாக நோக்கும்போது சகலநிகழ்வுகளினூடாகவும் இந்நிகழ்வு எம்மைப்படைத்துப் பராமரித்து வரும் பரமதந்தையின் அனாதிதிட்டம் என்பதை புரியவைத்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

திருக்கோவில் மெதடிஸ்த ஆலயத்தின் நூற்றாண்டு விழா திருச்சபை, சகோதர திருச்சபைகள் மற்றும் சமுதாயம் ஆகிய மூன்று கருப்பொருளில் கொண்டாடப்பட்டது. அதன் ஓர் அங்கமாக திருச்சபையின் சமூதாய நோக்கு எனும் கருப்பொருளில் மென்பந்துக் கிரிக்கெற் சுற்றுப்போட்டி மே மாதம் 31ம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 5ம் திகதி வரை திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டது. இச்சுற்றுப் போட்டியில் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 18 அணிகள் பங்குபற்றின. இதில் இறுதிப்போட்டியில் திருக்கோவில் உதயசூரியன் அணியும், தம்பிலுவில் ரேஞ்சஸ் அணியும் மோதியதுடன் தம்பிலுவில் ரேஞ்சஸ் அணி வெற்றிபெற்றது.

பங்குபற்றிய அனைத்து அணிகளுக்கும் கிரிக்கெற் மட்டைகள் வழங்கப்பட்டதுடன் இறுதிப் போட்டியில் பங்குபற்றிய இரு அணிகளுக்கும் சீருடையும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டது. இச்சுற்றுப்போட்டிக்கு கல்முனை சேகர முகாமைக்குரு அருள்திரு.J.W.யோகராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தமை விஷேட அம்சமாகும்.





மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இறுதிச் சுற்றுக்கு தெரிவுசெய்யப்பட்ட அணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறை வினா-விடை புதிர்ப் போட்டி

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருக்கோவில் சேகர எல்லைக்குள் உள்ள சகோதர திருச்சபைகளையும் இணைத்து திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையால் வேதாகம புதிர்ப் போட்டி 2011.06.11 அன்று நடைபெற்றது. இப்போட்டியானது கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, உயர் பிரிவு எனும் மூன்று பிரிவுகளில் நல்லதொரு முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கி நடாத்தப்பட்டது.

இதனூடாக எமது சிறார்களும், வாலிபர்களும் வேதாகம அறிவிலும், ஆன்மீக ரீதியிலும் மேலும் வளர்ச்சி அடைந்துள்ளனர். அதுமட்டுமல்ல இப்பகுதியிலுள்ள சகோரதர திருச்சபைகளுடன் ஐக்கியத்தையும், சகோதர உணர்வையும் கட்டியெழுப்புவதாக இச்செயற்பாடு அமைந்து இருந்தது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அருள்திரு.யோசப் உதயகுமார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நடுவர்களாக அயல் சேகரங்களான கோமாரி, கல்முனை சேகரங்களில் இருந்து ஞாயிறு பாடசாலை ஆசிரியர்கள் பங்களிப்பு செய்தனர். பிள்ளைகள் மிகவும் ஆர்வமாக செயற்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

இப்போட்டியில் கலந்து கொண்டு கனிஸ்ட பிரிவில் அக்கரைப்பற்று இத்தியடி கத்தோலிக்க திருச்சபை மாணவர்கள் வெற்றிக் கிண்ணங்களையும், சிரேஷ்ட பிரிவில் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை மாணவர்கள் வெற்றிக கிண்ணங்களையும், உயர் பிரிவில் திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை மாணவர்கள் வெற்றிக கிண்ணங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாறான வேதாகமப் புதிர்ப்போட்டி சிறுவர்களும், வாலிபர்களும் ஆன்மீகத்தில் வளர எப்போதும் உறுதுணையாக இருக்கும். இந்த வாய்ப்பைத் தந்த எம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவுக்கே எல்லா நன்றிகளும் புகழும் என்றும் உரித்தாகட்டும்.

**திருமறை வினாவிடைப் புதிர்ப் போட்டி குழுவினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனிஸ்ட பிரிவில் வெற்றிபெற்ற இத்தியடி கத்தோலிக்க திருச்சபை மாணவர்கள்



சிரேஷ்ட பிரிவில் வெற்றிபெற்ற திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை மாணவர்கள்



உயர் பிரிவில் வெற்றிபெற்ற திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலைப் பந்தாட்டப் போட்டி

திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வலைப்பந்தாட்ட போட்டி திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபையால் 2011.06.24 அன்று தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. "சகோதர சிநேகம் நிலைத்திருக்கக் கடவது" எனும் கருப்பொருளுக்கமைய திருச்சபையோடு மாத்திரம் திருப்பணி நின்றுவிடாது சமூகத்தையும் திருச்சபையோடு இணைக்கும் முயற்சியில் இவ்வலைப்பந்தாட்ட போட்டியானது திருக்கோவில் வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் வலைப்பந்தாட்ட மகளிர் அணி மாணவிகளுக்கிடையில் நடைபெற்றது. பாடசாலையில் மாணவிகள் மிகவும் ஆர்வமாகவும், விருப்பமாகவும் கலந்து கொண்டனர்.

பாடசாலை ஆசிரியர்களும், திருச்சபைக் குருவானவரும், மக்களும், மற்றும் வலைப்பந்தாட்ட நிகழ்ச்சிக் குழுவினரும் இதில் முழுமூச்சாக ஈடுபட்டு இந்நிகழ்வானது சிறப்பாக நடைபெற ஒத்தாசை வழங்கினார்கள். திருச்சபையானது இதுபோன்று சமூகத்தையும் இணைத்து பணியாற்றுவது மிகவும் போற்றப்படத்தக்கது என எங்களது நிகழ்வின் பிரதம அதிதியும் தனது உரையில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து அணிகளுக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டதுடன், இறுதிச்சுற்றுப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட இரு அணிகளுக்கும் கிண்ணமும், நினைவுப்பரிசுகளும் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாது இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த அதிதிகளுக்கும், நடுவர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இயேசுக் கிறிஸ்து எங்களுடன் கூட இருந்து வழிநடத்தினார். அவருக்கே அனைத்து நன்றிகளும் துதியும், கனமும், மகிமையும் உண்டாவதாக.

வரலைப்பந்தாட்ட குழுவினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலைப்பந்தாட்ட இறுதிச்சுற்றுப்போட்டிக்கு
கலந்து கொண்ட அணிகள்

நினைவுச்சின்னம் (Mag) குழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரநடுகைக் குழு



பெயர்ப் பலகைக் குழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசரிப்புக்குழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

